தர்மசக்கரம்



ரௌத்திரி ௵ மார்கழி ௴ சக்கரம் 29 ஆரம் 12

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை–639 115, திருச்சி ஜில்லா.

திருநெல்வேலி ஜில்லா

திருச்செந்தூரில் அந்தர்யோகம்

17 & 18—1—81 சனி, ஞாயிறு

1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் தேதி சனி, 18ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை ஆகிய இரண்டு நாட்களிலும் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்கள்

தலைமையில் திருச்செந்தூர் ஆதித்தனுர் கல்யாண மண்டபத்தில் அந்தர்யோகம் நடை பெறும்.

அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள், உணவு, ஜாகைக்காக நபர் ஒன்றுக்கு ரூ.16-00ஐ ஜனவரி மாதம் 15ஆம் தேதிக்குள் திரு. S.K.S. ராஜமணி நாடார், 65c, தெற்கு ராஜவீதி, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம் என்ற விலாசத்திற்கு மணியார்டர் மூலமோ, நேரிலோ செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பணம் அனுப்பிக் கலந்துகொள்ளாத அன்பர்களுக்குத் தொகை திருப்பித்தர இயலாது. தாய்மார்களுக்குத் தங்க தனி இடவசதி உண்டு. ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். 16—1—81 வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்குள் திருச்செந்தூர் ஆதித்தனுர் கல்யாண மண்டபத்திற்கு அன்பர்கள் வந்து சேரவேண்டும்.

18—1—81 அன்று மாலை 5 மணிக்கு அந்தர்யோகம் முடிவுபெறும். தங்கள் சௌகரியத்திற்குத் தேவையான படுக்கை முதலியவற்றைத் தாங்களே கொண்டு வரவேண்டும்.

சாதனை முறை

காலை	மணிமுதல்	மணிவரை	மாலை	மணிமுதல்	மணிவரை
துயில் எழுந்திருத்தல்	5-00		போஜனம், ஓய்வு	12-30	3-00
எல்லாரும் ஒன்றுகூடி நாமஜபம்	5-30	6-00	மாலை உபந்யாசம்	3-00	4-00
ஆசனம், நீராடல் முதலியன	6-00	7-30	தனியாக வாசித்தல்	4-00	4-30
காலை தியானம்	7-30	8-00	பானம், உலாவல், நீராடல் முதலியன	4-30	6-30
சிற்றுண்டி	8-00	9-00	நாமஜபம்	6-30	7-00
காலை உபந்யாசம்	9-00	10-00	தியானம்	7-00	7-30
மௌனம்	10-00	11-00	இரவு போஜனம்	7-30	8-30
பஜனை	11-00	11-45	ஸத் ஸம்பாஷணை	8-30	9-30
கோவில் வழிபாடு	11-45	12-30			

S. K. S. ராஜமணி நாடார், தூத்துக்குடி
காரியதரிசி

ஸதானந்த
காரியதரிசி
ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருச்செந்தூர் அந்தர்யோகத்தில் தபோவன வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும்.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 29	ரௌத்திரி ஹூ மார்கழி மீ	ஆரம் 12

பொருளடக்கம்

சந்தா விவரம்

ஆன்மீகக் கருத்துக்களில் தெளிவுபெற தர்ம சக்கரம் சந்தாதாரராகச் சேர்ந்து பயன்பெறுங்கள்.

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்மசக்கரப் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தாச் செலுத்திப் புதிப்பிக்க வேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் டிபாஸிட் செய்யும் தொகையைப் பேங்கில் இருப்பாக வைத்து அதினின்று கிடைக்கும் வட்டி சந்தாவுக்காக எடுத்துக்கொள்ளப் படுகிறது. இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 12 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பன்னிரண்டு செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் எட்டு அனுப்பலாம். பாக்கி ரூபாய் நான்கையும் பாண்டிச்சேரி S. விசுவநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி'யினின்று ஈடுசெய்து கொள்கிறோம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் அரசாங்கத்தால் 1496 பொது நூலகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அவை அனைத்துக்கும் அன்பர்களின் உதவியால் தர்ம சக்கரம் தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-25 வெளிநாடு வருட சந்தா ரூ. 25-00

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணி

தாயுமான சுவாமி கோயிலில் மூலஸ்தானத்தில் மொசைக் வேலை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அதிவிரைவில் பூர்த்தியாகும். அதன் முன் மண்டபத்தில் சிமிண்ட் தளம் போடும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. மேலே கோபுர வேலையும் நடந்துகொண்டிருக்கிறது. விருந்தினர் விடுதி மாடி கட்டட வேலை நடைபெறுகிறது. கோயில் வேலைகள் பூர்த்தியான பிறகு மூர்த்தி ஆவாஹனம் நடத்துவதாக திட்டமிடப்பட்டிருக்கிறது.

1980 நவம்பர் மாத நன்கொடை விவரம் வருமாறு :

விலாசம்		ரூபாய்
அக்டோபர் மாதம் முடிய நன்கொடை வசூல்		9 92 907
ஸ்ரீ N. R. D. பாலன்	ஸ்ரீ முருகன் எண்டர்பிரைசஸ், ஈரோடு	501
Dr. வேல்முருகன்	அகிலா நர்ஸிங்ஹோம், சாலைரோடு, திருச்சி	201
ஸ்ரீ ராம. பெ. அழகா	மலாக்கா, மலேசியா	201
ஸ்ரீ சி. பழ. சித. பழனியப்ப செட்டியார்	அலோர்ரஸ்டார் ,,	176
ஸ்ரீ மெ. நா. நாராயணன் செட்டியார்	மலாக்கா ,,	101
ஸ்ரீ நா. அ. ராமநாதன் செட்டியார்	கிள்ளான் ,,	101
ஸ்ரீ P. S. RM. அண்ணாமலை செட்டியார்	கோலாலம்பூர்	101
அந்தர்யோகக் கமிட்டியினர்	பெங்களூர்	101
M/s. K. சுப்பையா பிள்ளை & சன்ஸ்	சாலை, திருவனந்தபுரம்	101
ஸ்ரீ உ. பெ. நடராஜ நாடார்	வில்காரன் கோயில் தெரு, விருதுநகர்	101
ஸ்ரீ A. N. B. நாகராஜன்	ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஏஜென்சீஸ், கள்ளக்குறிச்சி	101
ஸ்ரீ K. சுப்ரமணியம்	ராமகிருஷ்ண நகர், பொள்ளாச்சி	101
M/s. R. M. H. கார்ப்பரேஷன் (ஏஜன்சீஸ்)	மேலப்புலிவார் ரோடு, திருச்சி	101
ஸ்ரீ P. A. பழனியப்ப முதலியார்	கைலாசம்பாளையம் புதூர், சேலம்	101
ஸ்ரீ N. ராஜசேகரன்	வடக்கு மாசிவீதி, மதுரை	101
M/s. சேரன் பைனான்ஸ்	கோபால் பில்டிங்ஸ், பொள்ளாச்சி	100
M/s. சரவணா பைனான்ஸ்	,, ,,	100
ஸ்ரீ அப்துல்கரீம்	,,	100
ஸ்ரீமதி மீனாட்சியம்மாள்	பழனி	100
M/s. பாலாஜி ஆட்டோமொபைல்ஸ்	கிழக்கு புலிவார் ரோடு, திருச்சி	100
ஸ்ரீ ரெங்கசாமி	அண்ணா தெரு, உலகநாதபுரம், திருச்சி	100
ஸ்ரீ ஐயப்பன்	கண்ணன் ஆட்டோ ஸ்டோர் ,,	100
ஸ்ரீ ஆறுமுகசாமி	தேவி ஆட்டோ அண்டு டிராக்டர் சென்டர் ,,	100
M/s. சேகர் ஆட்டோமொபைல்ஸ்	கிழக்கு புலிவார் ரோடு ,,	100
M/s. கணேஷ் ஆட்டோமொபைல்ஸ்	பிராமினேட் ரோடு ,,	100
ரூபாய் நூறுக்குக் கீழ்வந்த நன்கொடைகள்		476
	ஆகக் கூடுதல் ரூ.	9 96 573

தர்ம சக்கரம்

சக்கரம் 29 சித்தார்த்தி ௵ தை—ரௌத்திரி ௵ மார்கழி

1980

प्रज्ञानं ब्रह्म

எழுமின் விழிமின் செந்நெறி சார்மின்

ஆசிரியர்
சுவாமி நித்தியானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

பொருளடக்கம்

அந்தர்யோக விவரங்கள்

திருநெல்வேலி ஜில்லா—சிவகிரியில் 21—12—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: நடுநிலைப்பள்ளி (சிவகிரி)

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

மதுரையில் 21—12—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண பிரார்த்தனை ஆலயம் (தினமணி அலுவலக சமீபம்)

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

உணவு வசதி: பகல் உணவுக்கும், மாலை தேநீர்க்கும் ரூ. 1-50 நேரில் செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

வடஆர்காடு ஜில்லா—வேலூரில் 28—12—80 ஞாயிற்றுக்கிழமை

இடம்; ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 4—1—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: விவேகானந்த கல்லூரி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

இராமநாதபுரம் ஜில்லா—சாத்தூரில் 4—1—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: எட்வர்டு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி (பஸ் ஸ்டேண்டுக்கு எதிரில்)

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—விருதுநகரில் 11—1—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பெரிய காளியம்மன் கோவில்

நேரம்: காலை 9-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—அன்னூரில் 11—1—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ மன்னீசுவரர் தேவஸ்தானம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

மதுரை ஜில்லா—உசிலம்பட்டியில் 11—1—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: நாடார் சரஸ்வதி மேல்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

திருச்சி ஜில்லா—கரூரில் 18—1—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பசுபதிபாளையம் விவேகானந்த கல்வி நிலையம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி; பகல் உணவுக்கு ரூ. 1-00 நேரில் காலை 10-00 மணிக்குள் செலுத்திச் சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 29	*ரௌத்திரி ௵ மார்கழி ௴*	*ஆரம் 12*

பிரார்த்தனை

पितासि लोकस्य चराचरस्य त्वमस्य पूज्यश्च गुरुर्गरीयान् ।
न त्वत्समोऽस्त्यभ्यधिकः कुतोऽन्यो लोकत्रयेऽप्यप्रतिमप्रभाव ॥ — श्रीमद्भगवद्गीता

பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய த்வமஸ்ய
பூஜ்யஸ்ச குருர்கரீயான் ।
ந த்வத்ஸமோऽஸ்த்யப்யதிக: குதோऽன்யோ
லோகத்ரயேऽப்யப்ரதிமப்ரபாவ ॥

ஒப்பற்ற பெருமையுடையவரே, தாம் இந்தச் சராசர லோகத்துக்குத் தந்தை; போற்றுதற்குரியவரும் குருவுக்குக் குருவும் தாம் ஆகிறீர். மூவுலகிலும் உமக்கு ஒப்பானவர் இல்லை. உம்மிலும் மிக்கார் ஏது?

— ஸ்ரீமத் பகவத்கீதை

அம்மையே அப்பா ஒப்பு இலா மணியே
அன்பினில் விளைந்த ஆர் அமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவ பதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே.

— திருவாசகம்

அருள் விருந்து

வெறுப்புக்கு நிகரான கேடில்லை.

மானுட அறிவின் மிக்கது சத்தியம்.

பொறுமை வலிவு மிகப்படைத்த ஆயுதமாம்.

சான்றோனுடைய நல்லறிவு யாரையும் துன்பப்படுத்துவதில்லை.

அகங்காரத்தை வென்றவன் அதிவிரைவில் பரத்தில் ஒன்றுபடுகிறான்.

தற்பெருமை அகலுமிடத்துத் தெய்வத்தின் உதவி தானாக வந்தமைகிறது.

அறநெறி பிறழாதிருப்பவனுக்கு ஆண்டவனுடைய திருவருள் நிச்சயமாக வந்தமைகிறது.

அக்ஞானம் தீமைகளுக்கு முதல் காரணம். விவேகம் வருவதற்கேற்பத் தீமைகள் அகலுகின்றன.

ஆத்ம சாதகனொருவன் தன் தேவைக்கு மேற்பட்ட பொருள்களை வைத்திருப்பானானால் அது திருட்டுக்குச் சமமாகிறது.

மனக்குழப்பத்துக்கும் சோர்வுக்கும் போக்கு வரவு உண்டு. அவைகளைச் சாட்சியாகப் பார்ப்பவன் அவைகளை வெல்லுகிறான்.

வெறும் புற ஆச்சாரத்தில் வரம்பு கடந்து கருத்துச் செலுத்துகிறவன் ஆத்ம சாதனத்தில் சிறிதேனும் முன்னேற்றமடைய மாட்டான்.

பழைய பழக்க வழக்கங்களை எடுத்த எடுப்பில் நீக்க முடியாது. சாதனத்தில் தீவிரமாக ஈடுபடும்பொழுது அவைகள் தாமாகத் திருந்தியமைகின்றன.

கட்டாயப்படுத்தியோ, பயமுறுத்தியோ மனிதனை முன்னேறச் செய்ய முடியாது. முன்னேற்றத்தில் அவன் ஆழ்ந்து அகமகிழ்வுடன் ஈடுபடுதல் வேண்டும்.

வெறுப்பினின்று மேன்மையேதும் விளைவதில்லை. துரியோதனன் ஆள் பலத்தை நம்பியிருந்தான். அர்ஜுனன் ஆண்டவன் அருள் பலத்தை நம்பியிருந்தான். யாண்டும் ஆள் பலத்திலும் மிக்கது அருள்பலம்.

சான்றோர்களிடத்தோ, வானளாவும் பர்வதத்தினிடத்தோ, அகன்ற நதியினிடத்தோ, புண்ணிய க்ஷேத்திரத்தினிடத்தோ சாதகனொருவனுடைய மனது ஆழ்ந்து ஈடுபடுமானால் அன்னவன் மேன்மையுறுவது திண்ணம்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் தம்முடைய அறையிலிருந்த சிறிய கட்டிலின்மீது அமர்ந்திருந்தார். பக்தர்கள் சிலர் அவர் முன்னிலையில் தோன்றி வீழ்ந்து வணங்கி விட்டுத் தரையின்மீது அமர்ந்துகொண்டனர். பக்தர் ஒருவர் "ஐயனே, மானுடன் ஒருவன் தன்னுடைய சிற்றறிவைக் கொண்டு கடவுளின் மகிமைகளை அறிந்து கொள்ளக்கூடுமா?"

பரமஹம்சதேவர்: "அறிவில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. சாதாரண அறிவு, உலக விஷயங்களை அறிந்துகொள்வதற்கு மட்டும் உதவுகிறது. கடவுளின் மகிமைகளை அறிந்து கொள்வதற்கு அது உதவாது. மானுடன் ஒருவன் ஆத்மசாதனம் பயிலவேண்டும். பயிலுதற்கேற்ப அறிவு தெளிந்த அறிவாகத் தீட்டப் பெறுகிறது. அத்தகைய சாதகன் தெய்வத்தோடு இணக்கம் பூண்டு பழகவேண்டும். இணக்கங்களுள் ஆண்டான் அடிமை இணக்கம் ஆரம்பதசையில் நன்கு பயன்படும். பழங்காலத்து ரிஷிகள் பரம்பொருளோடு ஒரு மேலான இணக்கம் பூண்டிருந்தனர். இந்த இணக்கம் சாந்த பாவனை என இயம்பப்பெறுகிறது. போற்றுதற்குரிய பெரிய பொருளாகப் பரமன் இருக்கிறான். அப்பரமனிடத்தே சாதகன் தனது முழுமனதைச் செலுத்துவது சாந்த பாவனை எனப்படுகிறது. ஞானமார்க்கத்தில் செல்லுகின்ற சாதகனொருவன் மற்றொருவித மனப்பான்மையை வரவழைத்துக் கொள்ளுகிறான். தன் உள்ளத்தின் உள்ளே இலங்குகின்ற அந்தராத்மாவாக இறைவனைப் பற்றி அந்த ஞானி கருதுகிறான். (புன்னகை பூத்த பாங்கில் இருந்துகொண்டு) உன்னுடைய மனப்பான்மை எத்தகையது?"

பக்தன் பதிலொன்றும் தாராது வெறுமனே அமர்ந்திருக்கிறான்.

பரமஹம்சதேவர்: (புன்னகைபூத்தவராக) "உன்னிடத்தில் இரண்டு இயல்புகள் இருக்கின்றன. உள்ளத்தின் உள்ளே இலங்குகிற அந்தராத்மாவாகப் பரமனைப் பற்றித் தியானம் பண்ணுவது ஓரியல்பு. இறைவனுடைய தொண்டனாக உன்னை நீ வைத்துக்கொள்வது மற்றொரியல்பு. நான் சொல்வது சரிதானா?"

பக்தன்: (தயங்கிக்கொண்டும், புன்னகை பூத்தவனாக இருந்துகொண்டும்) "ஆம் ஐயனே."

பரமஹம்சதேவர்: (புன்னகை பூத்தவராக) "நான் மக்கள் உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்களை அறிந்துகொள்ளும் பாங்குடையவனாக இருக்கின்றேன் என்று ஹஜ்ரா என்னைப் பற்றி இயம்புகிறார். சாதனத்தில ஓரளவு முன்னேற்றமடைந்திருக்கும் சாதகனொருவனுக்கே நான் இப்பொழுது இயம்பியுள்ள இந்த இரண்டுவித மனப்பான்மைகள் வந்தமையக்கூடும். உள்ளத்தினுள் இலங்கும் அந்தராத்மாவாகக் கருதுவது ஒருவித மனப்பான்மை, ஆண்டவனுக்குத் தன்னை அடிமையாக வைத்துக்கொள்வது மற்றொரு மனப்பான்மை. பிரஹலாதனிடம் இந்த இரண்டு மனப்பான்மைகளும் சேர்ந்து அமைந்திருந்தன. சாதகனொருவன் ஆழ்ந்து சாதனங்கள் புரியவேண்டும். அதே வேளையில் மற்றவர்களுக்குப் பணிவிடைபுரிந்து பழகவேண்டும். தீவிரமாக இந்த இரண்டு முறைகளையும் கடைப் பிடிக்கின்றவனுக்கு இந்தப் பண்பு வந்தமைகிறது.

"சான்று ஒன்று சொல்லுகிறேன் கேள். பழம் நிறைந்துள்ள சூரிச்செடியின் முள் நிறைந்த கிளையொன்றை மானுடனொருவன் பற்றிப் பிடித்திருக்கிறான் என்று வைத்துக்கொள். முள் தைத்ததன் விளைவாக அவன் கையில் ரத்தம் சொட்டிக் கொண்டிருக்கிறது. அப்படி இருந்தும் அவன் 'இதில் ஒன்றும் தோஷமில்லை. நான் பாதிக்கப்பட்டவன் அல்லேன்' என்று பகருகிறான். கையில் காயப்பட்டிருப்பதைப்பற்றிக் கேட்டால் 'அதொன்றுமில்லை. நான் நன்றாகத்தான் இருக்கிறேன்' என்று விடை கொடுக்கிறான். இப்படி விடை கொடுத்தால் மட்டும் போதுமா? இப்படி விடை கொடுப்பதில் பொருள் ஏதேனும் உண்டா? சூரிச்செடியின் கிளையை ஜாக்கிரதையாக வளைத்துக் கையில் பிடித்துக்கொண்டு

இருக்கவேண்டும். கையில் முள் தைக்காதும் பார்த்துக்கொள்ளவேண்டும். சூரிப்பழங்களை, மற்றொரு கையைக்கொண்டு பறித்தெடுக்கவும் வேண்டும். அப்படிச் செய்வதுதான் முறை. அதற்கு நிகராகச் சாதகனொருவன் தன்னுடைய இலட்சியத்துக்கேற்ற சாதனங்களைப் புரிந்து கொண்டே இருக்கவேண்டும். இடைஞ்சல்களில் அகப்பட்டுக் கொள்ளாதிருக்கும்படியும் பார்த்துக் கொள்ளவேண்டும்."

பரமஹம்சதேவர் பகர்ந்த இக் கோட்பாட்டைக் கண்ணும்கருத்துமாக, ஆங்கு அமர்ந்திருந்த பக்தர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

தட்சிணேசுவர ஆலயத்தில் பரமஹம்சதேவர் தம்முடைய அறைக்கு வடகிழக்கு மூலையில் இருக்கும் திண்ணையில் அமர்ந்துகொண்டிருந்தார். அப்பொழுது காலையில் மணி எட்டு ஆயிற்று. அவரோடு நரேந்திரன், ராக்கால், கிரீஷ், பாபுராம், சுரேந்திரன் ஆகிய பக்தர்களும் இன்னும் பலரும் அமர்ந்துகொண்டிருந்தனர். அன்று 1885ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆகும். அதற்கு முந்திய திங்கட்கிழமையன்று பரமஹம்சதேவருடைய பிறந்தநாளாகவிருந்தது. மகேந்திரர் வந்து பரமஹம்சதேவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். தமக்கு அருகில் அமரும்படி பரமஹம்சதேவர் அவருக்குச் சைகை காட்டினர்.

நரோத்தமன் என்னும் பக்தர் ஒருவர் கீர்த்தனைகள் பாடிக்கொண்டிருந்தார். அப்பாடல்களுக்குச் செவி சாய்த்து வந்த பரமஹம்சதேவரின் மனதில் பெரும்பகுதி அந்தர்முக திருஷ்டியில் இருந்தது. பாடிய கீர்த்தனங்களின் உட்பொருள் கிருஷ்ணனைப் பற்றியதாகவும் மைதானத்தில் அவன் தன்னுடைய ஏனைய கோபாலத் தோழர்களோடு கூடியிருந்ததைப் பற்றியதாகவும் இருந்தது. மைதானத்துக்குக் கிருஷ்ணன் இன்னும் வந்து சேரவில்லை. அவனுடையவரவை எதிர்பார்த்துக் கோபாலர்கள் சிறிது பதைபதைப்புற்று இருந்தனர். அவர்களில் ஒருவன் அன்னை யசோதை கிருஷ்ணனைப் போகவொட்டாது தடுத்து வைத்திருக்கிருள் என்று இயம்பினன். அதைக் கேட்ட பலாயி என்னும் இளைஞன் சங்கநாதம் செய்து கிருஷ்ணனைக் கொண்டுவந்து விடுவதாக உறுதி மொழி கூறினன். கிருஷ்ணனிடத்துப் பலாயி வைத்திருந்த அன்பு வரம்பு கடந்ததாகும். இன்னிசையின் ஓசை காதுக்கு எட்டியது. கிருஷ்ணன் ஊதிய குழலோசையானது கோபாலர்கள், கோபியர்களுடையசெவிகளுக்கு எட்டியது — அக்குழலோசையைக் கேட்டதும் சிறுவர்களும் சிறுமிகளும் ஆனந்த பரவசத்தில் மூழ்கினர்.

பரமஹம்சதேவருடைய கண்பார்வை அருகில் அமர்ந்திருந்த நரேந்திரன் மீது படிந்தது. ஆதலால் அவர் உடனே எழுந்து நின்று சமாதியில் மூழ்கினர். அவருடைய திருவடி நரேந்திரனுடைய முழங்காலைத் தீண்டிக்கொண்டிருந்தது. சிறிதுநேரத்திற்குப் பிறகு பரமஹம்சதேவருக்குப் புறவுலக ஞாபகம் வந்தது. அப்பொழுது அவர் தம் ஆசனத்தின் மீது மீண்டும் அமர்ந்தார். நரேந்திரனே அறையை விட்டு வெளியே போய் விட்டான். சங்கீர்த்தனம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

ஸ்ரீ ராமகிருஷ்ணதேவர் பாபுராமுடைய காதிலே குசுகுசுவென்று இயம்பியதாவது: "அதோ ஆங்கு அறையிலே பால்பட்சணம் இருக்கிறது. அதில் கொஞ்சம் எடுத்து நரேந்திரனுக்கு வழங்குவாயாக."

பரமஹம்சதேவருக்கு நரேந்திரனுடைய காட்சி பரம்பொருளின் காட்சிக்கு நிகராகத் தென்பட்டிருக்கக் கூடுமோ?

பாடல்பாடுவது முடிவுற்றது. பரமஹம்சதேவர் திண்ணையினின்று தம் அறைக்குத் திரும்பி வந்தார். பால் பட்சணத்தை அவர் பேரன்புடனும் இன்னியல்புடனும் நரேந்திரனுக்கு எடுத்து வழங்கினர். அவ்விளைஞனும் பக்தி பூர்வமாக அவர் வழங்கிய பிரசாதத்தை அருந்தினன்.

பரம்பொருள் தாமே பரமஹம்சதேவராக அவதரித்து வந்திருக்கிறுர் என்பது கிரீஷருடைய நம்பிக்கை.

கிரீஷ்: (பரமஹம்சதேவரைப் பார்த்து) "தம்முடைய பாங்குகளெல்லாம் கிருஷ்ணனுடைய பாங்குகளை ஒத்திருக்கின்றன. கிருஷ்ணனே தன் அன்னை யசோதையிடம் பலப்பல பாங்குகளில் பாசாங்குகள் பண்ணினன்."

பரமஹம்சதேவர்: "நீ பகர்வது மெய். கிருஷ்ணன் பரம்பொருளின் அவதாரமாயிருந்ததனல் அவன் அப்படியே நடந்துகொண்டான். கட

வுள் மனிதனுடைய வடிவெடுத்து உலகில் வருகிறபொழுது அவர் மனிதனுகவே நடந்துகொள்கிருர். கோவர்தன மலையைக் கிருஷ்ணன் விளையாட்டாக மேலே தூக்கி நின்ருன். அப்படிச் செய்தவன் தன் தந்தை நந்தனிடம் வேருெரு பாங்கில் நடந்துகொண்டான். ஒரு சிறிய நாற்காலியைத் தூக்குவதற்குத் திண்டாடியது போன்று நடந்து கொண்டான்."

கிரீஷ்: "ஆம், ஐயனே, தங்களை நான் இப்பொழுது அறிந்துகொண்டேன். தங்கள் பாங்கும் கிருஷ்ணனுடைய பாங்கும் ஒன்றையொன்று ஒத்திருக்கின்றன."

பரமஹம்சதேவர் தம் அறையிலிருந்த சிறிய கட்டிலின்மீது அமர்ந்திருந்தார். அப்பொழுது நேரம் முற்பகல் சுமார் *11-00* மணி. ராம் என்னும் பக்தரும், மற்றும் சில பக்தர்களும் ஒன்று கூடிப் பரமஹம்ச தேவருக்குப் புதிய உடை ஒன்று கொடுத்து அதை அணிவிக்க விரும்பினர். "வேண்டாம், வேண்டாம்" என்ருர் பரமஹம்சதேவர். ஆங்கிலம் கற்றிருந்த பிரமுகர் ஒருவரைச் சுட்டிக்காட்டி அவர் இயம்பியதாவது: 'இப்படியெல்லாம் செய்தால் இவர் இதைப்பற்றி என்ன கருதுவார்?' ஆயினும் பக்தர்கள் தங்களுடைய பணிவான வேண்டுதலை நிறுத்திவிடவில்லை. அன்புடன் அவர்கள் அவரை வற்புறுத்திய வண்ணமாயிருந்தனர். 'அப்படியா, நீங்கள் இவ்வளவு தூரம் வற்புறுத்தி வேண்டுவதால் உங்கள் விருப்பத்துக்கு நான் இசைகிறேன்,' என்ருர் அண்ணல்.

பக்தர்கள் பரமஹம்சதேவருக்கு நண்பகல் அமுது படைக்க ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தனர். பாடல் ஒன்று பாடும்படி நரேந்திரனிடம் பரமஹம்சர் கேட்டார். நரேந்திரன் பாடியதாவது: 'கார் இருளில் ஓ தாயே, உன்னுடைய வடிவற்ற அழகு மிளிர்ந்து கொண்டிருக்கிறது. ஆதலால் யோகியர்கள் கார் இருள் செறிந்த மலைக் குகையினுள் அமர்ந்துகொண்டு தியானம் பண்ணுகின்றனர். அகண்டாகாரத்தில் விரிந்தோடும் கார் இருளில் மகா நிர்வாணத்தின் அலைகள் உருவெடுக்கின்றன. அந்நிலையில் எல்லை மருவா அமைதி வழிந்தோடுகிறது. அதற்கு வரம்பொன்றும் கிடையாது. எல்லை மருவாத வெட்டவெளியாகத் தாயே, நீ திகழ்கின்ருய். கார்இருள் என்னும் ஆடையை நீ அணிந்திருக்கின்ருய். சமாதி என்னும் ஆலயத்தின்கண் அன்னையே, நீ தன்னந்தனியளாக அமர்ந்திருக்கிருய். உன்னை யார் என்று யார்தான் அறிந்துகொள்ள முடியும்? அச்சத்தை அறவே அகற்றவல்லவைகள் உன்னுடைய தாமரைத் திருவடிகள். ஆங்கிருந்து உன்னுடைய அன்பின் மின்னல்கள் பளீர்பளீர் என்று பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. சேதனமே வடிவெடுத்துள்ள உன்னுடைய முக விலாசத்தினின்று சிரிப்பானது பயமுறுத்தும் பாங்கில் உரக்க ஒலித்துக் கொண்டிருக்கிறது!

"சமாதி என்னும் ஆலயத்தின்கண் அன்னையே, நீ தன்னந்தனியளாக அமர்ந்திருக்கிருய். உன்னை யாரென்று யார்தான் அறிந்துகொள்ள முடியும்?" இங்ஙனம் நரேந்திரன் பாடியபொழுது பரமஹம்சதேவர் ஆழ்ந்து சமாதியில் மூழ்கினர். புறவுலக உணர்வனைத்தும் அவரை விட்டு அகன்று போயின. நெடுநேரத்திற்குப் பிறகு அவருக்குப் புறவுலக உணர்வு சிறிது உதயமாயிற்று. அப்பொழுது பக்தர்கள் எல்லாரும் ஒன்று கூடி அவரை ஓர் ஆசனத்தின் மீது அமரப் பண்ணினர். அவர் எதிரில் தட்டு ஒன்றை வைத்து அதில் அமுதுவகைகளைப் பரிமாறினர்கள், ஆனந்தப் பரவசநிலை அவரை விட்டு இன்னும் அடியோடு அகன்றுபோகவில்லை. அப்பாரமார்த்திகப் பெருநிலையில் இருந்தபடியே இரண்டு கரங்களாலும் அமுதை எடுத்து அருந்தலாயினர். 'எனக்கு எடுத்து ஊட்டு' என்று பவநாதரிடம் பரமஹம்சதேவர் பகர்ந்தார். பரவசத்தில் சொக்கியிருந்ததினல் அவருடைய கரங்கள் முறையாகக் கிருத்தியங்கள் பண்ணவில்லை. பவநாதர் அவருக்கு அமுது ஊட்டினர். ஆனல் பரமஹம்சதேவர் ஏற்றுக்கொண்டது மிகக் குறைவு. 'நித்திய கோபால் தங்கள் தட்டில் எஞ்சியிருந்ததைப் பிரசாதமாக ஏற்றுக்கொள்ளுவார்' என்று ராம் பரமஹம்ச தேவரிடம் இயம்பினர்.

பரமஹம்சதேவர்: "என் தட்டில் எஞ்சியிருப்பதை அவன் ஏன் அருந்தவேண்டும்?"

ராம்: "அவர் ஏன் அருந்தலாகாது?"

நித்திய கோபாலும் அப்பொழுது ஆனந்தப் பரவச நிலையிலிருந்தார். பரமஹம்சதேவர் தம் திருக்கரத்தைக் கொண்டு நித்தியகோபாலருடைய வாயில் சிறிது அமுது ஊட்டினர்.

பைங்கிளிக் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

54\. விண்ணுர் நிலவுதவழ் மேடையில் எல்லாருமுற
மன்னுள வீட்டில் என்னை வைத்ததென்னே
பைங்கிளியே.

விண் ஆர்-ஆகாயத்தினை அளாவிய. நிலவு தவழ்-சந்திரன சஞ்சரிக்கின்ற.

பக்தர்கள் எல்லாரும் அருளுக்குப் பாத்திர மாகிப் பரமானந்தத்தில் திளைத்திருக்கின் றனர். அது பாராட்டத்தக்க பெருநிலை. மேனி தாங்கியுள்ள பெருமக்கள் எல்லாரும் அடைந்துள்ள பெரும் பேறு ஆகிறது. மானுட ஜன்மத்தின் குறிக்கோள் அது. ஆர்வத் துடன் நாடியும் இன்னும் அப்பெரிய நிலையை அடையப் பெருது கீழ்மையிலே ஆழ்ந்து கிடக் கின்ற மண்ணுலக வாழ்வில் நான் உழன்று கொண்டு கிடப்பது பொருந்தாது. அழகிய பச்சைக் கிளியே, அருளுக்கு உறைவிடமாகிய இறைவனிடம் சென்று என்னுடைய விண் ணப்பத்தைத் தெரிவிப்பாயாக. இங்ஙனம் கீழ்மையில் உழன்று கிடப்பது எனக்கு ஒத் தது அன்று. அதிவிரைவில் அடியேனையும் பரமானந்தப் பெருநிலைக்கு எடுத்துச் செல்லும் படி அண்ணலிடம் என் அவாவைத் தெரிவித்து வருவாயாக என்பது இக்கண்ணியில் அடங்கி யுள்ள கருத்து.

55\. உள்ளத்தின்உள்ளே ஒவித்திருந்தான் கள்ள
மெல்லாம்
வள்ளல்அறிந் தால்எனக்கு வாயும்உண்டோ
பைங்கிளியே.

மக்கள் முன்னிலையில் பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளுதல் உலகத்தவர் போக்கு. ஆனால் அவர்களில் பெரும்பான்மையோர் சிற் றியல்பு படைத்தவர்கள். பொருந்தாத புல்லிய செயலைத் தனித்திருந்து அன்னவர்கள் துணிந்து செய்கின்றனர். ஏகாந்தத்தில் இருக்கின்ற பொழுது மனிதன் படைத்துள்ள பாங்கு தங்கு தடையின்றி வெளியாகிறது. ஏகாந்தத்தில் இருக்கிறபொழுது கடவுள் நாட்டமும், பேரி யல்பும் முன்னணியில் வந்து நிற்குமாகில் அம் மனிதன் பண்பட்டவன் என்பதற்கு அது அறி குறியாகிறது. சிற்றியல்பு படைத்தவர்கள் தனித்திருக்கிறபொழுது கீழ்த்தரமான எண் ணங்களில் ஈடுபடுகின்றனர். இன்னும் சிலர் அந்த எண்ணத்தோடு நின்றுவிடாது சுவரிலே புன்மொழிகளை எழுதுகின்றனர். புல்லிய படங் களையும் வரைகின்றனர். தங்களுடைய தாழ்ந்த செயல்களுக்குஆட்சேபம்பண்ணுவதற்கு யாரும் இல்லையென்று அவர்கள் எண்ணுகின்றனர். ஆயினும் உண்மைஎன்னவென்ருல் மனிதன் புரி கிற நல்வினை தீவினையனைத்தையும் உள்ளத்தி னுள்ளே மறைந்திருக்கும் ஈசன் கவனித்துக் கொண்டிருக்கிருர். அவர் மனச்சாட்சியாயிருப் பது பரிபாகம் அடைந்திருப்பவர்களுக்குப் புலனுகிறது. ஏனையவர்கள் யாருக்குமே தெரி யாது பொருந்தாத செயலைச் செய்து மகிழ்வடைந்ததாக எண்ணிக் கொள்ளுகின் றனர், ஆனல் உண்மை அதுவன்று. மனித னுடைய உள்ளத்தினுள்ளே மனச்சாட்சியாக யாண்டும் இறைவன் வீற்றிருக்கிருர். அயர்ந்த உறக்கத்தில் மனிதன் தன்னையே மறந்திருக்கிற பொழுதும் நித்திய ஜாக்கிரதாவஸ்தையில் இறைவன் அன்னவன் உள்ளத்தில் வீற்றிருக் கிருர். ஓர் அணுவும் இறைவனுடைய சாந்நித்தியத்துக்குப் புறம்பாக நிகழ்வதில்லை என்னும் உண்மையை உள்ளபடி அறிகிறவர் கள் வாய்விட்டு ஒன்றும் பேசாது நல்வழிக்கு வந்துவிடுவார்கள் அல்லவா பைங்கிளியே,என் பது இந்தக்கண்ணியின் கருத்து.

56\. ஆகத்தை நீக்குமுன்னே ஆவித் துணைவரைநான்
தாகத்தின் வண்ணந் தழுவுவதோ பைங்கிளியே.

ஆகத்தை நீக்கு முன்னே—உடலை விட்டுப் போகும் முன்னரே.

மானுடன் உடல் தாங்கியிருப்பது வெறும் இவ்வுலக சம்பந்தமான இன்பத்தைப் பெறு தல் பொருட்டு அன்று. உடல் எடுத்திருப் பதன் உயர்ந்த நோக்கம் ஒன்று உண்டு. இதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள் வோம். மகாபாரத யுத்தத்துக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்த அர்ஜுன னுக்கு நான்கு வெள்ளைக் குதிரைகள் பூட்டிய ரதம் ஒன்று தெய்வாதீனமாக வந்தமைந்தது. அந்த ரதத்தை ஒட்டுவதற்குக் கிருஷ்ணபர மாத்மாவே சாரதியாக வந்தமைந்தார். அந்த

வாய்ப்பு அர்ஜுனனுடைய படாடோபமான வாழ்க்கைக்காகவென்று வாய்த்ததாகாது. புல்லிய பாங்கு படைத்திருந்த மக்களுடன் போர் புரிந்து அவர்களைத் துடைத்துத் தள்ளுவதற்கு ஹேதுவாக அந்த ரதம் அவனுக்கு வாய்த்தது. அதே விதத்தில் மானுடனுக்கு ரதமாக வாய்த்திருப்பது அவன் எடுத்துள்ள உடல். அதைத் துணையாகக் கொண்டு இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாவது மானுட ஜன்மத்தின் நோக்கமாகும். அந்த இறைவன் எங்கும் நிறை பொருளாய் இருக்கிறார். ஒவ்வொரு ஜீவாத்மனுடைய உயிர்க்கு உறுதுணையாய் உள்ளத்தில் வீற்றிருக்கிறார். அகத்தில் இருப்பவரைப் புறத்தில தேடியலைவது வீண் பொழுதுபோக்கு ஆகும். மனிதன் விரும்புகிற அனைத்தையும் உள்ளத்தினுள்ளேயே உயிர்க்கு உறுதுணையாக வீற்றிருந்துகொண்டு அவன் நாடுவதையெல்லாம் அவர் நிறைவேற்றி வைக்கின்றார். அன்னவருடைய அரிய சாந்நித்தியத்தை உள்ளத்தினுள்ளேயே அறிந்து அவரோடு ஒட்டி உறவாடுவது நல்ல ஆத்ம சாதனமாகும். உடலோ எந்த க்ஷணத்திலானாலும் அழிந்துபட்டுப் போகக் கூடியது. அத்தகைய நிலையற்ற கருவியை உபாயமாக வைத்துக்கொண்டு இறைவனுடைய சாந்நித்தியத்தைத் தன்னகத்திலேயே அறிந்துகொள்ளுதல் வாழ்க்கையின் குறிக்கோள். வீண்காலம் போக்காது உடல் இருக்கின்ற பொழுதிலேயே இந்த அரும்பெரும் செயலை நிறைவேற்ற நான் ஆசைகொண்டிருக்கிறேன். பச்சைக்கிளியே, என்னுடைய இந்த மேலாம் நோக்கத்தை நீ பாங்குடன் இறைவனாரிடம் சென்று தெரிவித்து வருவாயாக என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

57. தானே சுபாவம் தலைப்படநின் றுன்னுன
வான்ஆனவரும் வருவாரோ பைங்கிளியே.

ஜீவாத்மன் பரமாத்மாவிடத்திருந்து ஓர் அணுமயமாக உருவெடுத்தவன். அந்த அணுமயமான உடல் வாழ்க்கையில் அவன் திருப்தியடைந்திருப்பவன் அல்லன். அவனுடைய சுபாவத்திற்குச் சான்றாகப் புராணவரலாறு ஒன்று உண்டு. சிறு குட்டை ஒன்றில் நீராடி வந்த முனிவர் ஒருவர் கையளவு தண்ணீரில் திணறிக் கொண்டிருந்த மீன் ஒன்றைப் பார்த்தார். அதன் உயிர் வாழ்வுக்கு அந்தச் சூழ்நிலை பொருந்தாது என்று எண்ணி அந்த மீனை எடுத்துத் தன் கமண்டலத்திலிருந்த நீருக்குள் போட்டு ஆச்ரமத்திற்குக் கொண்டு வந்தார். அடுத்தநாள் கமண்டல நீர் போதாத அளவுக்கு அந்த மீன்பெரியதாக உருவெடுத்தது. அடுத்த நாள் அதை எடுத்துக் குட்டையில் போட்டு வைத்தார். அம்மீனின் வளர்ச்சிக்கும் விளையாட்டுக்கும் குட்டை போதவில்லை. ஆதலால் அதை எடுத்து ஒரு குளத்தில் முனிவர் விட்டார். நாளடைவில் அந்தக் குளமும் மீனின் பாங்குக்கு ஏற்ற இடம் தரவில்லை. பிறகு அதை எடுத்து அவர் நதியில் விட்டார். மீன் தன்னுடைய முழு இயல்பையும் விளக்குவதற்கு அந்த நதி போதவில்லை. நதியில் நீந்தி அது சமுத்திரத்திற்குள் போனது. அப்பொழுதுதான் அதனுடைய எல்லைமருவாப் பான்மைக்கு அது ஏற்றதாயிருந்தது. இதே விதத்தில் ஒவ்வொரு ஜீவனும் தன் தன் போக்கில் தன் தன் சூழ்நிலையில் விரிவடைந்து வருகிறது. எல்லையுற்ற வாழ்வு என்னும் பிரபஞ்ச வாழ்வைக் கடந்து எல்லை மருவா வாழ்வு என்னும் அகண்டாகார வெளியை அடையப் பெறுகிறபொழுதே அந்த ஜீவன் தன்னுடைய நிஜ நிலையை அடையப் பெறுபவன் ஆகிறான். அதை அடையும் வரையில் அவனுடைய சுபாவம் அவனைச் சும்மா இருக்க விடாது. அத்தகைய நிலையில் நானும் இருக்கிறேன் என்னும் செய்தியைப் பைங்கிளியே இறைவனரிடம் தெரிவித்து அவருடைய அகண்டாகாரத்தில் என்னைச் சேர்த்துக்கொள்ளும்படி அவரிடம் தெரிவித்து வருவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

58. கள்ளத் தலைவர்அவர் கைகாட்டிப் பேசாமல்
உள்ளத்தில் வந்த உபாயமென்றே பைங்கிளியே.

உள்ளத்தினுள் மறைந்திருந்து தோன்றாத் துணையாக இறைவன் உயிர்களைப் பக்குவப்படுத்தி வருகிறார். உள்ளத்தினுள் மனச்சாட்சியாயிருந்து நல்லவைகளையும், கெட்டவைகளையும் பாகுபடுத்திக் காட்டுகிறார். அப்படி உள்ளத்தினுள் மறைந்திருப்பவர் அருளல் என்னும் அரிய செயலைச் செய்து என்னை ஆட்கொள்ளமாட்டாரா? பச்சைக்கிளியே, இறைவனிடம் சென்று என் நிலைமையை அவருக்குத் தெரிவித்து வருவாயாக என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

14. உங்களில் பலர் கோயிலுக்குக் காணிக்கையோ நைவேத்தியமோ எடுத்துச் செல்கின்றீர்கள். ஆனால், கோயிலுக்குள் சென்ற பிறகு உங்கள் மனதுக்குப் பிடிக்காத யாரோ சிலரைப்பற்றி நினைக்கின்றீர்கள். பகைவர்களைப்பற்றி நினைக்கின்றீர்கள். நீங்கள் உண்மையான பக்தர்களானால் அப்போது நீங்கள் செய்யக்கிடக்கும் கடமை ஒன்று உண்டு. உங்களுடைய காணிக்கைகளை அப்படியே கோயிலில் வைத்துவிட்டு நீங்கள் வந்தவழியே திரும்பிப் போய்விடுங்கள். உங்களுடைய மனதுக்கு ஒவ்வாதவர்களோடும், பகைத்துக் கொண்டவர்களோடும், திரும்பவும் உறவு கொண்டாடுங்கள். வேற்றுமையை மறந்துவிடுங்கள். ஒப்புரவு ஒழுகக் கற்றுக்கொள்ளுங்கள். பிறகு நீங்கள் கோயிலுக்கு வந்து காணிக்கையைச் செலுத்துங்கள்.

பகைமையிலும் வேற்றுமையிலும் வீண் காலம் போக்கவேண்டாம். வேற்றுமையை வளர்ப்பதனால் உங்களுடைய மனது சிறுமைப்படுகிறது. சிறுமைப்பட்ட மனது சிறையிலடைக்கப்பட்ட மனதாகிறது. சிற்றியல்பு என்னும் சிறையில் அடைபட்டுக் கிடக்கின்ற மனது ஆன்ம வளர்ச்சிக்குப் பெரும் தடையாகிறது. கேடு செய்தவர்கள் அதற்கு ஈடு செய்தே ஆகவேண்டும். ஈடுசெய்யாது அவர்கள் தப்பிக்க முடியாது.

மனதிலுள்ள அழுக்குகள் நீங்கும் வரையில் சரியான பாதையில் நாம் செல்லமுடியாது. குழப்பங்களும், சண்டை சச்சரவுகளும் அப்பொழுது இருக்கத்தான் செய்யும். மன அழுக்கு நீங்கி பரத்தோடு ஒன்றித்து விடுகிறபொழுதுதான் அமைதியும் சாந்தமும் உண்டாகின்றன. காமக்குரோதாதிகள் நம்மிடத்தில் நிலைபெற்றிருக்க அனுமதிக்கக் கூடாது. பொறுமையும் பிறரிடத்தில் குற்றங்குறைகள் காணும் தன்மையும் மனதில் இடம்பெற அனுமதிக்கக்கூடாது. அவைகள் இடம் பெற்றுவிட்டால் புற்றுநோய் (Cancer) உடலை அரித்துத் தின்பது போன்று அவைகள் நம் வாழ்க்கையை அரித்துத்தின்று விடுகின்றன. மற்ற தத்துவ ஞானிகளைப் போன்று இயேசுநாதர் உள்ளத்தின் தத்துவத்தை அறிந்தவராவார். ஆகையால்தான் இயேசுநாதர் உங்கள் மனதுக்கு ஒவ்வாதவர்களோடும், பகைத்துக் கொண்டவர்களோடும் திரும்பவும் உறவு கொண்டாடுங்கள்; வேற்றுமையை மறந்துவிடுங்கள்; ஒப்புரவு ஒழுகக்கற்றுக்கொள்ளுங்கள் என்று பகர்ந்துள்ளார். உள்ளத்தில் பொருந்தாத இயல்புகளை வளர்த்துக் கொண்டு கடவுளுக்குக் காணிக்கை செலுத்துவதில் பயன் இல்லை. மனதிலுள்ள பொருந்தாத இயல்புகளை ஒழித்துவிட்டுத் தெய்வ சாந்நித்தியத்துக்குப் போகும் பொழுதுதான் நாம் மேன்மை அடைகின்றோம். பொருந்தாத இயல்புகள் நம்முடைய சாதனைக்கு எத்தகைய தடையாக இருக்கின்றன என்பது தியானப் பயிற்சி பெறுகிறவர்களுக்குத் தெரியும்.

நமக்குத் தீங்கு செய்தவர்மீது நமக்குக் கோபம் உண்டாகிறது. அப்பொழுது நாம் தியானம் செய்தால் என்ன நிகழ்கிறது தெரியுமா? பிரார்த்தனையும் மன ஒருமுகப்பாடும் நம்முடைய உணர்ச்சிகளை வலுவுடையதாகச் செய்கின்றன. புற்றுப்போல் சிறியதாக இருந்த கோபம் மலைபோல் பெரியதாகிவிடும். பிறர் மீது கோப உணர்ச்சி கொண்டு தியானம் பழகினால் அவரைப்பற்றிப் பயங்கரமான கற்பனைகளை எல்லாம் நீ செய்ய ஆரம்பித்து விடுவாய். உனக்குத் தீங்கு செய்தவர்களை மறந்துவிட்டு நீ தியானத்தில் அமர வேண்டும்.

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்

என்பது குறள். தீங்கு செய்தவர்க்கு எதிர்த் தீங்கு செய்தால் அப்பொழுது மட்டும் சிறிது நேரத்துக்கு இன்பம் கிட்டும். அந்தத் தீங்கை மறந்து விட்டால் நிலையான இன்பம் உள்ளத்தில் உண்டாகிறது.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

என்ற கோட்பாட்டின்படி பிறர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது சிறந்த மனப்பான்மை ஆகின்றது. அந்த மனப்பான்மை வளரும்பொழுதுதான் நம் உள்ளம் தியானத்துக்குத் தகுதி உடையதாகிறது. வேற்றுமையை ஒழித்துவிட்டு அனைவரிடமும் உண்மையான நேசமனப்பான்மையோடு பழகுகிற

வரையிலும் இறைவன் சாம்ராஜ்யத்துக்குள் நுழைய முடியாது. அனைவரிடமும் நேசமனப் பான்மையை வளர்ப்பதற்கு ஒரே ஒருவழிதான் இருக்கிறது. அந்த வழிதான் அனைவரிடமும் தெய்வத்தைக்கண்டு பழகுவதாகும். அனைவரிடமும் உள்ள தெய்வத்தை நேசித்துப் பழகும் பொழுதுதான் அனைவரிடமும் அன்பு பாராட்ட முடியும். நீ உனக்காகப் பிரார்த்தனை செய்வதுபோன்று மற்றவர்களுக்காகப் பிரார்த்தனை செய். நீயும் உனக்குத் தீங்கு செய்தவரும் கடவுளிடத்தில் உண்மையான பக்தியும் ஞானமும் உடையவர்களாக வளரவேண்டும் என்று பிரார்த்தனை செய். அப்பொழுது நீ சாதனத்தில் துரிதமாக முன்னேற்றம் அடைவாய். உன் உள்ளத்தில் பிறர்மீது குரோதம் வைத்திருப்பாயானல் பிறருக்கும் நீ நலன் செய்தவன் ஆகமாட்டாய்; உனக்கும் நீ நலன் செய்தவன் ஆகமாட்டாய்.

நாள்தோறும் உலக க்ஷேமத்தை முன்னிட்டுப் பிரார்த்தனை செய்யவேண்டும். உலக நலனில் தனிப்பட்டவருடைய நலன் அடங்கியிருக்கிறது. வழிபாட்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் உலக க்ஷேமத்தைக் குறித்து ஒவ்வொரு மனிதனும் பிரார்த்தனை செய்யக் கடமைப்பட்டிருக்கிறான். உலக நலன் அடங்கிய பிரார்த்தனை ஒன்று இருக்கிறது. 'லோகா சமஸ்தா சுகினோ பவந்து' என்பது அப்பிரார்த்தனை. அண்டத்திலுள்ள உயிர்களெல்லாம் இன்புற்றுவாழட்டும் என்பது அப்பிரார்த்தனையில் அடங்கியுள்ள பொருளாகும். ஒரு மனிதன் தன்னை இறைவனிடத்தில் ஒப்படைப்பதற்கு முன்பு இத்தகைய பரந்த எண்ணத்தை எண்ணக்கூடிய உள்ளத்தைப் பெறவேண்டும். அந்த நல்ல எண்ணத்தை உலக உயிர்களின் நலனுக்காக உலக முழுவதும் செலுத்தவேண்டும். உயிர்களிடத்திலும், தெய்வத்தினிடத்திலும் அன்பை வளர்ப்பதற்கு இது முதல்படியாகிறது.

சாதனையில் போகின்றவர்கள் வேண்டாத ஆசைகளை எல்லாம் விரைவில் திருத்தி அமைக்க வேண்டும். பிறரிடத்தில் குறை காண்பதிலும், சண்டைபோட்டுக் கொண்டிருப்பதிலும் நம்முடைய காலத்தையும், சக்தியையும் விரயம் செய்துகொண்டிருக்கக் கூடாது. தெய்வச் சிந்தனை நம் உள்ளத்தில் உறுதிபெற்று இருப்பதற்கு வேண்டிய முயற்சிகளை விரைவில் செய்யவேண்டும். அடிக்கடி நம்முடைய லட்சியம் என்ன என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். போகத்துக்காகவோ, ஆடம்பரத்துக்காகவோ, பேர், புகழுக்காகவோ உலகில் நாம் வாழ்ந்திருக்க வரவில்லை. கடவுள் காட்சி பெறுவதற்குத்தான் நாம் இவ்வுலகுக்கு வந்திருக்கின்றோம். வேறு எண்ணங்களுக்கு உள்ளத்தில் இடம் தராது கடவுள் நினைவிலேயே நாம் இருக்க முயலவேண்டும். 'வீண் பேச்சுக்களை விட்டொழித்துவிட்டு ஆத்மனை மட்டும் அறிந்துகொள்வாயாக' என்று உபநிஷதம் நமக்குப் புகட்டிக்கொண்டிருக்கிறது.

சமய உண்மைகளைக்குறித்து விவாதம் செய்யவும், சண்டைபோடவும் விரும்புவது அகங்காரத்தின் அறிகுறியாகும். தெய்வத்துக்கு முன்னால் பணிவு உண்டாகவேண்டும். அகங்காரம் ஒடுங்கவேண்டும். கேட்டுக்கு முன் பணியக் கூடாது. கேட்டை எதிர்த்து வெற்றிகொள்ள வேண்டும். கேட்டை உறுதியுடன் எதிர்த்துத் தெய்வத்திற்குப் பணிகின்றபொழுதுதான் மேலாம்நிலை வருகிறது. கேட்டின் சக்திக்கு உன்னை அடிமைப்படுத்திவிடாதே. கேட்டுக்கு இணங்காவிட்டால் என்ன விளைவு வந்துவிடுமோ என்று பயப்படுவது கோழைத்தனம். கோழைத்தனத்துக்கு இடந்தராதே. பிறருடைய அபிப்பிராயங்கள் எவை, தத்துவம் எது என்பதை விசாரித்துப் பார்க்கவேண்டும். பிறருடைய அபிப்பிராயங்களைச் சரி, சரி என்று ஏற்றுக்கொண்டு தத்துவத்தில் உறுதியாக இரு. பிறருடைய அபிப்பிராயத்துக்குத் தத்துவத்தை ஈடு கொடுத்துவிடாதே. தத்துவத்திற்கு எதிரான அபிப்பிராயங்கள் எழுந்தால் அவற்றைப்பாராட்டு. பாராட்டுவதோடு நின்றுவிடு. தத்துவத்துக்கு ஒத்த அபிப்பிராயங்கள் வந்தால் அவற்றை ஏற்றுக்கொள். சுவாமி துரியானந்தர் பகர்ந்திருப்பதாவது: பிடிவாத குணம் பலத்தின் அறிகுறியன்று. பலஹீனத்தை மறைத்துவைக்கப் பிடிவாதம் பயன்படுகிறது. எஃகு போன்று வளைந்து கொடுத்து தத்துவத்திலிருந்து பிசகாதிருப்பவனே வலிவு படைத்தவன் ஆகின்றான். பலரையும் அனுசரித்துப் பலருடைய அபிப்பிராயங்களையும் கேட்டுத் தத்

துவத்தில் உறுதியாக நிலைத்திருப்பவனே வலிவு படைத்த மனிதன் ஆகின்றான். பிறருடைய அபிப்பிராயத்தைச் சகித்துக்கொள்ளாதவன், தன்வழியிலேயே முரட்டுத்தனமாகச்செல்பவன் அதனுடைய விளைவை அனுபவித்தாக வேண்டும். அனைவருடைய அபிப்பிராயத்தையும் கேட்டுத் தத்துவத்திற்குப் பொருந்தியதை எடுத்துக்கொண்டு லட்சியத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பவன் தெய்வ சாந்நித்தியத்துக்குப் போய்ச் சேருகின்றான்.

பகைமையை வளர்ப்பதும், பகைவர்களைப் புறக்கணிப்பதும் சிற்றியல்பு படைத்தவர்களுடைய பாங்காகும். பகைவர்களிடத்திலும் ஈசனைக் கண்டு அவர்களிடத்திலும் அன்போடு பழகவேண்டும். இங்ஙனம் நம்மிடத்திலுள்ள சிற்றியல்பைப் பேரியல்பாக மாற்றும்பொழுது தான் நாம் தெய்வத்துக்கு உரியவர்களாகின்றோம். அப்பொழுது தெய்வம் நம்மை ஏற்றுக்கொள்கின்றார். சிற்றியல்பு நம் உள்ளத்தில் இருக்கும்வரையிலும் பகைமையும், சண்டையும் தான் இருக்கும். அப்பொழுது தெய்வமும் நம்மை ஏற்றுக்கொள்வதில்லை. இக்கருத்து இயேசுவின் இவ்வுபதேசத்தில் அடங்கியிருக்கிறது.

சுவாமி துரியானந்தரின் போதனைகள்

சுவாமி துரியானந்தரைப் பார்க்க வரும் அன்பர்கள் அன்பின் அறிகுறியாக அவரிடம் மலர்கள் தருவார்கள். அவர் அம்மலர்களை மோந்து பார்க்காமலும், தம் அறைக்கு எடுத்துச் செல்லாமலும் நேரே ஸ்ரீ ராமகிருஷ்ணர் திருவுருவப்படமிருக்கும் அறைக்கு எடுத்துச் சென்று அப்படத்தின் முன் மலர்களை வைத்து வழிபடுவார். சுவாமி துரியானந்தர் பகர்ந்ததாவது: “நான் மலர்களை மிகவும் விரும்புகின்றேன். அதனால்தான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் படத்தின் முன்பு அவைகளை வைத்து வழிபடுகின்றேன். தெய்வத்திற்கு மலர்களைச் சாத்துவதற்கு முன்பு அவைகளை மோந்து பார்க்கக் கூடாது.” இங்ஙனம் சுவாமி துரியானந்தர் ஒவ்வொரு சிறு செயலையும் தெய்வீக உணர்வோடு செய்து தமக்கும், தெய்வத்துக்கும் உள்ள இணக்கத்தை உறுதிப்படுத்தி வந்தார். தம் வாழ்க்கையின் மூலம் தெய்வத்திற்கு எப்படி வாழ்க்கையை ஒப்படைக்க வேண்டுமென்பதையும் தம் சிஷ்யர்களுக்கு விளக்கிக் காட்டினார்.

மற்றொரு நிகழ்ச்சியின் மூலம் தம் மன உறுதியை அவர் தம் சிஷ்யர்களுக்கு விளக்கிக் காட்டினார். ஓர் அறையில் பலபேர் அமர்ந்து ஒரு சமயம் தியானம் செய்துகொண்டு இருந்தார்கள். அப்பொழுது விஷப்பூச்சி ஒன்று சுவாமி துரியானந்தருடைய கையைக் கொட்டிவிட்டது. சுவாமிகள் தியானம் கலையாது அசைவற்று அமர்ந்திருந்தார். பூச்சிகொட்டிய இடம்வீங்க ஆரம்பித்துவிட்டது. அடுத்த நாள் கை முழுவதுமே வீங்கிப்போய்விட்டது. ஆசிரம வாசிகள் மிகவும் கவலைப்பட்டார்கள். ஆசிரமத்திற்குப் பக்கத்தில் டாக்டர் யாரும் இல்லை. டாக்டரைப் பார்க்க வேண்டுமென்றால் ஐம்பது மைலுக்கு அப்பால் போயாகவேண்டும். விஷம் மேலும் சுவாமிகளுடைய உடலில் பரவுவதைத் தடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. எதிர்பாராத விதத்தில் ஆங்கு ஒரு மனிதர் வந்தார். அவர் தம்மை ஒரு டாக்டர் என்று ஆசிரம வாசிகளுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டார். தாம் நியூயார்க்கிலிருந்து வருவதாகவும், ஆசிரம வாழ்க்கை சிறிதுகாலத்திற்கு வாழ விரும்புவதாகவும், ஐம்பது மைல் நடந்து வருவதாகவும் கூறினார். சுவாமிகளுக்கு ஏற்பட்டிருந்த விபத்தை ஆசிரம வாசிகள் அவரிடம் தெரிவித்தார்கள். அவர் உடனே தம் கைவசமிருந்த முதலுதவிப் பெட்டியைத் திறந்து பொருத்தமான மருந்தைக் கையில் தடவினார். ஆசிரம வாசிகள் அவருக்குமிகவும் நன்றி செலுத்தினார்கள். அந்தடாக்டர் பிற்காலத்தில் சுவாமி துரியானந்தருடைய மிகமுக்கியமான சிஷ்யர்களுள் ஒருவராகி விட்டார். சுவாமி துரியானந்தர் இவற்றையெல்லாம் அமைதியாகத் தமக்கு ஒன்றும் நிகழாததுபோன்று சாக்ஷியாகப் பார்த்துக்கொண்டு இருந்தார்.

நான்கு சாதனங்கள்

(416 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுயநலம் கருதிச் செய்யும் செயல்கள் ஆன்ம வளர்ச்சிக்கு இடையூறுகள் ஆகின்றன. சுய நலமாகச் செய்யப்படுகின்றவைகள் தீவினைகளாகின்றன. பரநலத்துக்காகச் செய்யப்படும் செயல்கள் தீவினைகளைக் களைந்தெடுப்பதற்குப் பயன்படுகின்றன. சுயநலம் கருதிச் செய்யும் கருமம் பொல்லாதது. தெய்வத்துக்காக என்றும் உலகத்துக்காக என்றும் செய்யப்படும் கருமம் சித்தசுத்தியை உண்டுபண்ணுகின்றது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் காலத்தில் கிரீஷ் சந்திர கோஷ் என்னும் நாடக ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவர் தீவினைகள் ஏராளமாகச் செய்தவர். அவரை ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆட்கொள்ளுவதற்குச் சம்மதித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரிடம் பகர்ந்ததாவது: "நீ செய்கின்ற செயல்களை எல்லாம் எனக்கு அர்ப்பணம் செய்து விடு. உனக்காக என்று எதையும் செய்யாது என் பொருட்டு நீ கருமம் செய். மது அருந்துவதாக இருந்தாலும் அதை எனக்கு அர்ப்பணம் செய்துவிட்டு அருந்து." கிரீஷ்சந்திரகோஷ் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்காக என்று கர்மம் செய்யத் தொடங்கியதும் அவரிடமிருந்த கேடுகளெல்லாம் அகன்றுபோய் விட்டன. அங்ஙனம் நாம் தெய்வத்துக்காக என்றும் உலகத்துக்காக என்றும் கர்மத்தைச் செய்கின்றபொழுது நம்மிடம்உள்ள குற்றங்கள் அகல்கின்றன.

காலில் முள் தைத்து விட்டால் அம்முள்ளைக் களைவதற்கு மற்றொரு முள்ளைப் பயன்படுத்துகின்றோம். காலிலுள்ள முள்ளை எடுத்தான பிறகு களைவதற்காகப் பயன்படுத்தப்பட்ட முள்ளையும் எறிந்து விடுகின்றோம். சுயநல மற்று அல்லது பரநலனுக்காகச் செய்யப்படும் காரியங்கள் புகழ்,கீர்த்தி என்ற விளைவை உண்டு பண்ணும். அவற்றை மனதில் வாங்கிக் கொள்ளாது அவற்றைத் துறக்கவேண்டும்.

சுவாமி விவேகானந்தர் காலத்து அமெரிக்காவின் தலைநகராகிய சிகாகோவில் சர்வமதமகா சபை ஒன்றைக் கூட்டினர்கள். உலகத்திலேயே கிறிஸ்துவ மதம்தான் மேலானது என்பதை நிரூபிப்பதற்காக அந்தச் சபை கூட்டப்பட்டது. இந்து மதத்தின் பிரதிநிதியாகச் சுவாமி விவேகானந்தரைத் தேர்ந்தெடுத்து அச்சபைக்கு அனுப்பினர்கள். ஆனல் சுவாமி விவேகானந்தர் உலகநலனை மனதில் வைத்துக் கொண்டு ஆங்குச்சென்றார். இந்தியா ஆன்மீகத்தை உலகுக்குஎடுத்துவழங்கி அதற்குப்பதிலாக மற்ற நாடுகளிலிருந்து அது செல்வம் பெற வேண்டும். இந்தநோக்கத்தோடு அவர் சர்வமத மகாசபைக்குச் சென்று உரையாற்றினர். சர்வ மத மகாசபையில் பேசியான பிறகு அவருக்கு உலகப்புகழ் வந்தது. அதை அவர் மனதில் வாங்கிக்கொள்ளவில்லை. அமெரிக்காவில் அவர் தங்குவதற்குச் சகல வசதிகளோடும் கூடிய ஓர் அறையை அமைத்துத் தந்தார்கள். அவ்வறை சொர்க்கத்திற்கு நிகராக இருந்தது. சுவாமிகள் அந்த அறையில் இருந்தபோது இந்தியாவில் ஏழ்மையில் இருந்த மக்களைக் குறித்த எண்ணங்கள்தாம் அவர் மனதில் படலம் படலங்களாக எழுந்தன. இந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தை எண்ணி எண்ணி இரவு முழுவதும் வருந்தினர். இந்தியாவை ஈடேற்றுவதற்கு எண்ணிய எண்ணமே அவர் அப்போது செய்த தியானம் ஆகும். பொதுவாக இன்றைக்கு மக்கள் தங்களைக் குறித்துத்தான் எண்ணுகிறார்கள். எத்தகைய சுக வாழ்க்கை வாழலாம் என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். மற்றவருடைய கஷ்டத்தை எண்ணிப் பார்ப்பதில்லை. மற்றவருடைய கஷ்டத்தைப் போக்க வேண்டும் என்று நாம் எண்ணுவதும் இல்லை; செயல்படுவதும் இல்லை. அரசியல்வாதிகள் வாயளவில் பிறர் கஷ்டத்தைப்போக்குவதாகக் கூறித் தங்களுக்குச் சுகம் தேட எண்ணுகிறார்கள். பிறர் கஷ்டங்களைப் போக்கவேண்டும் என்று வாயால் மட்டும் சொல்லிவிட்டு நின்றுவிடுகின்றவர்கள் பிறர் கஷ்டங்களைப் போக்கினவர்கள் அல்லர். "வாசா கைங்கரியம் அன்றி ஒரு சாதனம் மனேவாயு நிற்கும் வண்ணம் வாலாயமாகவும் பழகியறியேன்" என்று தாயுமானவர் பகர்ந்துள்ளார். வெறும் வாய்ச் சொல் பயன் எதுவும் தந்துவிடாது.

சுவாமி விவேகானந்தர் இந்திய மக்களின் வாழ்க்கை நிலையை எண்ணி எண்ணி உருகிக் கொண்டிருந்தார். அவருக்கு வந்த புகழை எள்ளளவும் எண்ணிப் பார்க்கவில்லை. இந்திய மக்கள் ஈடேறுவதற்கு வழி கண்டு பிடிப்பதில் தீவிரமாக அவர் உள்ளம் ஈடுபட்டது, இந்திய மக்கள் நல்வாழ்வு வாழவேண்டுமென்ற சிந்தனைதான் அவருடைய உள்ளத்தில் குடி கொண்டிருந்தது.

இந்திரியங்கள் மூலம் வருகின்ற சுகத்தையும், காமத்தையும் வெல்லுவது வைராக்கியம் எனப்படும். இந்திரியங்கள் மூலம் வரும் சுகத்தைத் தெய்விக உணர்வை வளர்க்கப் பயன் படுத்தவேண்டும். சுவைத்தல் என்பது ஓர் இந்திரிய இன்பம். சுவைக்கு அடிமைப்பட்டு உணவை உண்பவர்கள் இந்திரிய சுகத்தை அனுபவிப்பவர்கள் ஆகிறார்கள். தனக்கென்று சுவைக்காது தெய்வத்துக்கென்று சுவையை ஒப்படைக்கின்றபொழுது இந்திரிய சுகத்தை வென்று பழகுகின்றவர்களாகின்றோம். கண்ணப்பன் இறைச்சியைச் சுவைத்துப் பார்த்தது இதற்குச் சான்றாகும். பன்றி இறைச்சியை நெருப்பில் வாட்டி வாயில்போட்டுச் சுவைத்துப் பார்த்துச் சுவை மிகுந்துள்ளதைக் காளத்தியப்பனுக்கு என்று எடுத்து வைத்தார். அவர் இறைச்சித் துண்டைச் சுவைத்தது தனக்காக அன்று. காளத்தியப்பனுக்காகச் சுவைத்துப் பார்த்தார். சுவையுள்ளதைக் காளத்தியப்பனுக்கு என்று ஒதுக்கிவிட்டுச் சுவையில்லாததைக் கீழே தப்பினார். நாம் இதற்கு மாறாகச் செயல்படுகின்றோம். சுவையான உணவை நாம் அருந்திவிட்டுச் சுவையில்லாததைக் கீழே துப்புகின்றோம். நாம் சுவைக்கு அடிமைப்பட்டு உண்கின்றோம். கண்ணப்பன் காளத்தியப்பனுக்காகச் சுவைத்தார். தெய்வத்துக்கென்றே மனதை ஒப்படைத்தவர்கள் கண்ணப்பன் போன்று சுவை என்னும் புலனை வென்று பழகுகின்றார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய தந்தையார் க்ஷுதிராம் சட்டர்ஜி ஆவார். அவர் ஒருசமயம் தன் மகள் வீட்டுக்குப் போனார். வழியில் வில்வமரம் ஒன்றைப் பார்த்தார். அம்மரம் நன்றாகத் தளிர்த்து இருந்தது. வில்வ இலைகள் தளிர்த்து அழகாக இருந்தன. அவ்வில்வ இலைகளின் அழகைப் பார்த்ததும் அவர் வீட்டில் இருந்த சிவலிங்கத்தின் ஞாபகம் அவருக்கு வந்தது. வில்வமரத்தில் ஏறி வில்வ இலைகளைப் பறித்துக்கொண்டு மகள்வீட்டுக்குப் போகாது தம் சொந்த ஊருக்குத் திரும்பினார். வீட்டுக்கு வந்து வில்வ இலைகளைச் சிவலிங்கத்துக்கு அர்ச்சனை செய்து பெருமகிழ்வு அடைந்தார். கண்ணின்மூலம் அழகைக் காணுகின்றபொழுது தெய்வ உணர்வில் மூழ்கிக் காட்சி இன்பத்தைத் தெய்வத்துக்கு அர்ப்பணித்தார். அழகான மலர்களைக் காணும்பொழுது அவைகளை மாலையாகக்கட்டித் தெய்வத்துக்குச் சாத்தி இன்புறலாம் என்ற எண்ணம் வந்தால் கண்ணின் மூலம்வரும் இந்திரிய சுகத்தை வென்று பழகுகின்றவர்களாகின்றோம். அழகான மலர்களைப் பார்க்கும்பொழுது அவற்றை நாம் அனுபவிக்க வேண்டுமென்றோ, மனைவி மக்களுக்குக் கொடுத்து இன்புற வேண்டுமென்றோ எண்ணினால் அது சுயநலத்தை வளர்ப்பதாகிறது. இங்ஙனம் ஒவ்வொரு பொறியின் மூலமாக வரும் இன்பத்தைத் தெய்வத்துக்கென்று ஒப்படைத்துப் பழகினால் நம்மிடத்திலுள்ள கீழான உணர்ச்சிகளை வென்று பழகுகின்றவர்களாகின்றோம். கீழான உணர்ச்சியை மேலானஉணர்ச்சியாக மாற்றி அமைப்பதற்குப் பக்தியோகம் என்றுபெயர். இங்ஙனம் கர்ம யோகம் பக்தியோகங்களின் மூலமாக மனதில் தெய்வச்சிந்தனை வளர்ந்து வரவர மனதில் வைராக்கியம் தானாக உண்டாகிறது.

புறப்பொருள்களிலிருந்து மனதை விலக்கி எடுத்துப் பரத்தை நாடிப்போவதற்குச் சாதனை செய்யவேண்டும். சாஸ்திர ஆராய்ச்சி செய்வதும் ஒரு சாதனையாகிறது. நான் கற்றவன் என்ற அகங்காரத்தை ஒதுக்கிவிட்டுச் சாஸ்திரங்களை ஆராய்ச்சி பண்ணினால் நம் உள்ளத்துக்கு ஈசனுடைய மகிமை விளங்குகிறது. ஈசனுடைய மகிமை விளங்க, விளங்க உள்ளத்துக்கு அருள் நாட்டம் ஏற்படுகிறது.

“ கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் ”

என்று வள்ளுவர் பகர்ந்துள்ளார். கல்வி கற்கக் கற்க மனதுக்குத் தெளிவு உண்டாகவேண்டும். நித்தியப்பொருள் இது, அநித்தியப் பொருள்

இது என்ற தெளிவு சாஸ்திர ஞானத்தின் மூலம் மனதுக்கு ஏற்படவேண்டும். அப்பொழுதுதான் சாஸ்திரம் படித்ததன் பயன் நமக்கு ஏற்பட்டதெனலாம். மனத்தைத் தெளிவு படுத்திக்கொள்ளாது சாஸ்திரம் கற்றிருக்கிறேன் என்ற செருக்கு உடையவர்களாகத் தங்களைப் பண்டிதர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் பலர் இருக்கின்றார்கள். அத்தகைய பண்டிதர்களை ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆகாயத்தில் பறக்கின்ற கழுகோடு ஒப்பிடுகின்றார். கழுகு ஆகாயத்தில் உயரப் பறக்கின்றது. ஆனால் அதன்நோக்கம் முழுவதும் கீழே பூமியில் அழுகியபிணம் கிடக்கின்ற இடத்தை நாடிப்போய்க் கொண்டிருக்கிறது. பண்டிதர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் சாஸ்திரங்களுடைய உண்மைகளை வாயால் பிரமாதமாகப் பேசுவார்கள். ஆனால், அவர்களுடைய உள்ளம் கழுகு போன்று, கீழான உலக விஷயங்களில் ஓடிக் கொண்டிருக்கும். சாஸ்திரத்தைக் கற்க, கற்க உலகப் பொருள்களிடத்தில் உள்ள நாட்டம் குறைந்து ஈசுவரநாட்டம் அதிகரித்து வர வேண்டும்.

''படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில்'' என்பது பழமொழி. வேதாந்தம் படிப்பவர்கள் உலகப் பற்றுடையவர்களாக இருப்பார்களானால் அவர்கள் வேதாந்தம் படித்தும் பிரயோஜனமில்லை. 'வேதாந்தம் படித்து என்ன பிரயோஜனம்? ஒரு காசுக்கு வழியில்லை' என்று நொந்துகொள்பவர்கள் வேதாந்தம் படித்தவர்கள் அல்லர். 'வேதாந்தம் கேட்டவர் வேட்கைவிட்டாரே' என்றுதிருமூலர் பகர்ந்திருக்கிறார். வேதாந்தம் படிக்கப் படிக்க உலகப்பற்று ஒழிய வேண்டும். வேதாந்தம் படித்தும் உலகப்பற்று ஒழியவில்லை என்றால் வேதாந்தம் படித்தது ஆகாது.

பாகவதம் படித்த பண்டிதர் ஒருவர் ஓர் அரசனிடத்தில் வந்தார். அவருடைய குடும்பம் பரம்பரை பரம்பரையாகப் பாகவதம் படித்து வந்த குடும்பம் ஆகும். பாகவதம் படிப்பது அவருக்குச் ஸ்வதர்மமாக அமைந்திருந்தது. அவர் பலமுறையும் பாகவதத்தைப் படித்திருந்தார். பாகவதத்தில் தமக்கிருந்த பாண்டித்தியத்தை அரசனிடம் விளக்கிச் சன்மானம் பெறலாம் என்ற நோக்கத்தோடு அரசனிடம் வந்தார். ''அரசே, எனக்குப் பாகவதம் நன்றாகத்தெரியும். உங்களுக்குப் பாகவதம் சொல்லலாம் எனக் கருதிவந்தேன்" என்று கூறினார். அரசன் அதற்கு "இன்னும் பாகவதத்தை நன்றாகப்படித்துவிட்டு வாருங்கள்" என்று கூறி அனுப்பிவிட்டார். மறுபடியும் பாகவதத்தைப் படித்துவிட்டு அரசனிடம் சென்றார். அரசன் "இன்னும் நன்றாகப் படித்துவிட்டு வாருங்கள்" என்று திருப்பி அனுப்பிவிட்டார். மூன்றும் முறையும் போய் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தார். அதன் பிறகு பாகவதத்தை ஆழ்ந்து படிக்கத் தொடங்கினார். பாகவதக் கருத்துக்களில் மனது ஆழ்ந்து போகப் போக அவர் அதிலேயே திளைத்துவிட்டார். உள்ளத்தில் பகவத் சிந்தனை வலுத்து வர வர அரசனிடம் போகவேண்டும் என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் இருந்து மறைந்து விட்டது. அரசனிடம் போவதை அவர் நிறுத்தி விட்டார். பாகவதரைத் தேடிக்கொண்டு அரசன் வந்தான். பகவத் மகிமையில் மூழ்கி இருந்த பாகவதரைப் பார்த்து நீங்கள் இப்பொழுதுதான் பாகவதம் படித்திருக்கிறீர்கள் என்று அரசன் வணக்கம் செலுத்தினான். தத்துவவிசாரம் செய்பவர்கள் உண்மையை அறிதலில் தீவிரமாக ஈடுபடவேண்டும். அப்பொழுதுதான் தத்துவவிசாரம் செய்வதன் பலன் கிட்டுகிறது. பகவான், பாகவதம், பக்தர் இம்மூன்றும் ஒன்றே என்ற உண்மை ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஒரு நாள் அருள்காட்சியில் தென்பட்டது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆலயத்தில் அமர்ந்திருந்தபோது அருள் ஒளி ஒன்று மூர்த்தியிடமிருந்து கிளம்பி வந்து அவருடைய இருதயத்தையும், பாகவதத்தையும் இணைத்தது. அவ்அருள் காட்சியிலிருந்து பாகவதத்தினுடைய மகிமையையும், பக்தருடைய மகிமையையும் அவர் அறிந்திருந்தார். தத்துவத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்துடன் பாகவதம் படிப்பது ஞானயோகம் ஆகிறது. பகவானிடத்திலும், பக்தர்களிடத்திலும் பேரன்பு பூண்டு ஒழுகுவது பக்தியோகம் ஆகிறது. பக்தர்களுக்குத் தொண்டுபுரிவதுகர்மயோகம் ஆகிறது. இம்முறைகளைக் கையாண்டு சாதனை பயின்று வந்தால் உள்ளத்தில் வைராக்கியம் வடிவெடுக்கிறது. அந்தக்கரணம் அப்பொழுது அடங்கிப் பரம்பொருளைப்பற்றித்தியானம் செய்

கிறது. அந்தக்கரணம் அடங்குதல் சமம் எனப் படுகிறது.

தமம் என்பது புறக்கரணங்களை அடக்கிப் பழகுவதாகும். மனம் ஒடுங்கும்பொழுது பொறி புலன்கள் எல்லாம் தாமாக வழிக்கு வருகின்றன. புறக்கரணங்கள் தெய்வீக மகிமை களை நமக்கு ஞாபகம் ஊட்டுமானால் அவை அடங்கிவிட்டன என்பதற்கு அது அறிகுறியா கிறது. தலையே நீ வணங்காய் என்றும், கண் காள் காண்மின்களோ என்றும், செவிகாள் கேண்மின்களோ என்றும் தம் பொறிகளுக்கு உத்தரவு போட்டு அவைகளைத் தெய்வ வழி பாட்டில் அருளாளர் ஈடுபடுத்துகிறார். ஸ்ரீ ராம கிருஷ்ணர் பொறிகளை முற்றும் தெய்வ வழி பாட்டுக்கென்றே பயன்படுத்தி வந்தார். ஒரு சமயம் அவர் வீதி வழியாகப் போய்க்கொண் டிருந்தபோது விலைமாது ஒருத்தி அவருக்கு எதிராக வந்தாள். அவளைப் பார்த்ததும் ஸ்ரீராம கிருஷ்ணருக்குப் பராசக்தியைப் பற்றிய ஞாபகம் வந்து விட்டது. தாயே, என்று அவள் முன் வீழ்ந்து வணக்கம் செலுத்தினர். அடக் கப்பட்ட பொறி இங்ஙனம் நமக்குத் தெய்வீக ஞாபகத்தை ஊட்டப் பயன்படுகிறது. பொறி களைக் கொண்டு உலகை அறிந்து வருகின் றோம். ஐம்பொறிகளும் தெய்வக் காட்சி காண்பதற்கு உதவுகின்றன. ஐம்பொறிகளைக் கொண்டு தெய்வக்காட்சி நாம் காண முடியு மானால் அது புறக்கரண அடக்கம் அல்லது தமம் என்று சொல்லப்படுகிறது.

அடுத்து நாம் பெறுகின்ற பயிற்சி உபரதி அல்லது விடல் எனப்படுகிறது. நம் பழைய வினைகள் வாசனைகளாக உள்ளத்தில் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றின் சக்தி அல்லது தூண்டுதலைத்தான் இயல்பு என்று சொல்கின் றோம். உடல் சிந்தனை, காமம், பொறாமை முதலிய உணர்ச்சிகள் உள்ளத்தில் தாமாகவே தலையெடுத்து வருகின்றன. அவற்றிற்கேற்ற இயல்பு நம் உள்ளத்தில் இருக்குமானால் பொருந்தாத சிந்தனைகள் உள்ளத்தில் தோன் றிக் கொண்டே இருக்கும். அப்படிச் சிந்தனை கள் தோன்றி வருகிறபொழுது அவற்றிலிருந்து விலகி இருக்கத் தெரிந்து கொள்ளவேண்டும். அப்படி விலகி இருப்பதற்குத்தான் உபரதி என்று பெயர். நம் உள்ளத்தில் இருக்கின்ற வாசனைகளுக்கேற்பப் பொருந்தாத எண்ணங் கள் தோன்றி வருமானால் அவ் எண்ணங் களுக்கு ஆதரவு கொடுக்கின்ற முறையில் நாம் அவற்றை ரசித்துக் கொண்டிருக்கலாகாது. அவைகளை உதாசீனப்படுத்தி அவைகளிடம் இருந்து நாம் சுகம் காணாது அவைகளை விட்டு விலகி இருக்கவேண்டும்.

நம் உள்ளத்தில் எழும் பொருந்தாத எண் ணங்களை அடக்குகின்றபொழுது மனத்தில் துன்ப அலைகளும், சோர்வும், சலிப்புத்தன்மை யும் உண்டாகும். அப்பொழுது நாம் அவைக ளைப் பொறுத்துப் பழகுதல் வேண்டும். மனதை எக்காரணத்தை முன்னிட்டும் மயக்கத்துக்கு உள்ளாக்காது உடலுக்கும், உள்ளத்துக்கும் வரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்வது திதிக்ஷை எனப்படுகிறது. திதிக்ஷையின் மூலம் மனம் உறுதிபடைத்ததாகிறது.

மனதை யாண்டும் நடுநிலையில் வைத்துப் பழகுவது சமாதானம் எனப்படுகிறது. மனது ஆழ்ந்து சத் விஷயங்களில் ஈடுபட்டிருக்க வேண்டும். சாஸ்திரங்களைச் சிரத்தையோடும், பக்தியோடும் படிக்கவேண்டும். பொருந்தாத விஷயங்களிலிருந்து விலகி இருக்கவேண்டும். ஈசுவர மகிமையில் மனம் யாண்டும் திளைத்து இருக்கவேண்டும் மனதில் தோன்றி வரும் உலக விஷயங்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டு மனம் ஈசனுடைய மகிமையிலேயே நிலைத்துவிடுமானால் அது சமாதானம் எனப்படு கிறது.

சாஸ்திரங்களிலும் குரு வாக்கியத்திலும் ஆழ்ந்த விசுவாசம் வைத்து அவற்றை நடை முறைக்குக் கொண்டு வருவதில் ஊக்கம் கொண்டிருப்பது சிரத்தை எனப்படும். ஒரு மனிதனுடைய மேன்மை அவன் கொண்டிருக் கும் சிரத்தையை முன்னிட்டு அமைகிறது. சிரத்தை ஒருவனிடம் எவ்வளவு அதிகம் இருக் கிறதோ அதற்கேற்றவாறு அவன் முன்னேற் றம் அடைகின்றான். சமம், தமம், உபரதி, திதிக்ஷை, சமாதானம், சிரத்தை என்ற இவ் ஆறும் ஷட்குண சம்பத்து என்று சொல்லப்படு கின்றன. நான்குவகை சாதனங்களுள் ஷட்குண சம்பத்து ஒன்றாகும்.

விவேகம், வைராக்கியம், ஷட்குணசம்பத்து என்ற மூன்றையும் அப்பியாசம் பண்ணுகின்ற

பொழுது உள்ளத்தில் அருள்வேட்கை உண்டாகிறது. நீர்வேட்கை உடையவனுக்கு நீரைத் தவிர வேறு ஒன்றும் தேவைப்படுவதில்லை. அதுபோன்று அருள்வேட்கை உடையவனுக்கு ஈசுவரனைத்தவிர வேறு ஒன்றும் தேவையில்லை. அருள்வேட்கை உடையவன் தெய்வத்தை நோக்கி 'உன்னை மறந்தால் உயிர் வாழேன்' என்று பகர்கிறான். 'ஈசா, உன் சிந்தனை என் உள்ளத்தில் இருந்து நீங்குமானால் நான் எப்படி உயிர்வாழ்ந்திருக்கமுடியும்? உன் சிந்தனை இருந்தால்தான் நான் வாழ்ந்திருக்கமுடியும்' என்று ஒருவன் பகர்வானேயானால் அவன் பெற்றிருக்கிற மனநிலையை அருள்வேட்கை என்று பகரலாம். அவ்வருள் வேட்கைக்குத்தான் முமுட்சுத்துவம் என்று பெயர். பொருள்பற்று உடையவர்களுக்குப் பொருளை இழந்துவிட்டால்உயிரே போய்விட்டது போன்ற உணர்ச்சி ஏற்படும். அருள் நாட்டம் உடையவர்களுக்குத் தெய்வத்தை விட்டுப் பிரிந்திருப்பது பெரிய வேதனையைத்தரும். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உள்ளத்தில் அருள்நாட்டம் ஏற்பட்டிருந்தது. தேவியின் காட்சிக்காக அவருடைய உள்ளம் தாங்கமுடியாத வேதனைப்பட்டது. மாலை சந்தியா வேளையில் தேவி ஆலயத்தில் பூஜை நடக்கும்பொழுது மணியடிப்பார்கள். அவ்மணி ஓசையை ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேட்டதும் "தாயே, என் வாழ்நாளில் மற்றும் ஒருநாள் கழிந்துபோய்விட்டது என்பதை மணியோசை அறிவிக்கின்றது. என்வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் இப்படியே கழிந்து கொண்டிருந்தால் என் கதி என்ன ஆவது? உன்காட்சி பெறாமலேயே என்வாழ்க்கை கழிந்துபோய்விடுமோ?" என்ற எண்ணங்கள் அவருடைய உள்ளத்தில் எழுந்துவரத்தாங்கமுடியாத வேதனைப்படுவார். தம் முகத்தைத் தரையில் தேய்த்துக்கொண்டு தேம்பித்தேம்பி அழுது புலம்புவார். ஈசன் காட்சி பெறவேண்டும் என்பதில் அவருடைய உள்ளம் அத்தகைய நாட்டம் கொண்டிருந்தது. இத்தகைய அருள்வேட்கை படைத்தவர்கள் பாக்கியவான்கள் ஆகின்றார்கள்.

"பொருள் வேண்டுமென்றும், போகம் வேண்டும் என்றும் உலகமக்கள் குடம் குடமாகக் கண்ணீர் விடுகின்றார்கள். ஈசா, உன் அருள் வேண்டுமென்று யாராவது ஒரு சொட்டுக் கண்ணீர் உகுக்கின்றார்களா?" என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கேட்கின்றார். உள்ளத்தில் தீவிர அருள் நாட்டம் ஏற்படுகின்ற பொழுது ஈசுவரக்காட்சி கிடைக்கும்.

மாணாக்கர்கள் கல்விகற்கப் பள்ளிக்குச் செல்கின்றார்கள். பொதுவாக மணி அடித்தவுடன் பள்ளியைவிட்டு வெளியேறுவதில் மகிழ்ச்சியுடையவராக இருக்கிறார்கள். மாலையில் பள்ளி முடிந்ததற்கு அறிகுறியாக அடிக்கும் மணியோசையைக் கேட்கும்போது "மேலும் என் வாழ்க்கையில் ஒருநாள் கழிந்துவிட்டதே, கல்வியில் நான் இன்னும் முன்னேறவில்லையே!" என்று ஒரு மாணவன் வருந்துவானாகில் அது கல்வியில் அம்மாணவனிடமுள்ள ஆர்வத்தைக் குறிக்கிறது. அத்தகைய ஆர்வமுடைய மாணாக்கன் கல்வித்துறையில் விரைவில் முன்னேறுகின்றான். கல்வியில் நாட்டமுடைய மாணாக்கன் மணி அடித்துவிட்டதே என்று கவலைப்படுகிறான். கல்வியில் நாட்டமில்லாத மாணாக்கன் மணியடிக்கவில்லையே என்று கவலைப்படுகிறான். காலம் கிடைப்பதற்கு அருமையானது. கழிந்துபோன காலம் திரும்ப வருவதில்லை. காலத்தைப்பற்றிய உண்மை அதுவாக இருக்க அருள் நாட்டம் படைத்தவர்கள் காலத்தை மிகவும் கண்ணும் கருத்துமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். தெய்வக்காட்சி பெறாத நாள் வீணாகப் போய்விட்டதே என்று அருள் உள்ளம்படைத்தவர்கள் கவலைப்படுகிறார்கள். "பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே-" அருள் உள்ளம் படைத்த அருளாளர் தம் உள்ளக்கிடக்கையை இங்ஙனம் வெளியிடுகின்றார். மேலாம் நிலையை அடைந்தாகவேண்டும் என்ற உணர்ச்சி உள்ளத்தை உறுத்திக் கொண்டிருப்பவர்களுக்குச் சாதனை தீவிரமாக நிகழ்கிறது. நொடிப்பொழுதையும் வீணாக்காது மனதை யாண்டும் ஈசுவர நாட்டத்திலேயே செலுத்திக் கொண்டிருப்பவர்கள் முமுட்சுக்கள் ஆவார்கள்.

விவேகத்தையும் வைராக்கியத்தையும் வளர்த்துச் சுயநலமற்றுக் கருமம் புரிகின்றவர்களுடைய உள்ளம் உயர்நிலையை அடைந்துவிடுகிறது. உள்ளத்தில் அருள் வேட்கை வளர்ந்து வருகின்ற அளவுதான் நாம் சாதனையை நன்கு செய்தவர்கள் ஆகின்றோம்.

உள்ளத்தில் அருள்நாட்டம் எவ்வளவுக்கெவ்வளவு பொங்கி வருகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நாம் நன்கு வாழ்ந்தவர்கள் ஆகின்றோம். நம் உள்ளத்தில் எத்தகைய அருள்நாட்டத்தை வளர்த்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்த்தால் நாம் இதுவரை நன்கு வாழ்ந்திருக்கிறோமா என்பது விளங்கும். ஒரு நாளைக்குத் தியானம் செய்யாவிட்டால் மனது கஷ்டப்படுகிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தியானம் செய்யாததைக் குறித்து மனம் சிறிதும் கவலைப்படாமல் இருந்தால் அவ்வுள்ளத்தில் அருள்நாட்டம் வடிவெடுக்கவில்லை என்பது விளங்குகிறது. தியானம் செய்யாது ஒருநாள் போய்விட்டதே என்று மனம் கவலைப்படுமாகில் நாம் முன்னேறி வருகிறோம் என்பதற்கு அது அறிகுறியாகும்.

“சொல்லால் அடங்காச் சுகக்கடலில் வாய்மடுக்கின்
அல்லால்என் தாகம் அறுமோ பராபரமே ”

என்று தாயுமானவர் தமது அருள் உள்ளத்தை வெளியிடுகின்றார். தம் உள்ளத்தில் அருள் உணர்வு ஓங்கி வருகின்றபோது அத்தகைய மனநிலை நமக்கும் உண்டாகிறது. உலக சம்பந்தமானதைக் குறித்துத் துக்கப்படுவது பொருந்தாது. பெருநிலை வந்து வாய்க்கவில்லையே என்று துக்கப்படவேண்டும். பெருநிலை குறித்து வரும் துக்கம், துயரம் பேரின்பத்திற்கு வழி காட்டுகிறது. பொருள் பற்றையும் போகப் பற்றையும் விட்டொழித்து அருள்பற்றை வளர்க்கும் அருளாளர்களாக நாள்தோறும் நம்மைத்திருத்தி அமைத்துக்கொண்டுவரவேண்டும். அருள் நிலையில் உறுதிபெறும் மனதை நாம் பெற்று வருவது பண்பாட்டின் அறிகுறியாகும். அருள்நிலை படைத்த மக்களாக நாம் மாறி அமைகின்றபொழுது நமக்கும் உலகுக்கும் நாம் பயன்பட்டவர்கள் ஆகின்றோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஓர் உபமானத்தின்மூலம் நான்கு வகையான மக்களை விளக்குகிறார். செம்படவன் ஒருவன் நீரில் வலைவீசி மீன்பிடிக்க முயல்கின்றான். செம்படவனுடைய வலைக்குள் வராது சில மீன்கள் தப்பித்துக்கொள்கின்றன. சிலமீன்கள் வலைக்குள் வந்த பின் வெளியேறுவதற்குத் தீவிரமாக முயன்று வலையிலிருந்து தப்பித்து ஓடிவிடுகின்றன. சில மீன்கள் வலைக்குள்ளிருந்துகொண்டு வெளியேறுவதற்காகத் தீவிரமாக முயல்கின்றன. சில மீன்கள் எவ்விதத்திலும் முயலாது வலைக்குள் கிடந்து செம்படவனுக்கு இரையாகின்றன. மக்களுள் நித்திய சித்தர்கள் என்பவர்கள் வலைக்குள் வராத மீன்களுக்கு நிகராகின்றார்கள். ஜீவன் முக்தர்கள் எனப்படுபவர்கள் வலையிலிருந்து தப்பிப் போன மீன்களுக்கு நிகராகிறார்கள். முமுக்ஷுக்கள் என்பவர்கள் வலையிலிருந்து தப்ப முயல்கின்ற மீன்களுக்கு நிகராகின்றார்கள். பந்தப்பட்ட மனிதர்கள் வலைக்குள் கிடந்து செம்படவனுக்கு இரையான மீன்களுக்கு நிகராகிறார்கள்.

மாயை வலையில் அகப்படாது தப்பித்துக் கொண்டவர்கள் நித்திய சித்தர்களாகின்றார்கள். மாயை வலையில் அகப்பட்ட பின் சாதனையின்மூலம் அதைக்கிழித்துக்கொண்டு வெளியேறியவர்கள் ஜீவன் முக்தர்களாகின்றார்கள். மாயை வலையில் அகப்பட்டுக் கொண்டதை அறிந்து அதிலிருந்து தாம் வெளியேற வேண்டுமென்று தீவிரமாக முயலுகின்றவர்கள் முமுட்சுக்கள் ஆகின்றார்கள். மாயை என்னும் வலைக்குள் அகப்பட்டுக்கொண்டு இருக்கிறோம் என்பதை அறியாது உலக போகத்தில் மூழ்கிக் கிடப்பவர்கள் கட்டுண்ட மனிதர்கள் ஆகின்றார்கள். உலகசுகம் நிலையானதென்றும், உலகசுகத்துக்கப்பால் ஒன்றுமில்லை என்றும் எண்ணிக் கொண்டிருப்பவர்கள் பந்தப்பட்டவர்களாகின்றார்கள். உலக சுகத்தைப் பல பிறவிகளில் அனுபவித்திருப்பதால் அவர்கள் மனம் அதை எளிதில் விடுவதற்கு ஆயத்தமாயில்லை. உலக சுகத்தைக்காட்டிலும் மேலான சுகம் ஒன்று உண்டு என்பதை அவர்கள் உள்ளம் ஏற்றுக்கொள்வதில்லை. பன்றி சேற்றில் விழுந்து படுத்துக் கிடப்பதைத்தான் சுகமென்று எண்ணுகிறது. உலக சுகத்தை நிலையானதென்று அதில் அழுந்திக் கிடக்கும் மனது பன்றிக்கு நிகராகிறது. மனதை அக்கீழ்மையினின்றும் மீட்டெடுக்க வேண்டும். உலகக் கட்டிலிருந்து விடுபட்டு நித்திய சித்தர்கள் நிலையை அடைவதற்கு விவேகம், வைராக்கியம், ஷட்குண சம்பத்து, முமுட்சுத்துவம் என்ற நான்கு சாதனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்நான்கு சாதனங்களைக் கையாளும் சிறந்த சாதகர்களாக நாம் விளங்கத் திருவருளை வேண்டி நிற்போமாக. (முற்றும்)

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M.Com.)

6. இளமையும் அழகும் ஒருவழி நில்லா :

தான் வழிபடும் தெய்வமாகிய சிவபெருமான் முன்னிலையில்கூடத் தன் பெருமைக்குக் குறைவு வரும் வண்ணம் பணிந்து இரங்கித் தாழ்ந்து எதையும் வேண்டிக்கொள்ளாத தற்பெருமை கொண்ட தசகண்டன், கொடிய விஷத்தை அமுதம் என்று விரும்பிச் சீதையின் மேற் கொண்ட அடங்காத காமத்தால் தன் கௌர வம் அழியும்படி அவளிடம் இரங்கி வேண்டு கின்ற நிலைமைக்குத் தாழ்ந்து விடுகின்றான். மனத்தில் ஒருபுறம் இந்தக் காமம் இருந்தாலும் இன்னொருபுறம் அவனுடைய கௌரவம் கேவ லம் ஒரு பெண்ணிடம் பிச்சை கேட்பதா என்று இடித்துரைத்து அவனை வெட்கப்படுத் தவும் செய்கின்றது. இவ் இரண்டு உணர்வு களின் போராட்டத்தில் சிக்கிய இராவணன் சீதையிடம் கூசிக் கூசிப் பேச ஆரம்பிக் கின்றான் :

"தேவி! என்றுதான் எனக்கு அருள் செய் யப்போகின்றாய்? நீ 'இன்று இசைந்து விடு வாய்' 'இன்று இசைந்துவிடுவாய்' என்று நான் எண்ணி எண்ணிப் பல 'இன்றைய தினங்கள்' கழிந்துவிட்டன! 'இன்றில்லாவிட் டால் நாளைக்காவது நீ இசைவாய்' என்று நினைத்து நினைத்துப் பல 'நாளைய தினங் களும்,' கழிந்துபோய்விட்டன' உன்மேலுள்ள ஆசை நிறைவேறாமல் நான் இறந்துபோன பின் தான் உன் மனம் இசையும் போலும்! இம் மூன்று உலகங்களிலும் தேவருடனும் மூவருட னும் நான் செய்த போர்களில் வெற்றியைத் தவிர வேறு கண்டிலேன்! ஆனால் உன் பொருட்டு என்மீது மன்மதன் தொடுத்த போரில் எளிமைப்பட்டுவிடுவேன் போலிருக் கின்றதே ஜானகி! அந்தப் போரிலும் நான் வெற்றிபெற என்மீது கருணை காட்ட மாட் டாயா?

"இந்தப் பொன்னிலங்கையாம் தென்னிலங் கையின் ராஜபோகத்தை விட்டுவிட்டுக் கேவ லம் மனிதனுடன் வாழும் வாழ்வும் ஒரு வாழ்க் கையா என்ன? பெருந்தவம் செய்யும் ரிஷி களும், மெய்ப்பொருளுணர்ந்த அறிஞரும் விரும்புவது பிரமன் முதலிய தேவர்கள் வாழும் தேவருலகம்தான்! ஆனால் அந்தத் தேவ லோகமே என் சொற்படிதான் நடக்கின்றது. எனவே நீயும் ஏன் என்னை ஏற்றுக்கொள்ளக் கூடாது? படைப்புக் காலத்தில் பிரமன் உன் மேனியில் இடையில்லாமல் செய்தது போன்று உள்ளத்தில் கருணையில்லாமல் படைத்துவிட் டான் போலும்! தேவி! இந்நிலவுலக வாழ்வு நிலையற்றது; இந்த அழகும் இளமையும் நிரந் தரமல்ல! எனவே இந்த இளமைப் பருவத்தை இன்பமுடன் அனுபவிக்காமல் விட்டுவிட்டுக் காட்டிலும், கனிகளிலும் மரவுரியிலும் கழித்து விட்டால் பின்னர் முதுமையில் எந்த இன் பத்தை அனுபவிப்பது? துள்ளிஓடும் வெள் ளோட்டம் போன்று இளமையும் அழகும் திரும்பி வரப்போவதில்லை. இப்படியே உன் இளமையை வறுமையாக்கிக் கழித்துவிடப் போகிறாய் போலும். உன்னை நினைத்து நானும் உயிர்விட்டுவிடப் போகின்றேன். உன் பொருட்டு உயிர்விட நான் தயங்கவில்லை; ஆனால் நான் இறந்துவிட்டால் உன்னுடைய பண்பையும் அழகினையும் போற்றுவதற்கு யாரும் இருக்கமாட்டார்களே என்றுதான் வருந்துகிறேன்.

"பல நற்பண்புகளுக்கு உறைவிடமான ஜனகன் வம்சத்தில் வந்த உனக்குக் கருணையும் ஈகையும் இல்லாமல் போனதென்னவோ? நான் உன்னைக் கவர்ந்து வரும் முன்பே உன் ராமன் இறந்துபோனான். இறக்கும் தறுவாயில் அவன் எழுப்பிய சத்தத்தை நீ கேட்கவில்லையோ? அந்தக் குரலை நம்பாமல் ராமன் வருவான் என்று நீ எதிர்பார்ப்பது பேதைமை. நீ செய்த நல் வினைப் பயனால் என்னிடம் வந்து சேர்ந்திருக் கின்றாய்! உன்னிடம் வலியவரும் இப்பெருஞ் செல்வத்தை நிராகரிப்பது என்ன புத்திசாலித் தனம்? நீ இங்கு வந்ததால் இந்த இலங்கையின் செல்வமும் நானும் உயர்ந்தோம் என்ற புகழை ஏற்றுக்கொள்ளாமல் உன் வரவினால் இந்த இலங்கையும் செல்வமும் அழிந்தன என்ற பழியை நீ ஏன் ஏற்றுக்கொள்ள விரும்புகின் றாய்? என்னை ஏற்றுக்கொண்டால் மூவுலகத்

திற்கும் நீ தலைவியாவாய். புவனங்களையெல்லாம் அடிமைப்படுத்திய என்னை உன் அடிமையாக ஏற்றுக்கொண்டு என் மீது அருள் புரிவாயாக" என்று கூறித் தலைமீது குவித்த கரங்களுடன் சீதாபிராட்டியின் முன் தரையில் விழுந்து வணங்கினான் பாதகராவணன்.

வான்மீகத்தில் ராவணன் சீதையிடம் தன் உள்ளக்கிளர்ச்சியை வெளியிட்ட விதத்தையும் கம்பனில் அவனுடைய பேச்சினையும் ஒப்பிட்டுப் பார்ப்பது சுவையானது. சீதையின் மேனி அழகு பற்றிய வர்ணனை இரண்டு காவியங்களிலும் ராவணன் பேச்சில் காணப்படுகின்றது. முகஸ்துதிக்கு எளிதில் மயங்கிவிடும் பெண்களின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சியே இது. ராமன் சீதையைத் தேடி வரமாட்டான். சீதையைக் காண அவனால் முடியாது. இளமையும் அழகும் நிலையற்றவை. இவை இருக்கும் போதே வாழ்க்கையை இன்பமாகக் கழித்துவிட வேண்டும் என்பன போன்ற கருத்துக்கள் இரண்டு காவியங்களிலும் பொதுவாகக் காணப்படுபவை. ஆனால் சீதையின் சுற்றத்தினருக்கும் தந்தைக்கும் அன்பும் ஆதரவும் காட்டுவதாக ஆதி காவியத்தில் ராவணன் பேசிய செய்தியைக் கம்பன் ஏனோ விட்டுவிடுகின்றான். இரண்டு காவியங்களையும் இந்தக் கட்டத்தில் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பெண்களை வசப்படுத்தும் பேச்சு வன்மையில் வான்மீகியின் ராவணன் மிகவும் தேர்ச்சி பெற்றவனாகக் காணப்படுகின்றான் என்பது தெளிவாகும்.

7. எரிமலை வெடித்தது :

காமப் பித்தம் தலைக்கேறிப் பிதற்றிய தசகண்டனுக்குச் சீதை பதில் சொல்லுகின்றாள். ராவணனுடைய பேச்சினை இரண்டு மகாகவிகளும் எப்படிப் பாடியிருக்கின்றார்கள் என்று பார்த்தது போன்று சீதையின் பதிலையும் இரண்டு காவியங்களிலும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். முதலில் வான்மீகத்தைப் பார்ப்போம்.

ராவணனுடைய பேச்சினைக் கேட்ட சீதை आर्ता—துன்பமுற்றவளாய், दीना—நடுங்கியவளாய், दीनस्वरा—குரல் ஒடுங்கியவளாக, दुखार्ता—துன்பத்தில் மூழ்கியவளாக, रुदती—அழுதுகொண்டு, वेपमाना—நடுநடுங்கியவளாகத் தன் முன் கிடந்த துரும்பு ஒன்றை எடுத்துத் தனக்கும் ராவணனுக்குமிடையே போட்டு அதனைப் பார்த்தே शुचिस्मिता—ஏளனமான சிரிப்புடன் பதில் கூறுகின்றாள்:—

"அரக்கத் துரும்பே! என்னிடத்திலிருந்து மனத்தை விலக்கி உன் இனத்தாரிடத்தில் இணைத்துக்கொள்ள முயற்சி செய்! பாவம் செய்தவன் பரகதியை விரும்புவதுபோன்று நீ என்னை விரும்புவதும் அபத்தம்! உயர்ந்த குலத்தில் பிறந்து உத்தமமான குலத்தில் புகுந்த நான் நீ விரும்பும் நீசச் செயலைச் செய்யமாட்டேன். முறைப்படி மணந்துகொண்ட மனைவியரை நீ எப்படிக் காப்பாற்றுவாயோ அதேபோன்று பிறன் மனைவியையும் நீ கௌரவமாக நடத்தவேண்டும். உனக்கு வாய்த்த மனைவியரிடம் சுகம் பெறுவதை விட்டுவிட்டுச் சான்றோர் பழிக்கும் கொடுஞ்செயலை ஏன் செய்கின்றாய்? தன் மனைவியரிடம் எவன் திருப்தியடையாமல் அறிவிழந்து புலன்களைத் தடுமாறவிட்டு முன்பின் யோசியாமல் பிறர் மனைவியை விரும்புகிறானோ அவனுக்கு அம்மாதர் நாசத்தையே கொண்டுவருவார்கள்.

"உனக்கு நல்ல அறிவுரை கூறும் ஞானிகள் இந்த இலங்கையில் இல்லையா? அல்லது அப்படி அறிவுரை கூறுவோரை நீ அவமதித்து வருகின்றாயா? அரக்கர்குலம் அழிவதற்காகவே முக்காலங்களையும் உணர்ந்த அந்த ஞானிகளின் நல்லுரையை நீ புறக்கணித்து வருகின்றாய் போலும். சீரும் சிறப்பும் வாய்ந்த நாடுகள் அறத்துறை மறந்த அறிவற்ற அரசனை அடைந்து அவை இருந்த இடம் தெரியாமல் மண்ணோடு மண்ணாகி விடுகின்றன என்பதை நீ அறியாயோ? இந்திரலோகம்போன்ற இவ்விலங்கை மாநகரம் உன் ஒருவனுடைய தீச்செயலால் விரைவில் அழியப்போகின்றதை நீ உணரவில்லையே! ஒழுக்கமின்றி முறைகெட்ட மன்னன் அழிந்தால் குடிமக்கள் மகிழ்ச்சியடைவர்; ஏன்! அந்த நாட்டிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் ஆனந்தமடையும்.

"உன்னுடைய மூவுலகாட்சியும், குபேர செல்வமும் எனக்குத் தூசிக்குச் சமானம்! சூரியனும் அதன் ஒளியும் எவ்வாறு பிரிக்க முடியாதனவோ அவ்வாறே ராமனிடமிருந்து என்னைப் பிரிக்க முடியாது. ஐம்புலன்களை

அடக்கி அஹங்கார-மமகாரம் அகற்றித் தவம் புரிந்த ஞானிகளிடமிருந்து அவர்களுடைய ஞானத்தைப் பிரிக்கமுடியாதது போன்றே என்னையும் ராமனிடம் இருந்து பிரிக்கமுடியாது. சரணடைந்தவர்களைக் காப்பாற்றும் கருணை வள்ளல் காகுத்தன். இப்போதாவது என்னை அவரிடம் திருப்பிக்கொண்டு போய் விட்டுவிட்டாயானால் நீ செய்த பிழையையும் பொறுத்து உனக்கு உயிர்ப்பிச்சை கொடுப்பார். தர்ம மூர்த்தியான அவருடைய கூட்டுறவைப் பெற்றால் உனக்கு எல்லா நலன்களும் உண்டாகும். அவ்வாறின்றிப் பிடிவாதத்துடனிருந்தாயானால் உனக்கு மரணம் நிச்சயம்.

"ஏவப்பட்ட வஜ்ராயுதம் கூடச் சில சமயம் இலக்கினைவிட்டு விலகி விடலாம்; எமனும் கூடச் சில சமயம் உயிர்களை எடுக்காமல்விட்டு விடலாம்; ஆனால் ராமனுடைய கோபத்திலிருந்து நீ தப்பித்துவிட முடியாது. இடி முழக்கம் போன்ற கோதண்டத்தின் நாண் ஒலியை நீ கேட்கப்போகின்றாய்! ராமனாலும் இலக்குவனாலும் ஏவப்பட்ட கூர்மையான விஷம்போன்ற அம்புகள் பாம்புகளைப்போன்று சீறிக்கொண்டு வந்து இந்த இலங்கையைச் சின்னாபின்னம் ஆக்கப்போகின்றன. இலங்கை முழுவதும் ராமனுடைய பாணங்களாலும் அரக்கர்களின் பிணங்களாலும் நிரம்பப்போவதை நீ காணப் போகின்றாய். அரக்கப் பாம்புகளை அயோத்தியின் கருடர்கள் அழித்து நாசம் செய்யப் போவது நிச்சயம். மூவுலகத்தையும் ஈரடியால் அளந்த திருமால் போன்று மூன்று உலகங்களிலும் வாழ்கின்ற அரக்கர் குலத்தை அடியோடு அழித்துவிட்டு என்னை மீட்பார் ராகவர்.

"அரக்கப்பதரே! பதினாலாயிரம் அரக்கரை ராமன் அழித்தது கண்டு அவரில்லாத சமயம் பார்த்து வந்து வஞ்சனையால் என்னைச் சிறையெடுத்தாய். ஆண்சிங்கங்களான ரகு வீரர்களை ஏமாற்றிப் பெண்ணைத் திருடிக் கொண்டு வந்த கோழை நீ! ஆண் புலிகளான அவர்கள் எதிரில் நிற்கக்கூட அருகதையற்ற நாயினும் கடைப்பட்டவன் நீ! அவர்களோடு வரப்போகும் யுத்தத்தில் உனக்கு அழிவு நிச்சயம். சூரியனைக் கண்ட பனிபோல் ஆதித்தனாகிய ராமனுக்கு முன் அரக்கர் குலம் மறைந்து விடப்போகின்றது. ராமனுடைய தாக்குதலிலிருந்து தப்ப முயன்று நீ இந்திரன், குபேரன், வருணன் மற்றும் தேவர்கள் மூவர்கள் முதலிய யாரிடம் சென்றாலும் சரி, ஆயுள் முடிந்த மரம் இடிக்குத் தப்பாததுபோன்று தாசரதியின் கணைகளிலிருந்து நீ தப்பமுடியாது!"

— சுந்தர சர்க்கம். 21

சீதையின் பதில் முதலில் அமைதியாக ஆரம்பித்துப் போகப்போக வேகம் அதிகமாகிக் கொண்டே வந்து இறுதியில் எரிமலை சீறியது போன்று முடிவதைக் கவனிக்கவேண்டும். புகைந்து, பொங்கிப் பின்னர் சீறி எழும் எரிமலைபோன்றது அவள் பேச்சு என்பதை நினைவில்கொள்வது அவசியம். தயங்கித் தயங்கிப் பேச ஆரம்பித்த சீதை இறுதியில் ராவணனுடைய ஆட்சியையும் செல்வத்தையும் வீரத்தையும் கடுமையாக விமர்சனம் செய்ய முனைகின்றாள். பத்து மாதங்களாக அசோக வனச் சிறையிலிருந்ததால் அவளுக்கு ஏற்பட்ட உடல் நலிவும் உள்ளச் சோர்வும் அவளுடைய வீர உணர்வை ஒரு சிறிதும் பாதிக்கவில்லை என்பதற்கு இந்தப் பேச்சு ஒரு நல்ல சான்றாக அமைகின்றது.

8. யானையும் முயலும்:

சீதையினுடைய இச் சொல்லம்புகளுக்கு முன்னால் ராவணன் திணறிப்போகின்றான். பொங்கிவரும் சினத்துடன் சீதையிடம் வெடிக்கின்றான்: "இந்தப் பெண்களே கெஞ்சினால் மிஞ்சுவார்கள், மிஞ்சினால்கெஞ்சுவார்கள். உன் மேலுள்ள காதல் என்னுடைய கோபத்தை, தறிகெட்டு ஓடும் குதிரைகளைக் கட்டுப்படுத்தும் சாரதி போன்று கட்டுப்படுத்திவிட்டது. அதனால்தான் நீ பிழைத்திருக்கின்றாய். நீ சொன்ன ஒவ்வொரு வார்த்தைக்காகவும் உன்னைக் கொடுமைப்படுத்திக் கொல்ல வேண்டும்! ஆனால் உன் மேலுள்ள காதலால் உன்மேல் எனக்குக் கருணையே உண்டாகின்றது. மைதிலீ! உன் விருப்பத்திற்கு மதிப்புக் கொடுத்து, உன்னுடைய புறக்கணிப்புகளுக்காகக் கோபப்படாமல், உன்னைப் பலாத்காரம் செய்யமாட்டேன் என்று நான் உனக்குக் கொடுத்த காலத்தவணையில் இன்னும் இரண்டு மாதங்கள் எஞ்சியிருக்கின்றன. அதற்குள் உன் மனத்தை மாற்றிக்கொண்டு என்னை ஏற்றுக்கொள்; பிடிவாதம் கொண்டிருந்தாயானால்

என் காலை உணவிற்காகச் சமையற்காரர்கள் உன்னைத் துண்டு துண்டாக வெட்டுவார்கள்.

—சுந்தர சர்க்கம் 22.

அரக்கர் தலைவனின் இந்த மிரட்டலைக் கேட்ட சீதை, ராவணன் நினைத்தது போல் நடுங்கி மயங்கி விழுந்துவிடவில்லை. மாறாக அவனை மேலும் சாடுகின்றாள்:-

“உன்னுடைய நலத்தில் பற்றுக்கொண்டவன் எவனும் இந்த இலங்கையில் இல்லை போலும்! அதனால்தான் அழிவுப்பாதையிலிருந்து உன்னைத் தடுத்துத் திருத்த இங்கு ஆள் இல்லை. தர்மாத்மாவான இராமரின் பத்தினியான என்னை இந்த மூன்று உலகங்களிலும் வேறு எந்த மூடனாவது மனத்தில் நினைப்பானா என்ன? அரக்கப் பதரே! அளவில்லாத ஆற்றலுடைய இராமன் மனைவியாகிய என்னைப் பார்த்து இழிவான வார்த்தைகள் பேசிய நீ எப்படி இராமனுடைய கணைகளிலிருந்து தப்பி ஓடப்போகின்றாய்? யானையின் கால்களுக்கிடையில் நசுக்கப்பட்டுச் சாகும் முயல் போன்று நீ அழியப்போகின்றாய். இஷ்வாகு வம்சத்து நாதனை இப்போது நீ கேவலமாகப் பேசுகின்றாயே உனக்கு வெட்கமாக இல்லையா? அன்று அவர் இல்லாத போதுதானே திருட்டுத்தனமாக என்னை எடுத்து வந்தாய்? துஷ்டனே! என்னைப் பார்த்துக்கொண்டிருக்கும் உன் கொடுமையான கண்கள் ஏன்தான் இன்னும் தரையில் தெறித்து விழாமல் இருக்கின்றனவோ? அறத்தின் நாயகனான இராமனின் மனைவியும் அரசர்க்கு அரசரான தசரதன் மருகியுமாகிய என்னிடம் இழிமொழி பேசிய உன் நாக்கு இன்னும் ஏன் தான் அறுந்து விழாமல் இருக்கின்றதோ? உன்னுடைய இந்தப் பாவச்செயலுக்காக என் கற்பின் திறத்தால் உன்னைச் சுட்டுப் பொசுக்கிச் சாம்பலாக்கியிருப்பேன்! ஆனால் அவ்வாறு செய்வதற்கு அறத்தின் மூர்த்தியாகிய என் நாதனுடைய ஆணை இல்லாமையாலும், அப்படிச் செய்தால் கோதண்டராமனின் வீரத்திற்குக் குறைவு ஏற்படும் என்பதாலும்தான் அவ்வாறு செய்யாமலிருக்கின்றேன் என்பதை உன் நினைவில் நிறுத்திக்கொள். உத்தம இராமச்சந்திர மூர்த்திக்கு உரியவளான நான் யாராலும் திருடப்பட முடியாதவள்தான். ஆனால் உன்னால் திருடப்பட்டேனென்றால் அதற்குக் காரணம் உன்னை அழிப்பதற்குத் தெய்வமே பார்த்து இப்படி விதித்திருக்கின்றது.”

—சுந்தர. சர்க்கம் 22.

சீதையின் இந்த வீர மொழிகளில் இராவணனைத் தன் கற்பின் திறத்தால் அழிக்க முடியும் என்றும் இராமனுக்காகத் தான் அவ்வாறு செய்யாமலிருப்பதாகவும் வருவது குறிப்பிடத் தக்கது. கம்பன் இதே கருத்தை வேறொரு சந்தர்ப்பத்தில் சீதை பேசுவதாக அமைத்திருப்பதைப் பின்னர் பார்ப்போம்.

9. அடிபட்ட புலி :

சீதையின் வீராவேச மொழித் தாக்குதலுக்கு உட்பட்ட ராவணன் ரத்தம் போன்று சிவந்திருந்த தன் கண்களை உருட்டி விழித்துச் சீதையையே இமைக்காமல் சிறிது நேரம் முறைத்துப் பார்த்துக்கொண்டே இருந்தான் என்கின்றார் வான்மீகி முனிவர். ராவணனிடமிருந்து இப்படியொரு மெய்ப்பாடு வெளிப்பட்டதாக முனிவர் கூறுவது மிக்க சிறப்புடைய மனோதத்துவக் கருத்தாகும். ஒரு பெண்ணிடம் வாக்குவாதத்தில் தோற்றுவிட்ட ஆணுக்கு முதலில் வருவது கோபம்; அக்கோபத்தின் விளைவாக அவளைத் தண்டிக்க முற்படுவான்; ஆனால் அவ்வாறு தண்டிக்க இயலாத நிலையில் அவளை முறைத்துப் பார்த்துக்கொண்டே இருப்பதைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை அவனுக்கு. அதைத்தான் இங்கு செய்கின்றான் ராவணன் என்கின்றார் முனிவர். நாவினாலும் கையினாலும் தாக்கமுடியாத நிலையில் கண்களால் தாக்க நினைப்பது போன்றது இது. தன் தோல்வியை நிவர்த்திக்க என்ன செய்வது என்று ஒருகணம் ஆண் மனம் தடுமாறும் போது, அத்தடுமாற்றம் சினமாக உருமாறிக் கண்கள் மூலமாக வெளிப்படுகின்றது. அற்புதமான இந்த மெய்ப்பாட்டை ஆதிகவியின் கைவண்ணத்தில் காணலாம் :

सीताया वचनं श्रुत्वा परुषं राक्षसाधिपः ।
विवृत्य नयने क्रूरे जानकीमन्ववैक्षत ॥

—சுந்தர. சர்க்கம் 22; சுலோகம் 24.

[सीताया—சீதையினுடைய परुषं—கடுமையான वचनं—சொற்களை श्रुत्वा — கேட்டு राक्षसाधिपः—அரக்கர்கோன் क्रूरे—ரத்தமாய்ச் சிவந்திருந்த नयने विवृत्य — இரண்டு கண்

களையும் உருட்டி விழித்து ஜானகீம் — ஜானகியை அன்வைக்ஷத—கண் இமைக்காமல் பார்த்தான்.

பெண்ணிடம் சொற்போரில் தோல்வியுற்று, அதே சமயம் அவளைத் தண்டிக்கவும் முடியாமல் பெருமூச்சு விட்டுக்கொண்டு அவளையே முறைத்துப் பார்க்கும் மெய்ப்பாட்டையே தசரதனும் மேற்கொண்டான் என்பதை வான்மீகியின் அயோத்யாகாண்டத்தில் காண்கின்றோம். கைகேயியுடன் நடைபெற்ற சொற்போரில் தசரதன் தோற்றுக்கொண்டே வந்தான். தசரதனின் ஒவ்வொரு சமாதானப் பேச்சிற்கும் சாட்டையடியாக வெளிவந்தன கைகேயியின் பதில்கள். கொள்ளிக்கட்டையின்மேல் ஒரு புழு விழுந்து தன் உடலின் ஒரு பகுதியைப் புண்ணாக்கி விடுகின்றது; அதனைத் தாங்காமல் தன் உடலை அப்படியும் இப்படியுமாக அந்தப் புழு திருப்புகின்றது; அவ்வாறு செய்வதால் அதுவரையில் புண்ணாகாமலிருந்த உடலின் ஏனைய பகுதிகளும் கொள்ளிக்கட்டையின் தீக்கு இரையாகிப் புண்ணாகி விடுவது போன்று தசரதன் கைகேயிடம் அப்படியும் இப்படியுமாகப் பேசி எப்படியாவது ராமன் வனம் போகாமல் தடுக்க முயன்றபோது கொள்ளிக்கட்டை போன்ற கைகேயியின் நாவிலிருந்து கிளம்பிய அனலில் தசரதன் உள்ளம் எல்லாம் புண்ணாகப் போய்விட்டது. அவளிடம் மேலும் பேசுவதில் பயனில்லை என்ற நிலையில், அவளைத் தண்டிக்கவும் இயலாத சூழ்நிலையில் தசரதன் கைகேயியைக் கண் இமையாது விழித்துப் பார்த்துக்கொண்டே பேசாது சில நேரம் இருந்துவிட்டான் என்று கூறுவார் ஆதிகவி:

> नाभ्यभाषत कैकेयीं मुहूर्तं व्याकुलेन्द्रियः ।
> प्रैक्षतानिमिषो देवीं प्रियामप्रियवादिनीम् ॥

–வான்மீகி, அயோத்யாகாண்டம், சர்க்கம் 12.
[சுலோகம் 52.

[முஹூர்த்தம் ஒரு முகூர்த்த காலம் (சிறிது நேரம்) வ்யாகுலேந்த்ரிய: — தசரதர் ஐம்புலன்களும் கலங்கப் பெற்றார்; அப்ரியவாதிநீம் — கொடுமையான சொற்களைத் தயங்காமல் பேசிய ப்ரியாம்தேவீம் — ஒரு காலத்தில் அன்பு செலுத்திய மனைவியாகிய கைகேயீம்— கைகேயியை அநிமிஷ:—கண் இமைக்காமல் ப்ரைக்ஷத— விழித்துப் பார்த்துக்கொண்டேயிருந்தார்; அப்யபாஷத ந - வாய்திறந்து பேசாமலிருந்து விட்டார்.

கைகேயியின் சொல்லம்புகளுக்கு முன்னர் தசரதன் தன் நிலை இழந்து இமை கொட்டாது அவளையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது போன்று சீதையின் சீற்றத்திற்கு ஆளாகிய ராவணன் செயலற்று அவளை முறைத்துப் பார்த்துக் கொண்டே இருந்தான். பின்னர் ஒருவாறு தெளிந்து சினத்துடன் சீதையைப் பார்த்துச் சீறினான்:–

"மதிகெட்டவனும் நாடிழந்தவனும் செல்வம் இழந்தவனுமாகிய ஒரு மனிதனை நம்பிய பேதையே! இருளைச் சூரியன் விழுங்குவது போன்று உன்னை இப்போதே கொன்றுவிடுகின்றேன்! என்று கத்திக்கொண்டே சீதையை நெருங்கிக் கோபத்துடன் முகத்தை விகாரப்படுத்திப் பயமுறுத்தினான். அருகிலிருந்த காவல் அரக்கியரிடம் "எந்த உபாயத்தினாலாவது இவளை எனக்கு உடன்படுமாறு செய்யுங்கள்" என்று எச்சரித்தான். அப்பொழுது ராவணன் மனைவியருள் ஒருத்தியான தானியமாலி அவனை அணைத்துக்கொண்டே, "மன்னர் மன்னா! மதிகெட்ட இந்த மானிடப் பெண்ணை சீதையுடன் உமக்கு என்ன சேர்க்கை? என்னுடன் உல்லாசமாக இருப்பீர்! உம்முடைய செல்வத்தை அனுபவிக்கும் வண்ணம் இவளுக்குப் பிரம்மாவின் தலை எழுத்து இல்லை!" என்று அவனை அப்புறம் அழைத்துச் செல்ல முற்பட்டாள். மேகத்துக்கு நிகரான ராவணனும் அவளுடன் சிரித்துக்கொண்டே பூமி அதிருமாறு நடந்து தன் பொன் மாளிகைக்குப் புறப்பட்டான்.

வான்மீகியின் இந்தக் காட்சியில் காணப்படும் சீதையின் வீரம் வியக்கத்தக்கது. தன்னுடைய தனிமையையும், பல மாதங்களாகத் தனக்கு ராம இலக்குவரிடமிருந்து எவ்வித உதவியும் வரவில்லையென்பதையும் பொருட்படுத்தாது அரக்கனை எதிர்த்துப் பேசிக் கண்டித்த சீதையின் வீரம் சிந்திக்கத்தக்கது. ராவணன் பேச்சில் சீதையைப் புகழ்ந்தும், நயந்தும், ஆசை மொழிகள் கூறியும், பயமுறுத்தியும் இருப்பதுபோன்று சீதையின் பதிலிலும் ராவணனுக்கு அறவுரையும், அறிவுரையும், பயமுறுத்தலும் இருப்பதைக் காணலாம்.

ஜாதகக் கதைகள்

(திரு V. S. நரசிம்மன்)

பகவான் புத்தர் தமது கடைசிப் பிறவியில் பரிபூரண ஞான நிலையை எய்தி நிர்வாண மடைந்தார். அவருடைய முற்பிறவிகளில் 'போதி சத்துவர்' என்ற பொதுப் பெயரைக் கொண்டு அவர் செய்த உயரிய செயல்கள் 'ஜாதகக் கதைகள்' என்று வழங்கப்படுகின்றன. பாலி மொழியில் எழுதப்பட்ட இக்கதைகள் (547) புத்த மதத்தை மக்களிடம் பரப்பப் பெரிதும் உதவி செய்தன. கர்மவினையையும், உலகியலில் நல்லொழுக்கத்தையும் இவை பெரிதும் வலியுறுத்துகின்றன. பலவித பிறவிகளில் —பறவை, விலங்கு, மனிதன் என போதி சத்துவர் உயர்ந்த வாழ்க்கையினை வாழ்ந்து, புத்தனாகப் பரிபூரண நிலையை அடைவதற்கு அஸ்திவாரம் அமைத்தார் என்று இந்நூல் விளக்குகின்றது. எந்தப் பிறவியாயினும்— உயர்ந்தது அல்லது தாழ்ந்தது, அகில உலகத்திற்கும் நன்மை தருபவராக, தியாகமூர்த்தியாக, அன்பு, சேவை ஆகிய குணங்களோடும், அலௌகிக சக்திகளோடும் அவர் வாழ்ந்தார் என்று ஒவ்வொரு கதையும் உணர்த்தும். 'சிவி' என்ற அரசனாகப் பிறவி எடுத்துத் தம் கண்களைத் தானம் செய்தார்; வேசந்தரன் என்ற இளவரசனாகப் பிறவி எடுத்துத் தம்முடைய சொந்தக்குழந்தைகளைத் தீய எண்ணம்கொண்ட அந்தணனுக்குத் தானமாக அளித்தார். இத்தகைய கதைகள் நல்வாழ்விற்கு, தியாகத்திற்குச் சிகரம் எனத் திகழ்கின்றன.

உலகில் புத்த மதம் எங்குக் காணப்படினும், அச்சமயத்தினரிடையே ஜாதகக் கதைகள் பிரபலமாகக் காணப்படுகின்றன. புத்தமதப் பிரச்சாரத்திற்கு அதிகம் பயன்படும் கருவியாக இந்நூல் இருந்தது. இந்தியச் சிற்பக்கலையிலும் ஓவியக்கலையிலும் இக்கதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கதைகளின் சிறப்பை இதன் மூலம் உணரலாம். இந்தத் தொடர் பகுதியில் 'ஜாதகக் கதைகள்' சுருக்கமாக மொழி பெயர்க்கப்பட்டுத் தரப்படுகின்றன.

1. இறந்தோருக்கு விருந்து படைத்தல்

காசியில் வாழ்ந்த, கல்வி கேள்விகளில் சிறந்த அந்தணன் ஒருவன் தன் மூதாதையருக்கு விருந்து படைக்க எண்ணினான். தன் சீடர்களை அழைத்து, "இந்த ஆட்டை நதியில் குளிப்பாட்டி, நறுமண மாலைகளை இதற்கு அணிவித்து இங்கே கொண்டு வாருங்கள்" என்றான். அவர்களும் அங்ஙனமே செய்தனர். தன் முற்பிறவிகளின் பயனை அறிந்த ஆடு தனக்கு விடுதலை கிட்டியது என்ற மகிழ்ச்சியால் சிரித்தது. அதன் பின் தன்னைக் கொல்வதால் அந்தணனுக்கு நேரிடப் போகின்ற தீவினையை எண்ணி அழுதது. சீடர்கள் ஆட்டினை நோக்கி, "சிரிப்பு அழுகை இவற்றிற்கான காரணம் யாது?" எனக் கேட்க "உங்களுடைய குருவின் முன்னிலையில் இந்த வினாவைக் கேளுங்கள்" என ஆடு பதில் கூறியது.

அவர்கள் ஆச்சரியப்பட்டுத் தங்கள் குருவிடம் நடந்ததைக் கூற அவர் அதே கேள்வியைக் கேட்டார். "பல பிறவிகளுக்கு முன்னர் நானும் உன்னைப்போல் படித்த அந்தணனாக இருந்தேன். மூதாதையருக்கு விருந்து படைக்க ஒரு ஆட்டைக் கொன்றேன். அத்தீவினைக்காக நானூற்றுதொண்ணூற்றொன்பது முறை ஆடாகப் பிறந்து பலியானேன். இந்தப் பிறவியோடு அந்தப் பாவம் தொலைகின்றது. அந்த மகிழ்ச்சியில் சிரித்தேன். பின்னர் என்னைப்போன்று நீயும் ஐந்நூறு பிறவிகள் எடுக்கவேண்டுமே என்று எண்ணி அழுதேன்" என்று அது கூறியது. அந்தணன் தனது தவறை உணர்ந்து, 'இந்தப் பாவச் செயலைச் செய்யமாட்டேன்' என்று தீர்மானித்தான். 'உன்னை எவரும் கொல்லாதவாறு பாதுகாக்கிறேன்' என்றுரைத்தான். 'என்னுடைய தீயவினையின் வலுவிற்கு முன் உனது தீர்மானம் பயனற்றுப் போகும்' என்றது ஆடு. எனினும் அந்தணனும், அவன் சீடர்களும் அதைத் தொடர்ந்து வெகுஜாக்கிரதையுடன் இருந்தனர். விடுதலை அடைந்த ஆடு புல்லைத் தின்ன விரும்பிப் பாறை ஒன்றின் அருகே சென்றது. அப்போது இடிவிழுந்து பாறை அதன் கழுத்தில் தாக்கத் தலைசிதறி ஆடு இறந்து விழுந்தது. அநேக மக்கள்

அதைச் சுற்றி நின்றனர். அப்போது போதி சத்துவர் நன்மைகள் செய்யும் மரமாக அங்கே இருந்தார். 'இந்த மக்களுக்கு அறிவுரை தருவோம்' என எண்ணி, போதி சத்துவராக விண்ணில் காட்சி அளித்து 'உயிர்க் கொலை புரிய வேண்டாம். பாபவினையினால் பல பிறவிகளில் அல்லல் உறவேண்டாம்' என்று உபதேசித்தார். கூடியிருந்த மக்கள் கூட்டமும் அவர் மொழிகளை ஏற்று நன்மையடைந்தனர்.

2. மகதேவ மன்னனின் நரைத்த கேசம்:

விதேக ராஜ்ஜியத்தை மிதிலையில் மகதேவன் என்பவன் 84,000 வருடங்கள் இளவரசனாக, அரசனாக நீதிநெறி வழுவாது ஆண்டு வந்தான். தனது கேசம் நரைக்கத் தொடங்கியவுடன் அறிவிக்குமாறு தனது நாவிதனிடம் கூறினான். நாவிதன் ஒரு நாள் "அரசே, தங்கள் சிரசில் ஒரு ரோமம் நரைத்துள்ளது" என்றான். 'அதனைக் களைந்து என்னிடம் தா' என்றான் மன்னன். அதைக் கையில் வாங்கியதும் காலன் அவன் முன் நிற்பதாக உணர்ந்தான். மன்னா, உன்னுடைய செயல்களில் இருந்து உன்னை விடுவித்துக் கொள்ளும் முன் உனக்கு நரை வந்து விட்டதே என்று எச்சரிப்பது போல எண்ணினான். அந்த உணர்ச்சி தீவிரம்ஆகஆக அன்றே துறவியாக வேண்டும் எனத் தீர்மானித்தான். தன் மூத்த மகனை அழைத்து, 'மகனே, உலகில் நான் வாழ்ந்தது போதும். உலகின்பங்களை அனுபவித்தது போதும் இனி இறைவனது பேரின்பத்தை உணரவேண்டும். இன்று முதல் நீயே அரசன். ஒரு மாந்தோப்பில் அமர்ந்து இனி நான் தவம் புரிவேன்' என்றான். அமைச்சர்கள் அரசனின் மனமாற்றத்தை அறிய விரும்பினர். அவர்களிடம் தன்னால் களையப்பட்ட கேசத்தைக் காண்பித்து "இந்த ரோமம் எமனுடைய தூதுவன். உலக வாழ்வைத் துறந்து தவமியற்ற இதுவே தருணம் என எச்சரிக்கும் மணியோசை" என்றுரைத்துத் தவமியற்றிப் பெருநிலை அடைந்தான்.

(ராமனைச் செல்வனாகப் பெற்ற களிப்போடு, முகத்தைக் கண்ணாடியில் தசரதன் பார்க்கின்றார். காதோரங்களில் கேசம் நரைத்திருந்தது. "அரசனே! முதுமை அடைந்து விட்டாய். அரசை ராமனுக்குத் தந்து விட்டு, உனது ஜன்மம் கடைத்தேற வேண்டிய செயலில் ஈடுபடு" என்று நரைத்த ரோமங்கள் அரசனின் காதில் ரகசியமாக அறிவுரை கூறின எனக் கவிதை நயத்தோடு துளசி பாடுகின்றார்.)

3. கட்டவாஹனன் கதை:

பிரம்மதத்தன் என்ற மன்னன் காசியில் ஆண்டு கொண்டிருந்தபோது மாலையில் உலா வச்சென்றான். அப்போது சோலையில் சிறு குச்சிகளைப் பொறுக்கிக் கொண்டு இனிமையாகப் பாடிக்கொண்டிருந்த அழகு மிக்க மங்கையைக் கண்டான். அவளிடம் மிகுந்த காதல் கொண்டான்; அக்கணமே போதிசத்துவர் அவளுடைய காதலில் உருப்பெற்றார். இந்திரனின் வஜ்ஜிர ஆயுதம் போன்று தன் அடிவயிறு கனப்பதை உணர்ந்த அக்காரிகை மன்னனிடம் செய்தியை உரைத்தாள். விலை உயர்ந்த முத்திரை மோதிரம் ஒன்றைத்தந்து, 'பிறக்கும் குழந்தை பெண்ஆனால் இதைவிற்று அவளை வளர்ப்பாய்; ஆண் குழந்தை பிறந்தால் என்னிடம் கொண்டு வா. முத்திரை மோதிரத்தை அடையாளமாகக் காட்டுவாய்" எனக்கூறி மன்னன் சென்றான்.

போதிசத்துவர் மகனாகப் பிறந்தார். பிள்ளைப் பிராயத்தைக்கடந்த அச்சிறுவன் 'என் தந்தையிடம் நான் போக வேண்டும்' என்றான். அன்னையும் மோதிரத்துடன் அரசனைக் கண்டு 'உம் மகனை ஏற்றுக்கொள்வீர்' என்றாள். அரசன் அவமானத்திற்கு அஞ்சி சபையோர் முன் அவனை ஏற்கத்துணியவில்லை. முத்திரை மோதிரத்தைப் பற்றிய பேச்சையும் பொருட்படுத்தவில்லை. 'அரசே! இவன் உம் மகன் தான் என்பதற்குச் சத்தியத்தைத்தவிர எனக்கு வேறு சாக்ஷிகள் இல்லை. இவனை இப்போது மேலே எறிகின்றேன். உன் மகனாக இருந்தால் அப்படியே அந்தரத்தில் இருப்பான். அன்றேல் கீழே விழுந்து இறப்பான்' எனக் கூறி, மகனின் கால்களைப் பற்றி, மேலே வீசி எறிந்தாள். போதி சத்துவர் ஆகாயத்தில் அமர்ந்தவாறு, 'அரசே, நான் உம் மகன். உம் மகனைக் கட்டாயம் வளர்க்கவேண்டும்' என்றார். அரசன் தனது தவறை உணர்ந்து அப்பெண்மணியை அரியணையில் அமரச் செய்து மகனை இளவரசனாக்கினான். பின்பு கட்டவாஹனன்-குச்சிகளைச் சுமப்பவன்-என்ற பெயரொடு பல ஆண்டுகள் போதிசத்துவர் ஆட்சிபுரிந்தார்.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

ஏறத்தாழ கி. மு. 600 ஆம் ஆண்டளவில் மக்னிஷியா (Magnesia) என்னுமிடத்தில் கருமையானதும் எடைமிக்கதுமான மேக்னடைட் (Magnetite) என்னும் இரும்பு உலோகத் தாது கண்டுபிடிக்கப்பட்டது. இக்கண்டுபிடிப்பே பௌதிகத்தில் காந்தவியல் (Magnetism) என்னும் பிரிவுக்கு வழிகோலியது எனலாம். மேக்னடைட் துண்டு ஒன்று சிறு இரும்புத் துண்டுகளைக் கவர்வது காணப்பட்டது. இத்தகைய கவரும் பண்பு காந்தம் எனப் பெயரிடப்பட்டு அத்தகைய பண்பினைக் கொண்ட பொருள்கள் காந்தம் என வழங்கப்படலாயின. நீளமான மேக்னடைட் துண்டு ஒன்றை மெல்லிய நூலொன்றால் கட்டித் தொங்கவிட்டபோது அது தெற்கு–வடக்கு திசையில் நின்றதோடு, அதன் ஒரு முனை எப்போதும் ஒரேதிசையைநோக்கியேநின்றது. இத்தகைய திசைச் சுழலும் பண்பினை ரோமானியர்கள் தங்களுடைய கடற்பயணங்களின் போது திசையை அறிவதற்காகப் பயன்படுத்தினர்.

ஓர் இரும்பு அல்லது எஃகுத் துண்டை மேக்னடைட் துண்டு ஒன்றினால தேய்ப்பதாலோ அல்லது மின்சாரக் கம்பிச் சுருளினுள் வைப்பதாலோ அது மேற்கூறப்பட்ட காந்தப் பண்பினையும் திசைகாட்டும் பண்பினையும் பெறுவது காணப்படுகிறது. இது செயற்கைக் காந்தம் என வழங்கப்படுகிறது. செயற்கைக் காந்தங்கள் தேவைக்கேற்ப பல்வேறு வடிவங்களில் உருவாக்கப்படுகின்றன. செயற்கைக் காந்தங்கள் நிலைக் காந்தங்களாகவோ (Permanent Magnets) அல்லது தற்காலிக காந்தங்களாகவோ (Temporary Magnets) இருக்கலாம்.

நீளமான காந்தத் துண்டு ஒன்றை இரும்புத் தூளில் அமுத்தி எடுத்தால் காந்தத் துண்டின் இரு முனைகளிலும் தூள் கொத்தாக ஒட்டிக் கொண்டிருப்பதைக் காணலாம். அவ்விரு முனைகளும் காந்தத் துருவங்கள் (Magnetic poles) எனப்படுகின்றன. இரும்புத்தூள் ஒட்டிக்கொள்ளும் தன்மையைக் காந்தத்தின் கவரும் பண்பு (Attractive property) என்கிறோம்.

இரும்பு ஊசிகள் அடங்கிய ஒரு மரப் பெட்டியைத் திறந்து காந்தத்தை அதன் உள்ளே கொண்டு சென்றால் காந்தத்தின் இருமுனைகளிலும் ஊசிகள் ஒட்டிக்கொள்வதைப் பார்க்கிறோம். ஆனால் ஊசிகள் அடங்கிய மரப் பெட்டியை மூடிவிட்டு அதன் அருகில் வெளிப்புறமாகக்காந்தத் துண்டைக்கொண்டு சென்றால் ஊசிகள் காந்தத்தால் கவரப்பட்டாலும் பெட்டியைத் துளைத்துக்கொண்டு வெளி வந்து ஒட்டிக்கொள்வதில்லை.

ஊசிகளைப் போன்ற மனிதர்கள் காந்தமாகிய கடவுளால் கவரப்பட்டாலும் மரப்பெட்டி போன்ற உலக ஆசைகளால் சூழப்பெற்றிருப்பதால் அந்த ஆசைகளை மீறிக்கொண்டு ஆண்டவனை அடைய முடியாமல் இந்த இகமாகிய கூண்டுக்குள்ளேயே உழன்று கொண்டிருக்கிறார்கள். சைவசித்தாந்தத்திலும் பசுபதி பாசம் என்று இதையே கூறியிருக்கிறார்கள். காந்தமாகிய பதியைச் சார்வது பசுவாகிய ஜீவாத்மனின் இயல்பு. ஆனால் பசுவைப் பதிபால் சேரவிடாமல் தடுப்பன மும்மலங்களாகிய உலக ஆசைகள். உலக ஆசைகள் என்ற மரப்பெட்டி தடுக்கும் வரையில் இறையருள் என்ற காந்த விசை இருந்தும் ஜீவாத்மாவால் பரமாத்மனை அடைய முடிவதில்லை.

காந்தம் தன் விசையை எப்போதும் பாய்ச்சி நிற்பது போல இறைவன் எப்போதும் தன்னுடைய அருளை நம்பால் பொழிந்த வண்ணம் இருக்கிறார். ஆனால் உலக ஆசைகள் என்ற மாயையால் சூழப்பெற்று நாம் இறையருளில் திளைப்பதில்லை. இம்மாயையிலிருந்து விடுபட்டு அருள்பாலிக்கும் இறைவனடி சேர்வது நம் வாழ்வின் குறிக்கோளாம்.

"காந்தத்துக்கு நிகர் பரமாத்மன். ஊசிக்கு நிகர் ஜீவாத்மன். காந்தம் ஊசியைக் கவர்வது போன்று பரமாத்மன் ஜீவாத்மனைத் தன்மயமாக்குகிறார். ஊசியை மண் மூடிக் கொண்டிருந்தால் காந்தத்தால் அது கவரப்படுவதில்லை. ஜீவாத்மனை உலக ஆசைகள் என்னும் மண் மூடிக்கொண்டிருந்தால் அது பரமாத்மவிடம் கவரப்படுவதில்லை."

— ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-148

859. काष्ठा காஷ்டா — வேதாந்தத்தின் உட்பொருளாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

சிவனர் அஷ்டமூர்த்தியாயிலங்குகின்ருர். அதாவது எட்டு வடிவங்களில் அவர் சிறப்புற்று இலங்குகின்ருர். எட்டு வடிவங்களில் ஒன்று பீமன் என்பது. ஆகாச வடிவம் என்பது அதன் பொருள். பீமனுயிலங்குகின்ற சிவனுருக்குப் பத்னியாயிருப்பவள் காஷ்டா என்பவளாம். இது புராண வரலாறு.

இனி தத்துவ ஆராய்ச்சியில் மனிதன் ஈடுபடுகிறபொழுது பொருள் விரிவடைந்து கொண்டே போகிறது. அந்த விரிவுக்கு ஒரு முடிவு இல்லை. விரிவாய் விளக்கங்கேட்டு மனம் குழம்புபவர் பலர். மனத்தெளிவு அடைபவர் மிகச் சிலர். மனம் குழம்ப வேண்டாம் என்னும் கோட்பாட்டைப் பரமஹம்சதேவர் ஓர் உபமானத்தின் மூலம் விளக்குகிருர். நதியில் நீர் குறைந்திருக்கின்றபொழுது அம்மணலில் ஊற்றுப்போட்டால் அம்மணற்குழியில் நீர் தேங்கி நிற்கிறது. தேங்கிய நீர் சுத்தமாகவும் இருக்கிறது. சுத்தமான நீரைக் கலக்காது எடுத்துப் பருகித் தாக சாந்தி பண்ணுவது உசிதம். அப்படியல்லாது அந்நீரைக் கலக்கினுல் அது பெரிதும் சேறுபடிந்ததாகும். சேறுபடிந்த நீர் பருகுதற்கு உதவாது. தத்துவ விசாரம் பண்ணுகிறவர்களுள் பலர் சேறுபடிந்த நீர் போன்று குழம்பிய கருத்துக்களை உடையவர்களாயிருக்கின்ருர்கள். மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு அறிவு குழம்பியவன் ஆகின்ருனே அவ்வளவுக்கவ்வளவு வேதாந்த விசாரத்தில் அவன் வழி வழுவிப்போனவன் ஆகின்ருன். அத்தகையவனுடைய வேதாந்தத்தை அஜீர்ண வேதாந்தம் என்பர் நூலோர். அன்னை பராசக்தி காஷ்டாவாக இலங்குவதன் வாயிலாக வேதாந்தத்தின் உட்பொருளை அனைவரும் அறிந்து கொள்ளும்படியான உண்மை தத்துவமாக இலங்குகின்ருள்.

பரவஸ்து யாது என்பது கேள்வி. பரவஸ்துவை ஐயம்திரிபுஅற இரண்டொரு சொற்களைக் கொண்டு தெளிவுபடுத்துமிடத்து அது மகாவாக்கியம் எனப்படுகிறது. பிரக்ஞானம் பிரம்மம் என்பது ஒரு மகாவாக்கியம்; ஆனந்தம் பிரம்மம் என்பது மற்ருெரு மகா வாக்கியம். தங்குதடையில்லாத பேரின்ப சொரூபிணியாக அன்னை பராசக்தி இலங்குகின்ருள். பிரக்ஞானம் என்பது பேரறிவு அல்லது வாலறிவு. தானிருப்பதைத் தானே அறிகிறது. இதுவே பரவஸ்துவுக்கு முடிவான விளக்கம். இந்த விளக்க மயமாக அன்னை பராசக்தி இலங்குவதால் அவள் காஷ்டா எனக்கூறப்பெறுகிருள். அன்னை பராசக்தியின் அனுக்கிரஹத்தை அடையப்பெறுகிற ஆத்ம சாதகன் தெளிந்த அறிவினனுகத் தூய அன்பினனுக இலங்குகின்ருன். இதுவே முடிந்த தத்துவமாம். இந்த நாமத்தின் வாயிலாக இவ் உண்மையை அன்னைபராசக்தி உறுதிப்படுத்துகிருள்.

860. अकान्ता அகாந்தா — பாபத்தைப் போக்குபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அக + அந்தா, அகம் என்பது பாபம், தீங்கு, துக்கம் எனப்பொருள்படுகிறது. இக்குறையை அகற்றுபவள் அகாந்தா என்னும் நாமத்தை உடையவளாக அன்னை இலங்குகின்ருள்.

மனிதன் புரிகின்ற ஒவ்வோர் பாபச் செயலுக்கும் அடிப்படையாயிருப்பது அக்ஞானம். மனிதன் துய்க்கின்ற துன்பம் ஒவ்வொன்றுக்கும் அடிப்படையாயிருப்பது அக்ஞானம். இக்குறைநிலையை அன்னை பராசக்தி எளிதில் அகற்றிவைக்கிருள். ஆதலால் அவள் அகாந்தா ஆகிருள். சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். தூங்கும்பொழுது பொருந்தாத கனவு கண்டு மனிதன் படாத துயரத்திற்கு ஆளாகிருன். அவனிடதிருந்து அத்துயரத்தை விரட்டியோட்டுதற்கு உற்ற உபாயம் தூக்கத்தினின்று விழிப்பு நிலைக்கு அவனைக் கொண்டு வருவது ஒன்றேயாம். விழித்துக்கொண்ட உடனே தான் மருண்டு போனதின் காரணத்தைத் தானே அறிகிருன். எப்பொழுதெல்லாம் மனிதன் சுத்த சைதன்யம் அல்லது பேரறிவினின்று பிசகுகிருனே அப்பொழுதெல்லாம் அவன் நெறிபிரண்டவன் ஆகின்ருன்; அல்லது பாபச்செயலுக்கு உட்பட்டவனுகின்ருன். எப்பொழுதெல்லாம் மனிதன் பேரானந்தத்தி

னின்று பிசகுகிருனே அப்பொழுதெல்லாம் அவன் அக்ஞானத்தை வருவித்தவன் ஆகின்ருன். அன்னை பராசக்தி அக அந்தா-வாக இருந்து அக்குறைநிலையை நிறை நிலையாக மாற்றியமைக்கிருள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

861. காந்தார்த்த விக்ரஹா — சிவனுருடைய சொருபத்தின் செம்பாதி வடிவினளாக இலங்குபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

காந்த அர்த்த விக்ரஹ-அம்பிகைக்குக் காந்தனுயிருப்பவன் சிவனர். சிவனுருடைய மகிமையை எடுத்து இயம்புகின்றவர்கள் மாது ஒரு பாகம் ஆனவன் என அவனைப் போற்றுகின்றனர். அந்நிலையில் சிவனர் அர்த்தநாரீசுவரனுக இலங்குகின்ருர். செம்பாதி புருஷ தத்துவமாகவும், அடுத்த செம்பாதி பிரகிருதி தத்துவமாகவும் இலங்குபவர் என்பது இதன் பொருள். பிறந்த குழந்தைக்கு உடனடியாக உதவி கொடுத்துப் பேணுபவள் தாய். அத்தாயின் துணைகொண்டு குழந்தை பின்பு தந்தையை அறிய வருகிறது. இக்கோட்பாட்டை முன்னிட்டே அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்னும் வாழ்க்கைத்தத்துவம் உருவெடுத்திருக்கிறது. அப்பனினும் மிக்காளாக அன்னை இலங்குகின்ருள். அன்னையிலாச் சேய் சரியாக உருவெடுப்பதில்லை. பிள்ளையொருவன் சரியான பாங்கில் உருவெடுப்பதற்குத் தாயும் தந்தையும் உறுதுணையாகின்றனர். அவ்விருவருள் தாயே முதல் இடம் பெறுகிருள். தந்தை பெறுகிற இடம் இரண்டாந்தரமானது. உயிர்களைப் பேணுகின்ற தாயை முன்னிட்டே அகிலாண்டகோடிஈன்ற அன்னையே! என்று அவள் போற்றப் பெறுகிருள். தன் கணவனுகிய சிவனுரிடத்து அவள் வைத்துள்ள பேரன்பை முன்னிட்டே இந்த மகிமைகள் யாவும் அவளுக்கு வந்து அமைந்திருக்கின்றன.

862. கார்யகாரண நிர்முக்தா கார்ய காரண நிர்முக்தா— விளைவும் அதற்கு முகாமையும் ஆகிய நிலைகளுக்கு அப்பாலிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்தும் காரண காரியமயமாக இலங்கிக்கொண்டு இருக்கின்றன. பிரகிருதியின்கண் உள்ள ஏதேனும் ஒரு பகுதியை எடுத்து ஆராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை நன்கு விளங்குகிறது. மானுட உலகை ஆராய்வோம். தாய் தந்தையர்க்குப் பிள்ளையாகப் பிறந்தவன் தாய் தந்தையருடைய வாழ்வின் விளைவாக அல்லது காரியமாக வடிவெடுத்து வந்த மைந்தன். நாளடைவில் காரியமாக வந்த மைந்தன் தக்க பருவத்தில் இல்வாழ்க்கை வாழ்ந்து தன்னைத் தொடர்ந்துவரும் சந்தானத்திற்குக் காரணமாக இலங்குகின்ருன். இங்ஙனம் பிரபஞ்ச வாழ்வானது ஆதியந்தமில்லாத காரண காரியமயமாக இலங்கிக் கொண்டிருக்கிறது.

இத்தகைய பிரபஞ்ச வாழ்வை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் அடிப்படை உண்மை ஒன்று வெளியாகிறது. மானுடன் ஒருவன் சிசுவாகவிருந்தபொழுது ஒருவித சரீரத்தை உடைத்திருந்தான். சிறுவனுனபொழுது அவனுடைய உடலமைப்பு அதற்கேற்றவ்ாறு மாறியமைந்தது. அதே விதத்தில் அவன் யுவன் ஆகின்றபொழுதும், காளை ஆகின்றபொழுதும், கிழவன் ஆகின்றபொழுதும் சரீரம் மாறியமைந்து கொண்டே வருகிறது. இந்தச் சரீரத்தின்கண் வீற்றிருக்கின்ற ஆத்ம சைதன்யத்திற்கு இத்தகைய மாறுபாடுகள் இல்லை. ஆத்ம சைதன்யம் யாண்டும் தன் மயமாயிருக்கிறது. வியஷ்டியாகிய ஜீவாத்மனைப் பற்றிய உண்மை இதுவென்ருல் சமஷ்டியாயிருக்கின்ற அன்னை பராசக்தியைப்பற்றிய உண்மையும் இதுவேயாம். காரண காரியங்கள் யாவும் பிரகிருதியின் கூறுகள். அந்தப் பிரகிருதிக்கு ஆதாரமாகவிருக்கும் ஆத்ம சைதன்யம் யாண்டும் நிர்விகாரியாக அதாவது எந்த விதமான மாறுபாடும் அடையப்பெருது தன் மயமாய் இலங்கிக்கொண்டிருக்கிறது. இதுவே வியஷ்டியாயிருக்கிற ஜீவாத்மனைப் பற்றிய உண்மை; இதுவே சமஷ்டியாயிருக்கின்ற அன்னை பராசக்தியைப்பற்றிய உண்மை. ஜீவாத்மனை ஓர் அணுவோடு ஒப்பிடலாம். அன்னை பராசக்தியை அகிலாண்டத்தோடு ஒப்பிடலாம். அணுவில் அமைந்திருக்கிற தத்துவமே அண்டத்திலும் அமைந்திருக்கிறது. மற்ருெரு பாங்கில் பகருமிடத்து அண்டத்திலிருப்பது பிண்டத்திலிருக்கிறது; பிண்டத்திலிருப்

பது அண்டத்திலிருக்கிறது. எல்லாப் படித் தரங்களிலும் அமைப்பானது ஒரே பாங்குடைய தாம். அதாவது ஆத்ம சைதன்யம் காரண காரியமயமாயிருக்கின்ற பிரகிருதிக்கு அப்பாற் பட்டது. அந்தப் பிரகிருதிக்கு ஆதாரமா யிருப்பதும் அதே ஆத்ம சைதன்யம். ஆத்ம சைதன்யம் காரண காரிய மயமாயுள்ள பிர கிருதியினிடத்திருந்து யாண்டும் விலகியதாக இலங்கி வருகிறது. இக்கோட்பாட்டை முன் னிட்டே காரிய காரண நிர் முக்தா என்னும் நாமம் அம்பிகைக்கு அமைந்துள்ளது. ஆத்ம சாதகன் காரிய காரணமாயுள்ள தேகத்தில் தன் சிந்தையைச் செலுத்தாது யாண்டும் நித் திய சுத்தன், நித்திய முக்தன் ஆக இருக்கின்ற ஆத்ம சைதன்யமே தன்னுடைய நிஜ சொரு பம் என்னும் எண்ணத்தில் நிலை பெற்றிருப் பது அன்னை பராசக்திக்குரிய தலை சிறந்த வழிபாடாகிறது.

863. कामकेलितरङ्गिता காமகேலிதரங்கிதா— காமேசுவரருக்கும், அம்பிகைக்கும் இடை யிலே உள்ள விளையாட்டின் விளைவாகச் சேதன அசேதனமயமாயுள்ள அண்டங்கள் என்னும் அலைகளைச் சதா தோற்றுவித்துக்கொண்டிருப்ப வள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

உள்ளத்தில் உண்டாகும் எண்ணங்களுக்குச் சித்தவிருத்தி என்பது பெயர். தடாகத்தில் சதா அலைகள் உருவெடுத்துக்கொண்டிருப்பது போன்று உள்ளத்தில் எண்ணங்கள் சதா உதித்துக்கொண்டிருக்கின்றன. இந்த எண் ணங்கள் இருதரப்பட்டவைகளாக இருக்கின் றன. ஒன்று உல்லாசம். மற்றொன்று காமம். புறத்திலுள்ள ஏதேனும் ஒருபொருளையோ பண் பையோ பெறவேண்டும் என்னும் அவாவுடன் எழுகின்ற சித்த விருத்திக்குக் காமம் என்று பெயர். ஜீவாத்மாக்களுக்கு ஆசையினால் தூண்டப்பெற்றுக் காமங்கள் உருவெடுக்கின் றன. அகமகிழ்வின் விளைவாக வருகின்ற சித்த விருத்தியில் குறை ஏதுமில்லை. ஜீவாத் மன் ஒருவன் ஆசையினால் உந்தப்பெற்று எண்ணுகிற ஒவ்வொரு எண்ணமும் காமம் என்னும் பெயர் பெறுகிறது. தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த் தங்களுள் காமம் மூன்றாவது இடம்பெறு கிறது. காமம் நிறைவேறுகிறபொழுது இன்பம் உண்டாகிறது. அது தோல்வியடையுமிடத்துத் துன்பம் உருவெடுக்கிறது. உல்லாசத்திலோ யாண்டும் இன்பமே நிறைந்திருக்கிறது. துன் பத்துக்கு ஆங்கு இடமில்லை. ஜீவாத்மா ஒருவ னுடைய வாழ்க்கையின் முடிவான குறிக் கோள் காமத்தை வெல்லுதல். அறவே காமத்தை அகற்றி ஆத்ம சொரூபத்தில் நிலைத்திருப்பவன் நிறைஞானியாகிறான் என்பது மறைமொழி.

இனி, காம சொரூபமாயிருக்கின்ற சர்வேசு வரனுக்குக் காமேசுவரன் என்பது பெயர். சிவனிடத்து இருக்கும் காமம் உல்லாசத்திற்கு நிகரானது. அதில் ஆசை ஏதுமில்லை. நிறை பொருளாகியசிவனுக்கு ஆசைப்படுதற்கு அவ சியமில்லை. ஆகையினால் காமேசுவரனிடத்தில் இருக்கின்ற காமம் குற்றமற்றது. கோடிக்கணக் கான காமங்கள் சர்வேசுவரனுடைய விசுவ மனதிலிருந்து வடிவெடுத்து வந்துகொண்டிருக் கின்றன. அப்படியிருந்தும் இறைவனுடைய நிறைவுக்குப் பங்கம் ஏதும் உண்டாவதில்லை.

இறைவனும், இறைவியாகிய அம்பிகையும் பரஸ்பரம் பூணுகிற அன்புக்குக் கேலி என்று பெயர். அன்பினால் தூண்டப்பெற்றுள்ள விளை யாட்டு என்பது அதன் பொருள். புதிதாக மணந்துகொண்ட தலைவனும் தலைவியும் பரஸ் பரம் கேலி பண்ணித் தங்களுடைய நட்பை உறு திப்படுத்துவது உலகத்தவர் இயல்பு. மற்று சிவனும் சக்தியுமே யாண்டும் கேலி வடிவினர் களாகவே இருந்து வருகிறார்கள். காற்றடிக் காத இடத்துக் கடலில் அலை உண்டாவதில்லை. அலையற்ற கடல் போன்றிருப்பது சதாசிவத் தின் பாங்கு. மக்களுள் நிறைஞானம் அடை யப்பெற்றவர்கள் அலையற்ற கடல் போன்று சித்த விருத்திக்கு அப்பாற்பட்டவர்களாயிருக் கின்றார்கள். சித்தவிருத்தி என்னும் அலை அல் லது தரங்கத்திற்கு அடிமைப்பட்டிருப்பவன் ஜீவாத்மன். மற்று சர்வேசுவரனும், சர்வேசுவரி யும் எந்த விதமான காமத்துக்கும் அடிமைப்ப டாது வேண்டுமென்றே காமத்தை வரவழைத்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அதன் விளை வாக அண்டகோடிகளும், ஜீவகோடிகளும் உருவெடுக்கின்றன. சிவனும் சக்தியும் ஒன்று கூடி விளையாடுகிற விளையாட்டின் விளைவே பிரபஞ்சம் அனைத்துமாம் என்பது இந்த நாமத் தின் கோட்பாடு.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (258) அதர்மத்தை அகற்றுதற்குப் பகவான் ஏன் மானுடனாகப் பிறக்க வேண்டும்? மக்களைக் கொண்டே மக்களைத் திருத்தியமைத்துக் கொள்ளலாம் அல்லவா?

அடிப்படைக் கோட்பாடு ஒன்றை இங்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மக்கள் வேறு, பகவான் வேறு என்பது உண்மையன்று. பகவான் தாமே மக்களாக வடிவெடுத்து இலங்கிக்கொண்டு இருக்கிறார். உலகனைத்தும் ஆனாய் நீயே என்பது ஆப்த வாக்கியம். உலக நடைமுறையை ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு படித்தரத்திலும் குறை நிலை நிறைநிலையாகத் திருந்தியமைவதின் காட்சியைக் காணலாம். மரம் ஒன்றின் பட்டையின் சிறுபகுதியை வெட்டியெடுத்தால் அப்பகுதியை மரம் தானே திருத்தியமைத்துக் கொள்கிறது. இது இயற்கையின் கூறு. ஆராய்ச்சியின் மூலம் மனிதன் சிறுமையைக் களையவும் மேன்மையைக் கடைப்பிடிக்கவும் செய்து வருகிறான். இது ஒருபுறம் இருக்கச் சிறுநெறி செல்லுகிற மக்களைப் பெருநெறியில் நடாத்துதற்கு மானுடர்க்கிடையில் அதிகார வர்க்கம் தானாக அமைகிறது. பள்ளியில் படிக்கிற சிறுவர்களுள் துஷ்டத்தனம் பண்ணுகின்றவனை ஆசிரியர் திருத்தியமைத்து நல்வழிக்குக் கொண்டு வருகிறார். களவும் கொலையும் புரிகிற துஷ்டர்கள் மீது நடவடிக்கை எடுத்து அரசாங்கம் அவர்களைத் திருத்தியமைக்கிறது. சட்டதிட்டத்தின் வாயிலாக மக்களை நல்வழியில் நடாத்துவது சமுதாயத்தின் பாங்கு ஆகிறது. இந்த அளவில் சமுதாயத்திலுள்ள மக்கள் தங்களுடைய சொந்த முயற்சியைக் கொண்டே சிறுநெறியினின்று விலகியும் பெருநெறியைக் கடைப்பிடித்தும் வருகின்றனர். இதற்கு அவதார மூர்த்தி அவசியமில்லை. ஆனால் சமுதாயம் முழுதுமே பெரிதும் நெறிபிறண்டு போகின்ற தருணம் ஒன்று வருகின்றது. அத்தருணத்தில் ஆற்றலும், அறிவும் படைத்த மூர்த்தி ஒருவர் தோன்றி வந்து அச்சமுதாயம் முழுதையும் நல்வழிக்குக் கொண்டுவர முயலுகிறார். அதன் பொருட்டுச் சமுதாயத்தின் ஒரு பகுதியை ஒடுக்குதல் அவசியமானால் யுத்தத்தின் வாயிலாக அந்தச் சம்ஹாரத் தொழிலையும் பகவான் செய்து வருகிறார். மஹாபாரதப் போராட்டம் இதற்குச் சான்றாக வந்து அமைகிறது. இன்னும் சில வேளைகளில் அவதார மூர்த்தியின் அவசியமில்லாது அரசாங்கங்களே ஒன்றோடொன்று போர்புரிந்து தங்களிடத்துள்ள குறை நிலையை நிறை நிலையாகத் திருத்தி யமைத்துக்கொள்ளுகின்றன. ஆதலால் சமுதாயம் தன்னைத் தானே தரும நெறியில் திருத்தியமைத்துக் கொள்ளும் செயல் சர்வகாலமும் நிகழ்ந்து வருகிறது. எப்பொழுதெல்லாம் பெரிய மூர்த்தி ஒருவர் தோன்றி வந்து இந்தத் திருத்தத்தைச் செய்து அமைப்பது அவசியமோ அப்பொழுதெல்லாம் அவதார மூர்த்தி ஒருவர் உருவெடுத்து வருவதும் இயற்கையின் பாங்கு ஆகும். சுருங்கச் சொல்லின் அவதார மூர்த்திகளின் தோற்றம் அரிதிலும் அரிதாகச் சில யுகங்களுக்குப் பிறகு ஒருதடவை நிகழ்கிறது. மற்று, தங்களைத் தாங்களே திருத்தியமைத்துக் கொள்ளும் நல்ல முயற்சிகளை அறிவுடையவர் காலமெல்லாம் செய்து வருகின்றனர்.

கேள்வி: (259) ஆலய வழிபாட்டில் சண்டிசுவரர் கோயிலில் ஏன் கை தட்டி வணங்குகின்றோம்?

சண்டிசுவரர் கோயிலில் கை தட்டி வணங்குதலில் மேலான கோட்பாடு ஒன்று இருக்கிறது. மானுடன் ஒருவன் தனி உடைமையைப் பொது உடைமை ஆக்குவானாகில் அது பாராட்டப்படுகிறது. பொது உடைமையைத் தனி உடைமையாக எடுத்துக்கொள்ள மனிதன் முயன்றால் அது பாராட்டத்தகாத செயலாம்.

வழிபாட்டுக்காகக் கோயிலுக்குச் செல்லும் மக்கள் பொதுவாக வெறுங்கையோடு போகலாகாது என்பதும் கடவுளுக்குப் படைப்பதற்காகப் பொருத்தமானபொருள்கள், பண்டங்கள் ஏதாவது எடுத்துச்செல்லவேண்டும் என்பதும் ஐதிகம். கடவுளுக்கு மக்கள் எடுத்துச்செல்லும் பொருள்களும் பண்டங்களும் கடவுளுக்கு அவசியமானவைகள் அல்ல. பண்டங்கள் ஈசுவரப் பிரசாதமாக மக்களுக்கே வழங்கப்படு

கின்றன. பொருள்கள் கோயிலின் அபிவிருத்திக்காகவும் நடைமுறைக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. கோயிலில் ஏராளமாகச் சேருகிற பொருள்களில் பங்குகொள்ள மக்களுக்கு ஆசை உண்டாகிறது. அது பொருந்தாத ஆசை. கோயிலுக்குச் சொந்தமாயுள்ள சிவன் சொத்தை மானுடன் ஒருவன் தனக்குரியதாகச் செய்வானுகில் அதன் மூலம் அவன் தனக்குத் தானே கேட்டை வரவழைத்துக் கொள்கிறுன்.

சண்டீசுவரன் சிவனர் கோயிலுக்கு முக்கியமான நிர்வாகியாக இருந்து வருகிறுர் என்பது ஐதிகம். ஆதலால் சண்டீசுவரரை வழுத்துகிறபொழுது எதையும் எடுத்துக்கொள்ளவில்லை என்னும் செயலுக்கு அறிகுறியாக வழிபடுவன் கை தட்டுகிறுன். கை தட்டுவதோடு கூட மற்றெரு செயலும் ஐதிகத்திலிருந்து வருகிறது. வழிபடுகிறவன் தான் அணிந்திருக்கும் வஸ்திரத்தினின்று ஒருநூலைப் பிடுங்கி எடுத்து சண்டீசுவரன் முன்னிலையில் போட்டு வணங்குவது வழக்கம். ஒரு சிறு பொருளையாவது மனிதன் கோயிலுக்குத் தரவேண்டுமேயொழிய கோயிலினின்று எப்பொருளையும் தனக்குரியதாக்கலாகாது என்பதுதான் நல்ல ஐதிகம். இதற்குச் சான்ருக சண்டீசுவரரின் முன்னிலையில் வழிபடுகிறவன் கை தட்டி வணங்கிவிட்டு வருகிறுன்.

கேள்வி: (260) மக்களுக்கு முற்பிறப்பும் மறுபிறப்பும் உண்டு. இவ்வாறு திரும்பத் திரும்பப் பிறப்பதால் என்ன பயன்?

சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமிப்பது இயற்கையின் திட்டம். குழந்தை ஒன்று சிசுவாகப் பிறக்கிறது. சரீரத்தில் சிறியதாயிருக்கும் அது பெரியதாக வளர்கிறது. அதற்கேற்றபடி உடையையும் பெரியதாக மாற்றியமைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. உடை பழையதாவது போன்று உடலும் விருத்தாப்பியத்தில் பழுதுபடுகிறது. அப்படிப் பழுதுபட்டுப் போன உடலை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் புதிய உடல் எடுப்பது ஜீவாத்மனுக்கு அவசியமாகிறது. ஒவ்வொரு பிறவியிலும் அனுபவத்தின் வாயிலாக அந்த ஜீவன் பண்பாடடைந்து வருகிறுன். மாணுக்கனெருவன் நாள்தோறும் திரும்பத் திரும்பப் பள்ளிக்கூடத்துக்குப் போவது போன்றும், வருஷந்தோறும் பள்ளிக்கூடத்துக்குப் போவது போன்றும் ஜீவாத்மன் பல பிறவிகளில் முயன்று தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டு வருகிறுன். கல்வியில் தேர்ச்சியடைவதற்கு எங்ஙனம் ஒருவருஷப் படிப்புப் போதாதோ அதே விதத்தில் மனிதன் பண்பாடடைவதற்கு ஒரு ஜன்மம் போதாது. முற்றிலும் பண்பாடடையும் பரியந்தம் பிறவிகள் பல எடுத்துக்கொண்டு இருப்பது அவசியமாகிறது. சிற்றுயிர் நிலையிலிருந்துதான் மனிதன் பெருநிலைக்கு வந்திருக்கிறுன். ஆக, ஜீவாத்மனுக்குப் பண்பாட்டின் பொருட்டுச் சிற்றுயிர்நிலை, பேருயிர் நிலை ஆகிய எல்லா நிலைகளும் அவசியமாகின்றன. 'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன், எம்பெருமானே மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்' என்பது கோட்பாடு. ஆக இறைவனுடைய திருவடியை யடைந்து முக்தியடையும் பரியந்தம் ஜீவாத்மன் ஒருவனுக்குப் பிறவிகள் பல அவசியமாகின்றன. மானுடப் பிறவிதான் அவனுக்கு அமைந்த வாய்ப்பு என்று எண்ணலாகாது. முதலில் சிற்றுயிர்களாக வடிவெடுத்து அவன் பரிணமித்து வருகிறுன். எந்தப் படித்தரத்தில் அவன் எத்தனை ஜன்மம் எடுத்தான் என்பதைக் கணக்கிட முடியாது. பலகோடிப் பிறவிகள் வாயிலாக ஜீவாத்மாக்கள் அத்தனை பேரும் அவரவர் முயற்சிக்கேற்பப் பண்பாடடைந்து கொண்டே வருகின்றனர். மானுட நிலையை எட்டிய பிறகு பிறவியின் மூலமாகப் பொதுவாகக் கீழ்நிலைக்குப் போவதில்லை. ஆனல் அரிதிலும் அரிதாகச் சில ஜீவாத்மாக்கள் மானுட நிலையினின்று தாற்காலிகமாகக் கீழ் நிலைக்குப் போவதும் உண்டு. அப்படிப் போவது, அதற்குற்ற ஆசையை நிறைவேற்றுதல் பொருட்டேயாம். மேல் நிலைக்கு வரவர ஆசைகள் மேலானவைகளாகத் திருந்தியமைகின்றன. முற்றிலும் பரிபாகமான ஜீவாத்மனுக்குப் பிறகு ஆசை ஏதும் உண்டாவதில்லை. ஆதலால் மேலும் பிறப்பெடுப்பதற்கு அவசியமில்லை. அங்ஙனம் ஆசைகள் அனைத்தும் அகலும் வரையில் ஒவ்வொரு ஜீவனும் புதிய பிறப்பு எடுத்துக் கொண்டே இருக்கிறுன். பரமனை அடைவதோடு ஆசையும் முடிவுறுகிறது. பிறப்பெடுக்கும் செயலும் முடிவுக்கு வருகிறது. முக்தி அடையும் பரியந்தம் பிறவிகள் உண்டு.

நிராசையே ஆனந்தம்

(சுவாமி துருவானந்தர்)

நாய் ஒன்று தெருவழியே ஓடிக்கொண்டிருந்தது. வழியில் ஒரு எலும்புத் துண்டு கிடந்தது. எலும்புத் துண்டைக் கண்டவுடன் நாய் பெருவியப்போடு அதை வாயில் கௌவிக்கொண்டு ஓடியது. ஓடும்பொழுது ஒரு பாலம் குறுக்கிட்டது. அந்தப் பாலத்தின் அடியில் நிறையத் தண்ணீர் தேங்கியிருந்தது. ஓடிவந்த களைப்பால் நாய் சிறிதுநேரம் நின்றது. ஓரமாய் நின்று நீருக்குள் எட்டிப் பார்த்தது. நீரில் தன்னைப்போன்று மற்ெறாரு நாய் எலும்பைக் கௌவிக்கொண்டு இருப்பதுபோன்ற காட்சியைக் கண்டது. உடனே நீரில் தெரிந்த நாயைப் பார்த்து இந்தநாய் குரைக்கத்தொடங்கியது. அதன்வாயிலிருந்த எலும்புத் துண்டு நீரினுள் விழுந்தது. அதன் விளைவாக நீரில் ஏற்பட்ட சலனத்தால் நாயின் பிம்பம் மறையவே இருந்ததையும் இழந்த நாய் ஏமாற்றத்தோடு சென்றது. இந்தக் கதையையாவரும் கேட்டிருப்பீர்கள். இந்தக் கதையின் நீதியை ஆராய்வோம். ஆசையை அடக்குவது தீவிர முயற்சியின் விளைவாகவும், நல்ல விவேகத்தின் மூலமாகவும் நிகழவேண்டும். கேட்டதையெல்லாம் அல்லது படித்ததையெல்லாம் ஒருவன் நடைமுறைக்குக் கொண்டு வருவானானால் அவனை ராமன், தர்மன், புத்தன் போன்ற பெருமக்கள் வரிசையில் அல்லவா வைக்கவேண்டும். அப்படியானால் அறத்தை, நல்ல பண்பினைப்பற்றி ஏராளமாகப் படிக்கிறோம், பிறர் சொல்லக் கேட்கிறோம். அவற்றை எல்லாம் நம்மால் கடைப்பிடிக்கமுடியுமா என்று அங்கலாய்க்கின்றோம். ஆனால் முறையாக முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. நல்ல பண்புகளைப் பெற்றவர்களிடம் சிறிதேனும் ஆசையைக் காண முடியாது. அப்படிச் சிறிது ஆசையிருந்தாலும் அது மன்னுயிர்க்காகத் தங்கள் வாழ்வை அர்ப்பணம் பண்ணவேண்டும் என்ற ஆசையாகத்தானிருக்கும்.

நோய் ஒன்று உடலில் உருவெடுத்தால் அது உருவானதற்குண்டான காரணத்தை அறிந்து அதன் பிறகு சிகிச்சை செய்தல் மருத்துவருடைய போக்கு. அங்ஙனம் நம் உள்ளத்தில் தோன்றி வருகிற ஆசை தோன்றக் காரணம் யாது என ஆராய்வது அதைக் களைவதற்குப் பெரிதும் உதவும். எதில் நம் மனது நாட்டம் உடையதாகவிருக்கிறதோ அதைப்பற்றி எண்ணம் உண்டாகிறது. எண்ணம் நாளடைவில் பற்றாக மாறுகிறது. குழந்தையொன்று தாயின் துணையைத்தான் நாடுகிறது. தாயினிடமிருந்து குழந்தையைப் பிரித்தால் அது அழ ஆரம்பித்து விடும். விளையாட்டுச் சாமான்களும், மற்றும் இன்னோரன்ன பொருள்களும் அக்குழந்தைக்குச் சுவை யூட்டுவதில்லை. சிறுவனாகி விட்டால் விளையாட்டுக்குரிய பொருள்களில் அவன் நாட்டம் முழுவதையும் செலுத்துகிறான். அப்போது தாயின் இடுப்பில் இருக்கப் பிரியப்படுவதில்லை. ஆசை இங்கு இடம் மாறுகிறது. விளையாட்டுப் பருவம் முடிந்து பள்ளி செல்லும் மாணவனாக அவன் மாறியகமகிறான். அப்போது அவனை விளையாடத் தூண்டிய விளையாட்டுப் பொருள்கள் வெறுமனே கிடக்கின்றன. உடல் வளர்ச்சிக்கேற்ப மனோ வளர்ச்சி ஏற்படுகிறது. கதைப் புத்தகங்கள் படிப்பதில் நாட்டம் அதிகரித்துப் புத்தகப் புழுப்போன்று ஆய்விடுகிறான். உணவைவிடக் கதைப்புத்தகம் அவனைக் கவர்ந்து விடுகிறது. சிறுவன் பெரியவனாகிக் கல்லூரிக்குள் நுழைந்து கல்வியின் மேலாம் நிலையில் சென்று கொண்டிருக்கிறான். அப்போது கதைப் புத்தகமோ, வேறு விளையாட்டு எண்ணங்களையோ விட்டுப் பட்டம் பெறவேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் இருக்கிறான். பட்டம் பெற்றான பிறகு அவனுக்குகந்த வேலை கிடைக்கிறது. ஏராளமாகச் சம்பாதிக்கிறான். இப்போது அவன் எதை நாடுவான்? தாயின் இடுப்பைவிட்டு இறங்க மறுத்துத் தாயையே உடும்புப் பிடியாகப் பிடித்திருந்தவன், விளையாட்டுச் சாமானில் தன் உள்ளத்தை ஒன்றித்தவன், கதைப் புத்தகங்களில் மூழ்கிக் காலத்தை மறந்தவன், பட்டம் பெறவேண்டும் என்று படாதபாடுபட்டவன் மணம் புரிந்து மகிழ்ச்சியாய் வாழ விரும்புகிறான். ஆசை இங்ஙனம் இடம் மாறி மணவாழ்வில் வந்து தங்குகிறது.

மணம் புரிவதே வாழ்க்கையில் ஒரு பெரிய சாதனை என்று எண்ணி வாழும் மாந்தரும் உண்டல்லவா! சில காலம் கழித்துக் குழந்தை யொன்று பிறக்கிறது. குழந்தையின் அழகும் வனப்பும் அவனைக் கவர்ந்து விடுகின்றன. அப் படிப்பட்ட நிலையில் அவன் ஆசை இன்னும் எங்கெங்கோ பிரயாணம் போகிறது. அலுவ லகத்தில் அமர்ந்திருந்த அவனுக்கு டெலி போன் வந்தது. போனில் பேசினன். 'ஐயோ, அப்படியா! இதோ வந்து விட்டேன்' என்று சொல்லிக்கொண்டு சட்டையைக்கூட எடுத்து மாட்ட மறந்தவனய், பஸ்ஸைப் பிடிக்கிறன். பஸ்ஸில் இருந்தவர்கள் அவனுக்கு மிக முக் கியமானவர்களாய் இருந்தும் அவர்களோடு பேசவில்லை. சிந்தையனைத்தும் போனில் வந்த செய்தியைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந் தது. பஸ்ஸைவிட்டு இறங்கினன். ஒருவர் தந்தி செய்தியைக் கொடுத்தார். லட்ச ரூபாய்க்கு லாட்டரி சீட்டுப் பரிசு விழுந்திருக் கிறது என்று அதில் இருந்தது. அது அவன் மனதில் எந்தவித மாற்றத்தையும் தரவில்லை. போனில் வந்த செய்தி பொய்யாகிவிடக் கூடாதா? என்று தெய்வங்களை வேண்டிக் கொண்டே விரைகிறன். தன்னுடைய தெரு வுக்கு வந்தான். தன் வீடு இருக்கும் பகுதி யில் மக்கள் கூட்டம் இருக்கிறது. வீட்டைச் சுற்றியும் புகைகிளம்பி வானளாவிப்போய்க் கொண்டிருக்கிறது. மக்கள் ஒருவருக்கொரு வர் ஏதோ பேசிக்கொண்டு சுற்றிச் சுற்றி வந்து கொண்டு இருக்கின்றனர். வீட்டினருகே ஓடினர் இந்த ஆள். மனைவி கதறிப்பதறிக் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தாள். அவளை விசாரித்தான். வீட்டின் அடுப்பி லிருந்து தீ பரவி எப்படியோ வீட்டைச் சுற் றியும் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. வேலைக்காரி குழந்தையை எடுத்து வந்திருப் பாள் என்று நம்பி நானும் தப்பி வெளியே ஓடி வந்தேன். ஆனல் நான் எடுத்து வந்திருப்பேன் என்று நம்பி அவள் ஓடிவந்து விட்டாளாம். 'ஐயோ! குழந்தை நடு அறையிலே தொட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கிறதே எப்படியாவது காப்பாற்றுங்கள்' என்று காலைப் பிடித்துக் கதறினள். வீட்டைச் சுற்றி எரிகிற தீ இன் னும் உட்பகுதிக்குள் புகவில்லை. வீட்டின் உட்பகுதியில்தான் குழந்தை தூங்குகிறது. ஆனல் குழந்தையைத் தூக்கி வரவேண்டு மானல் தீயைக் கடந்துதான் உள்ளே போக வேண்டும். வீட்டுத் தலைவன் கத்தினன். "ஐயோ! என் குழந்தையைக் காப்பாற்றுங்கள். என்ன வேண்டுமானலும் பரிசாகத் தருகி றேன். என் உயிருக்கு மேலாக நேசிக்கும் என் கண்மணியைக் காப்பாற்றுகிறவர்களுக்கு நான் எதையும் தருகிறேன். ஏன் என் உயி ரைக்கூடத் தரத் தயாராயிருக்கிறேன். யாரா வது எடுத்து வாருங்கள்" என்று அருகிலிருந்த மக்களைப் பார்த்து வெகுவாகக் கெஞ்சினன். தன் உயிருக்கு மேலாக அவன் தன் குழந் தையை நேசிப்பது உண்மையாயிருந்தால் அவனே தீயில் புகுந்து குழந்தையைக் காப் பாற்றியிருக்கலாமல்லவா? தன் உடல் மீது ஒவ்வொருவனும் வைத்திருக்கும் அபிமானம் இவ்வளவு அவ்வளவு அன்று. அவலட்சணம் பொருந்திய முகம் படைத்தவனும் தன்னுடைய பிம்பத்தைக் கண்ணடியில் பார்த்தால் அதைக் கண்டு சில நிமிடமாவது மெய்மறந்து விடு கிறன். அவரவருக்கு அவரவருடைய உடல், நடை, இசை முதலியன அழகாக இனிமை யாகத்தானிருக்கும். இதை வைத்துத்தான் "எவ்வுடல் எடுத்தார் அவ்வுடல் வாழ்க்கை இன்பம் எனவே துன்பம் இலையென" என்றர் தாயுமானவர்.

ஆசையைத் துறந்த தூயவர்களைக் கண்டால் உலக வாசனை படைத்தவர்களுக்கு வியப்பா கத் தோன்றும். இது எப்படி இவர்களுக்குக் கைகூடியது என்பர். 'அவர்கள் தாய் தந்தை யர் செய்த தவம் என்பார்' ஒருவர். இப்படி யெல்லாம் தங்களுக்குத் தோன்றியதை வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசித் தீர்ப்பது உலகத்தவர் போக்கு. உண்மை அதுவன்று. ஆசையை வளர்ப்பதும், ஆசையைத் துறப் பதும் பழக்கத்தால் வருவதாகும். பொருளை நினைப்பதால், அடிக்கடி பார்ப்பதால், அதைப் பற்றிக் கேட்பதால், அதை நுகர்வதால் பற்று உண்டாகிறது. இதற்கு முன்பு நாம் என்றைக் குமே கண்டிராத, கேட்டிராத, நுகராத, அனுபவியாத பொருளிடத்து ஆசை வைக்க மாட்டோம். மது குடித்தவர்களும், புகைபிடிப் பவர்களும் திரும்பத் திரும்ப அதையே செய்து

வருவதன் விளைவாக அவர்களால் அவைகளை விட முடிவதில்லை. ஆனால் தொடக்க நிலையில் மது அல்லது புகை அருந்த முயன்றபொழுது ஒருவிதக் குமட்டலோ, அருவருப்போ ஏற்பட்டிருக்கும். அப்படியே ஏற்பட்டாலும் திரும்பத் திரும்ப அதில் ஒருவித சுவையுணர்வு இருப்பதாக அவர்கள்கற்பனை பண்ணி மகிழ்ந்ததால் அதில் வெறியர்கள் ஆனார்கள். ஆனால் அப்பழக்கங்களை விடவேயன்று முடியவில்லையே என்று அங்கலாய்ப்பவர்களும் முயன்றால் நிச்சயம் விடமுடியும். பழக்கத்தை உண்டுடண்ண எவ்வளவு பிரயாசை எடுத்தார்களோ விடுவதற்கு அதைவிட அதிகப் பிரயாசை எடுத்தாக வேண்டும். சுவரில் ஓர் ஆணியைச் சுத்தியால் அடிக்கிறோம். ஆணி பாதியளவு சுவரினுள் புகுந்துவிட்டது. அதைப் பிடுங்க நேரிடுகிறது. அப்பொழுது என்ன செய்வோம்? எவ்வளவு அடிகொடுத்தோமோ அதற்கும் அதிகமான பலத்தை உபயோகித்து அசைத்துத்தான் பிடுங்கவேண்டும். இராமகிருஷ்ணர் இதை இன்னும் அற்புதமாக விளக்குகிறார். ஒருவர் தம் நண்பரைப் பார்க்க அவர் வீட்டுக்குச் சென்றார். நண்பரின் மடியிலே நாய் அமர்ந்து அவருடைய முகத்தை நக்கிக்கொண்டிருந்தது. இது நாயின் இயல்பு என்று கருதிய அவரும் அதன் போக்கிலே விட்டுவிட்டார். இந்தக் காட்சியைக் கண்டு வந்தவர் நண்டரிடம் கூறினார்: 'நாயை மடிமீது வைத்திருப்பதில் குற்றம் எதுவுமில்லை. ஆனால் அது தன் நாவால் நம்மை நக்குகிற அளவுக்கு அதற்கு இடம் தரலாகாது' என்றார். நண்பருக்கும் அது சரியெனப்பட்டது. உடனே மடியிலிருந்த நாயைக் கையால் தட்டி ஓட்டிவிட்டார். வந்தவர் போன பின்பு எஜமானன் தனித்திருந்தபோது மறுபடியும் அது அவரிடம் வந்தது. அதை மறுபடியும் அடித்து ஓட்டிவிட்டார். இவ்வாறு அநேகம் தடவை அவரிடம் வந்தபொழுதெல்லாம் அவர் அடித்து ஓட்ட ஓட்ட நாயும் 'சரி, நமது எஜமானரின் மனநிலை மாறிவிட்டது, ஆகவே எட்ட இருந்தே வாலை ஆட்டினால் போதும். அருகில் போனால் அடிதான் விழும்' என்று உணர்ந்து எட்ட இருந்தே தன் எஜமான விசுவாசத்தைக் காட்ட ஆரம்பித்தது. நாய்க்கு நிகர், நாம் கொண்டுள்ள ஆசையும். பொருந்தாத ஆசைக்குப் பல்லாண்டுகளாக நம் மனத்தில் இடம் தந்துவிட்டோம். அவ்வப்போது அது தலையெடுத்து ஆதிக்கம் செலுத்த வருகிறபொழுது ஞான விசாரம் என்ற அடிகொடுத்தோ, உபவாசம் என்ற கொட்டுக் கொடுத்தோ அதை நம் மனத்திலிருந்து நீக்க முடியும். அங்ஙனம் முடியாதபோது இறைவனிடம் அடிக்கடி பிரார்த்தனை செய்து உருகினால் ஒட்டியிருந்து உபத்திரவம் செய்த ஆசைக் கூட்டங்கள் ஓடிவிடும் என்பதற்கு ஐயம் உண்டோ?

பழக்கத்தை இரண்டாவது இயற்கைஎன்றே சொல்லலாம். மனதில் ஊறிப்போன ஒரு தீய பழக்கத்தை மாற்றி நல்ல பழக்கமாக ஆக்கமுடியும். ஆகவே பிறவிக்குணத்தை மாற்றமுடியாது என்பது இல்லை. 'பிரதிபக்ஷபாவனை' என்ற ஒருமுறையைக் கையாண்டு தீயதை நல்லதாக மாற்றமுடியும். இது முற்றிலும் விஞ்ஞானரீதியானது. இதைக் கையாளுகிற கெட்ட எண்ணம் படைத்தவனும் நல்ல எண்ணமே வடிவெடுத்தவன் ஆகமுடியும். எண்ணத்தைத் தொடர்ந்தே உணர்ச்சி வருகிறது என்பது எல்லாரும் ஏற்றுக்கொள்ளுகிற ஓர் உண்மை. பகைவனாக ஒருவன் இருக்கிறான். அவனை நண்பனாக்குவதற்கு இந்த முறையை முதலில் கையாளலாம். நமக்கு எதிரே வருகிற விரோதியை விரோதியாகப்பார்க்காமல் அவனுடைய இக்கட்டான நிலையை எண்ணி அவன் மீது நாமாக அனுதாபத்தை வரவழைத்து அவனைக் காணுகிறபொழுது நம் அனுதாபமான இரக்க எண்ணத்தைத் தொடர்ந்து கருணை உணர்வு அவன்மீது நம்மையறியாமலே உதிப்பது புலனாகும். இவ்வாறே காம எண்ணம் தலைதூக்குகிறபொழுது பிரம்மச்சரியத்தின் மேன்மையைச் சிந்தித்தால், அதில் வெற்றி அடைந்தவர்கள் அடைந்த சிறப்பைச்சிந்தித்தால் காம எண்ணம் நாசமுறும். பயம் தலையெடுக்கிறபொழுது அஞ்சாமையை எண்ணுதலும், அஞ்சாதிருந்து அகிலத்தை ஆட்டிப்படைத்த வீரர்களின் வாழ்வை எண்ணுதலும் அச்சத்தைப் போக்க அருமருந்தாகும். ஆகவே ஆசைக்கு வசப்பட்டிருக்கும் மாந்தர்கள் தங்களைத் தாக்க வருகிற ஆசைகளை இத்தகைய பிரதிபக்ஷபாவனைமூலம் போக்கி நிராசையில் நிலைபெறலாம்.

வாசுதேவமனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

அந்தக்கரணத்தில் பிரவேசித்த சிதாபாசன் (சேதனன் போல் தோன்றுபவன், பிரதி பிம்பம்) என்கிற ஜீவன் அவஸ்தா திரயங்களோடு கூடியவன். அவன் இப்பொழுது விழித்துக் கொண்டிருக்கிறான், இப்பொழுது சொப்பனம் காண்கிறான், இப்பொழுது சுஷுப்தியில் அக்ஞானத்தில் மயங்கி இருக்கிறான், இப்பொழுது சுகத்திலிருக்கிறான், இப்பொழுது துக்கத்திலிருக்கிறான், இப்பொழுது உதாசீனனாய் இருக்கிறான் என்றெல்லாம் கூறும் இந்த ஜீவனின் பலவித அவஸ்தைகள் எல்லாவற்றையும் தான் சித்ரூபியாக (ஞானசொரூபமாக) இருந்து கொண்டு எது அறிகிறதோ அதுவே ஆத்மா. அதுதான் மூன்று அவஸ்தைகளையும் நேரில் பார்க்கிறது. அதை சாக்ஷி என்று தெரிந்து கொள்ளவேண்டும். அந்த ஆத்மாவுக்குத் தன்னுடைய மாறுதலற்ற தன்மை எப்படித் தெரிகிறது? தன் முகத்தின் அழகைத் தான் நேரில் பார்க்க முடியாவிட்டாலும் கண்ணாடியில் விழும் தன் பிரதிபிம்பம் மூலம் தனது அழகை எப்படி அறிய முடிகிறதோ அதே போன்று ஆத்மாவும் தன் மாறுதல் அற்ற தன்மையை அந்தக்கரணத்தில் விழும் தனது பிரதி பிம்பம் மூலம் அறிந்து கொள்கிறது. கண்ணாடியோ, பிரதி பிம்பமோ, பிம்பத்துக்குக் காரணமான மூலப் பொருளை எப்படி அறிந்து கொள்வதில்லையோ அப்படியே அந்தக்கரணமும் அதில் தோன்றும் பிரதி பிம்பமான ஜீவனும் தங்களுக்கு மூல காரணமான வஸ்துவை அறிய முடியாது. நாம் அசைகிறபடி நிழல் அசைவது போன்று ஆத்மாவின் சந்நிதியில் ஜீவன் செயலாற்றுவது போன்று தென்படுகிறது; அதற்கென்று செயல் ஒன்றுமில்லை. இனி, ஆராய்ச்சி இன்னும் சூக்ஷ்மமானது ஆகிறது.

இந்த ஆத்மா எதனால் அறியப்படுகிறது? எதனாலும் அறியப்படுவதில்லை. அறியப்படும் வஸ்துக்கள் எல்லாம் திருச்யம் (பார்க்கப்படும் பொருள்) ஞேயம் (அறியப்படுபொருள்) ஞானம் (அறிதல்) இவைகளுக்கு விஷயமானது. (இவ்வுலகம் இந்திரியங்களுக்கு விஷயமானது. ஆத்மாவோ எதனாலும், அதாவது இந்திரியங்களாலும் அந்தக்கரணத்தாலும் அறிய முடியாதது. அதாவது அது எதற்கும் விஷயமாகாதது.) ஆத்மா அறிவு ரூபமானது. அதைத் திருக் என்பார்கள். அது ஒன்றே அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஸ்வயம்பிரகாசமான ஆத்மா வேறுவஸ்துவினால் அறியப்படுவதில்லை. இது எப்படி எனில் நம்மால் பார்க்கப்படும் குடம் தன்னைப் பார்ப்பவனாகிய நம்மை அறிவதில்லை. (குழந்தை ஒன்றை நாம் பார்க்கிறோம். அது அகங்காரமற்ற நிலையில் இருக்கிறது. நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது, கைகளை நீட்டுகிறது.) குடத்தைப் பார்ப்பவன் அறிவுள்ளவனாதலால் அவன் குடத்தையும் பார்க்கிறான்; தன்னைத் தானேயும் அறிந்துகொள்கிறான். அறியப்படு பொருள்கள் எல்லாம் அதாவது இந்த ஜீவரூபமும் பிரபஞ்சமும் நிழல், கனவு, கானல்நீர், கண்ணாடியில் தோன்றும் பிரதிபிம்பம், கயிற்றில் தோன்றும் பாம்பு போன்றவை. அறிபவனாகிய ஆத்மாவே அனைத்தும். அவனே ஸத், சித், ஆனந்த ரூபன். அவனே இப்படியெல்லாம் அறிகிறான், நடிக்கிறான். ஆத்ம தத்துவங்களை விளக்கும் கதைகளாகிய ஆட்டுமந்தையில் வளர்ந்த சிங்கக்குட்டி, திருடர்கள் மத்தியில் வாழ்ந்த ராஜகுமாரன் போன்று மற்றும் ஒரு கதை இருக்கிறது. அதன் பெயர் 'தானே பத்தாமவன்.' அதையும் தெரிந்து கொள்வோம். பத்துச் சீடர்கள் ஆற்றுக்கு நீராடப் போனார்கள். நீராடிவிட்டுத் திரும்பும்போது ஒருவனைக் காணவில்லை. பத்துப் பேரும் எண்ணிப் பார்த்தார்கள். ஒருவனைக்காணோம். ஆற்றில் பார்த்தார்கள். கண்ணுக்கு எட்டிய வரை ஒன்றும் தெரியவில்லை. கவலை தோய்ந்தவர்களாக என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தார்கள். இவர்களைத் தேடிக்கொண்டு குரு அங்கே வந்து சேர்ந்தார். அவர்கள் கவலையுடன் தங்களில் ஒருவனைக் காணவில்லை என்று சொன்னார்கள். குருவுக்கு விஷயம் விளங்கிவிட்டது. 'குழந்தைகளே! நீங்கள் பத்துப்பேரும் இருக்கிறீர்கள், கவலை வேண்டாம்' என்று சொன்னார். அவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. அவன் எங்கே என்று கேட்டார்கள்.

ஒருவனை எண்ணச் சொன்னார். ஒன்பதுபேரை எண்ணினான். தன்னை எண்ண விட்டுவிட்டான். பழையபடி திகைத்தான். 'அந்தப் பத்தாமவன் நீதான்' என்று குரு உணர்த்தினார். தன்னை எண்ணாமல் விட்டது ஆவரண சக்தி (மறைப்பு சக்தி) தங்களில் ஒருவனைக் காணவில்லை என்று கவலைப்பட்டது விக்ஷேப சக்தி (பொய்த்தோற்றம்). பத்தாமவன் இருக்கிறான் என்று குரு சொன்னதும் ஏற்பட்ட மகிழ்ச்சி, கவலை போனது. அவன் எங்கே என்கிற ஆர்வம் மிகுந்தது எல்லாம் பரோக்ஷ ஞானம். (கேள்வி மாத்திரம், பிரத்யக்ஷம் ஆகவில்லை, நேருக்கு நேர் இன்னும் பார்க்கவில்லை). எண்ணிக் காட்டியவுடன் தன்னை அந்தப் பத்தாமவன் என்று தெரிந்துகொண்டது அபரோக்ஷ ஞானம். இது நல்லதோர் விளக்கமாகும். தோளில் ஆட்டுக் குட்டியைப் போட்டுக்கொண்டு அதை ஊரெல்லாம் ஒருவன் தேடினான் என்று சொல்வார்கள். தன்னிடத்திலிருந்து தோன்றிய கஸ்தூரி வாசனையை மான் வனமெல்லாம் தேடித்திரிகிறது என்று சொல்வார்கள். நாம் தேடும் ஆத்மா நாமே. நான் என்கிற சொல்லுக்கு இலக்காக இருப்பது ஆத்மாவே. இந்த இடத்தில் மற்றொரு சிறு புராணக் கதையையும் சேர்த்து ஒப்புநோக்குவது நன்மை பயக்கும். சிவபிரானை வணங்கச் செல்வதற்காகப் பிரம்மதேவன் கைலாயத்திற்கு வந்தார். வரும் வழியில் குமரனைச் சந்தித்தார். புன்முறுவலுடன், வணக்கம் செலுத்தாது அலக்ஷ்யமாக அவரைக் கடந்து சென்றார். சுப்பிரமணிய சுவாமிக்குக் கோபம் உண்டாயிற்று. பிரம்மதேவரைக் கூப்பிட்டார். உனக்கு ஓங்காரத்தின் உட்பொருள் தெரியுமா? என்று கேட்டார். பிரம்மதேவர் விழித்தார். பிரணவத்தின் உட்பொருள் தெரியவில்லை. உனக்கு ஏன இத்தனை அகங்காரம்? என்று பிரம்மாவின் தலையில் குட்டினார். அவரைச் சிறையில் அடைக்கக் கட்டளையிட்டார். பிரம்மா சிறையில் வைக்கப்பட்டார். சிருஷ்டி ஸ்தம்பித்தது. இந்திரன் முதலாயினோர் சிவபிரானிடம் முறையிட்டனர். தன் திருக்குமாரனைச் சிவபிரான் கூப்பிட்டார். நடந்ததைக் கேட்டார். குமரன் விளக்கினார் 'குழந்தாய், பிரணவத்தின் உட்பொருள் உனக்குத் தெரியுமா?' என்று சிவபெருமான் கேட்டார். 'ஓ, தெரியுமே' என்றார் குமரன். சொல் பார்க்கலாம் என்றார் சிவன். அதற்கேற்ற முறைப்படி, குருசிஷ்ய பாவனையில் இருந்தால்தான் சொல்வேன் என்றார் குமரன். சரி, எப்படி இருக்கவேண்டும் என்று வினவினார் அப்பா. குரு உயர்ந்த ஸ்தானத்திலும் சீடன் கீழே நின்றும் பணிந்தும் இருக்கவேண்டும் என்றார் குமரன். சிவபிரான் மகிழ்ந்தார். விஷயம் பெரியதில் பெரியதல்லவா! பூர்வாங்கபீடிகையே பலமாக இருக்கிறது. குழந்தையை அப்பா கரங்களில் அன்புடன் தூக்கிக்கொண்டார். குழந்தை இப்போது அப்பாவைவிட உயரத்தில் இருந்தது. அப்பாவின் காதுகளில் மெல்ல ஓதியது. "பிரணவத்தின் உட்பொருள் நீதான் அப்பா" என்றது. அப்பாவிற்குப் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. தந்தை வலத்தால் அருள்கைக் கனியோனும் முத்தவன் விளங்கினான். இப்போது இளையவன் தகப்பன் சுவாமி, சுவாமிநாதனும் விளங்குகிறான். சீடனின் தெளிவு, சீலம், பக்தி குருவுக்குப் பெருமகிழ்ச்சியை உண்டாக்குகிறது. மகனின் திறமை, அன்பு, ஆற்றல், புகழ் தகப்பனுக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றன. ஜீவர்கள் இறைவனை உணர்ந்தால், அறிந்தால், இறைவனுக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகிறது. இது பக்தனின் முடிந்த நிலை. எல்லாம் நீயே. எல்லாம் உன் செயலே. ஞானியின் அனுபவம் தான் என்பதற்கு இலக்காவது ஆத்மா; இறைவன். இந்த இரண்டும் ஒன்றே. பக்தியும் ஞானமும் முடிவில் ஒன்றுபட்டுவிடுகின்றன. இந்த ஆத்மா ஒருபொழுதும் திருசியம் ஆவதில்லை, அது எதனாலும் பார்க்க முடியாதது. அது பார்க்கப்படு பொருள் ஆவதில்லை. பத்தாமவன் தன்னைத் தானேதான் அறிந்து கொள்கிறான். மற்ற ஒன்பது பேர்களால் ஒருவராலும் அறியப்படுவதில்லை. அதேபோன்று ஆத்மா தானே அனுபவ சொருபனாதலால் மற்றதால் அறியப்படுவதில்லை என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

நாம் யார் என்கிற ஆராய்ச்சி நாமே ஆத்மா, ஆத்மாவே நாமாக இருக்கிறது என்று ஜீவாத்மா — பரமாத்மாவின் இணக்கத்தை, ஏகத்வத்தை நிலைநாட்டுகிறது. திருக்-திருச்ய விவேகம், ஆராய்ச்சி ஆத்மாவின் யதார்த்த

நிலையை, நிஜசொருபத்தை விளககுகிறது. பார்ப்பது யார் — பார்க்கப்படு பொருள்கள் எவை—இது சாதாரணமான விஷயம் போன்று தோன்றுகிறது. ஆனல் சிந்தித்தால்தான் விளங்கும். நாம் பார்க்கிறோம். துணிக்கடையில் நிறுத்தப்பட்டுள்ள அலங்கார பொம்மையும் பார்க்கிறது. இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் நமக்குத் தெரிகிறது, புரிகிறது. இந்த ஸ்தூலக் கண் பார்க்கவில்லை. உணர்ச்சி நரம்புகள், திரை, மூளை இவை யாவும் பார்க்கவில்லை உள்ளே உள்ள ஆத்மாவே பார்க்கிறது. “சூரியன் ஆங்குப் பிரகாசிப்பதில்லை. சந்திரனும் நக்ஷத்திரங்களும் மின்னல்களும் ஆங்கு ஒளிர்வதில்லை. இனி, இந்த நெருப்பு மற்றும் உலக விளக்குகள் எப்படிப் பிரகாசிக்கும்? பிரம்மத்தைச் சார்ந்து யாவும் பிரகாசிக்கின்றன. அதன் பிரகாசத்தினின்று இவை யாவும் வெளிச்சத்தைப் பெறுகின்றன” என்பது வேதத்தின் ஒரு விளக்கம், வர்ணனை.

இதற்குப் பிரமாணம் என்ன? பிரமாணங்கள் நான்கு வகைப்படும். பிரத்யக்ஷம், அனுமானம், உபமானம், சப்தம் என்று அவைகள் சொல்லப்படுகின்றன. இவை தவிர மேலும் நான்கு பிரமாணங்களும் இருக்கின்றன. அவை அர்த்தாபத்தி, ஸம்பவம், ஐதிஹ்யம், அனுபலப்தி எனப்படும். பின் சொல்லப்பட்ட நான்கும் முன் சொன்ன நான்கிலேயே அடங்கியுள்ளன என்பது தீர்மானம். வேதாந்திகளில் சிலர் பிரமாணங்கள் ஆறு என்பார்கள். ஏதோ ஒன்று சரிதானு என்பதற்கு இப்படிக் காரணங்கள், விஷயங்கள், அனுபவங்கள், யூகங்கள், பிரமாணங்கள் எத்தனையோ அமையலாம். அவைகளின் எண்ணிக்கை முக்கியமன்று. விஷயம்தான் முக்கியம். அக்ஷம் என்ருல் இந்திரியம். இந்திரியத்தால் உண்டாகும் பிரமாணம் பிரத்தியக்ஷப் பிரமாணம் எனப்படும். புகை முதலிய அடையாளங்களால் ஏற்படுவது அனுமானம், யூகம், யுக்தி எனப்படும். ஸாத்ருச்யத்தினல் (ஒப்பு நோக்குவதால்) ஏற்படுவது உபமானம். நண்பர்களின், அன்புடையவர்களின், ஆப்தர்களின், அன்பான மொழி ஆப்த வாக்கியம், உபதேசம் சப்தம் எனப்படுகிறது. ஆத்மாவை இந்திரியங்களால் அறியமுடியாது; ஆகையால் பிரத்யக்ஷப் பிரமாணம் இங்கு உபயோகமாகாது. ஆத்மா அகண்ட வஸ்து; அவயவம் இல்லாதது; துண்டுபண்ண முடியாத வஸ்து, அதில் பாகங்கள் இல்லை. ஆகையால் அனுமானமும் பயன்படாது, இங்கு வராது. ஆத்மா ஏகவஸ்து, ஒன்று ஆனதால் அதற்கு உதாரணம், உபமானம், சமானம் சொல்ல முடியாது. ஆகவே ஆத்மா உண்டு என்பதற்குச் சப்தம் தான் பிரமாணம், நண்பனின் வாக்கியம்தான் சப்தப் பிரமாணம் எனப்படுகிறது. “பணப் பேய் பிடித்து அதனைத் தேடித்திரியும் இப் பித்துலகில் என் ஆண்டவனே, அண்ணலே, நீயே என் மேலான விலைமதிக்க ஒண்ணுத மாசிலா நன்மணியென்பதைக் கண்டுகொண்டேன். நான் என்னையே உன் டலிபீடத்தில் அர்ப்பணம் செய்துவிட்டேன். அன்பிற்குரிய ஒரு நண்பனைத் தேடித்திரியும் என் நீண்ட யாத்திரையில் ஆண்டவனே, நீ ஒருவனே நான் அன்பு பூணுவதற்குரியவன், என் ஆருயிர் நண்பன் என்பதைக் கண்டுகொண்டேன். நான் என்னை உனக்கே அர்ப்பணித்து விட்டேன்” இது வேதத்திலுள்ள ஒரு பிரார்த்தனை. இதுவே நம் பிரார்த்தனையாகவும் அமையவேண்டும். உண்மையை, நன்மையைச் சொல்பவன்தான் நண்பன். ஆகையால் உண்மையைச் சொல்லும் முக்கிய நண்பரான ஈசுவரனுடைய வாக்கியமான வேதம்தான் சப்தப் பிரமாணமாகும். ஆகையால் ஆத்மா உண்டு என்பதற்குச் சுருதி, வேதம்தான் பிரமாணம். என் தாயார் என்பதற்கு என் தாயாரின் வாக்கியமே பிரமாணம். ஆப்த வாக்கியம் என்பது அனுபூதி வாக்கியம். வெறும்வாக்கியம் அன்று. நம்நித்திய அனுபவமே பிரமாணம். சாக்ஷியாக இருக்கும் மனிதனைப் பார்க்கப்படும்பொருள்களின் குணதோஷங்கள் எப்படிப் பாதிப்பதில்லையோ அப்படி ஆத்மாவை அவரால் பார்க்கப்படும் அகங்காரம் அதன் நிலை, அதன் காரியங்கள், குணதோஷங்கள் இவை பாதிப்பதில்லை. ஆத்மா சாக்ஷி, ஆத்மா திருக், அது ஒரு நாளும் திருச்யம் ஆவதில்லை. சைதன்ய ரூபி, போக்தா (அனுபவ ரூபி) ஆகிய ஆத்மசொருப லக்ஷணங்களை, தத்துவங்களை எந்தப் பாக்கிய சாலி வேதங்கள்மூலம் அறிகிருனே அவ்வுணர்வில் நிலைநிற்கிருனே அவனே ஜீவன் முக்தன்.

குறிப்புகள்

சேவை :

இன்றைய மாணுக்கர்கள் எதிர்கால ஞானிகளாவார்கள். ஞானிகளாகக் கூடிய பூர்ண நிலை மாணுக்கர்களிடத்து மறைந்து கிடக்கிறது. மறைந்து கிடக்கும் அப்பூர்ண நிலையை வெளிப்படுத்துவதே கல்வியெனப்படும் என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார். தரிசாகக் கிடக்கும் நிலம் சாகுபடிக்குப் பயன்படுவதில்லை. அந்நிலத்தை உழுது பண்படுத்தினல் சாகுபடிக்கேற்ற நிலமாகத் திருந்தியமைகின்றது. மாணுக்கர்களுடைய உள்ளம் தரிசாகக் கிடக்கும் நிலத்திற்கு நிகராகிறது. அவர்களுடைய உள்ளத்தைக் கல்வியின் மூலம் பண்படுத்தினல் அது ஞானப் பயிர் விளைவிக்கும் உள்ளமாகத் திருந்தியமைகிறது. உள்ளத்தைப் பண்படுத்தும் கல்வியே உண்மையான கல்வியாகின்றது. பண்டைக் காலத்தில் உள்ளத்தைப் பண்படுத்துகின்ற கல்வி முறையாக நடந்தது. ஆகையினல் சிறந்த ஞானிகள் தோன்றினர்கள். பண்டைக்காலக் குருகுலக் கல்வியில் சேவையும், வழிபாடும் முக்கிய இடம் பெற்றிருந்தன. சேவையும், வழிபாடும் செய்வதன் மூலம் உள்ளம் பண்படுத்தப்படுகின்றது. சேவை செய்வதன் மூலம் உயிர்களிடத்து அன்பும் இரக்கமும் உள்ளத்தில் வளர்ந்து வருகின்றன. வழிபாடு செய்வதன் மூலம் சிற்றியல்புகளெல்லாம் பேரியல்புகளாக மாற்றப்படுகின்றன. அன்பும் இரக்கமும் உள்ளத்தில் உள்ள அகங்காரத்தை ஒழிக்கின்றன. அகங்காரமற்ற உள்ளத்தில் பேரியல்புகள் வளருமானல் அவ்வுள்ளத்தில் மறைந்து கிடக்கும் ஞானம் வெளிப்படுகின்றது. இவ்வுண்மையை அறிந்திருந்த பண்டைக்கால மக்கள் குருகுலக் கல்வியில் சேவையையும், வழிபாட்டையும் புகுத்திச் செயலுக்குக் கொண்டுவந்தனர்.

இன்றைய கல்வியில் சேவையும் வழிபாடும் பின்னணிக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. கல்வியிலுள்ள இக்குறைபாடு போக்கப்படவேண்டும். மாணுக்கர்களிடமுள்ள சிறுமைகளுக்கெல்லாம் கல்வியிலுள்ள இக்குறைபாடே காரணமாகிறது. தேவையில்லாத கருத்துக்களை உள்ளத்தில் திணிப்பது கல்வியாகாது. ஐம்பொறிகள் வாயிலாக மனதினுள் சிற்றியல்புகளை வளர்க்கும் விஷயங்களை வாங்குவதற்கு மாணுக்கர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அதன் விளைவாக அவர்கள் சிற்றியல்பே வடிவெடுத்தவர்களாகி விடுகிருர்கள். கீழ்மையான கருத்துக்களை வெளியிடும் சில நூல்களும், பத்திரிகைகளும் சிற்றியல்பைத் தூண்டுபவைகளாக இருக்கின்றன. விபசாரத்தன்மும், விபரீதமான களவும், கொலையும் கற்றவர்களிடையே நிகழ்ந்து வருவதைப் பத்திரிகைகள் வாயிலாக அறிகின்ருேம். துப்பறியும் நாவல்களும், காமத்தை வளர்க்கும் கருத்துக்களடங்கிய நூல்களும், பத்திரிகைகளும், கற்றவர்களிடத்தில் இக்கொடுமையை வளர்த்திருக்கின்றன. இதற்கு நாம் விமோசனம் தேடினுலொழிய சிறந்த மக்களை உருவாக்க முடியாது.

6—11—80 தீபாவளிப் பண்டிகையன்று திருச்சி கைலாசபுரத்திலுள்ள பாய்லர் பிளாண்ட் மேல்நிலைப்பள்ளி மாணுக்கர்கள் சிலர் ஓர் அரிய சேவை செய்தனர். தீபாவளியன்று ஒவ்வொரு வீடாகச் சென்று பட்சணங்கள், பலகாரங்கள் கேட்டு வாங்கி அவற்றை ஒன்று சேர்த்தனர். அவற்றை அன்று பிற்பகல் கைலாசபுரத்துக்கருகிலுள்ள கிருஷ்ண சமுத்திரம் என்னும் கிராமத்திலுள்ள சேரி வாழ் மக்களுக்கு வழங்கக் கொண்டு வந்தார்கள். அச்சேரியில் நடத்தப்பட்டுவரும் பாலர் பள்ளிக் குழந்தைகளுக்குத் தீபாவளியன்று புது உடைகள் வழங்கக் கைலாசபுரம் பாய்லர் பிளாண்ட் நிர்வாக இயக்குநர் (E.D) ஏற்பாடு செய்திருந்தார். அன்று ஒரு கூட்டம் அமைத்து அவ்வூர் மக்களுக்கு நல்வாழ்க்கையைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. கூட்டத் துவக்கத்தில் அவ்வூர் பாலர்பள்ளிக் குழந்தைகளுக்குப் புதுச்சிருடைகள் வழங்கப்பட்டன. கூட்டத்தின் இறுதியில் பாய்லர் பிளாண்ட் மேல்நிலைப் பள்ளி மாணுக்கர்கள் தாங்கள் சேகரித்து வந்த பட்சணங்களைக் குழந்தைகளுக்கு அன்புடன் வழங்கி ஆனந்தமடைந்தனர். தீபாவளியன்று விலையுயர்ந்த உடைகளைத் தாங்கள் அணிந்து கொண்டு, பட்டாசு வெடித்து, சினிமாப் பார்த்து,

கேளிக்கைகளிலும், துராசாரங்களிலும் ஈடுபட்டு இன்பமடைபவர்களுண்டு. அப்படி இன்பமடைவதே தீபாவளி கொண்டாடுவது என்று பெரும்பாலோர் நம்பி வருகின்றனர். அப்படித் தீபாவளி கொண்டாடுவதன் மூலம் அவர்கள் தங்களிடத்திலுள்ள அசுர இயல்பை வளர்ப்பவர்களாகிறார்கள். மேலும் தங்கள் முயற்சியின் மூலம் சம்பாதித்த பொருள்களை அவர்கள் விரயம் செய்தவர்களாகிறார்கள். இப்படிப் பொழுது போக்குவதற்குப் பதிலாகப் பாய்லர் பிளாண்ட் மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்கள் சிலர் அன்று நரசேவையில் ஈடுபட்டு இன்பமடைந்தார்கள். அவர்கள் செய்த சேவை பாராட்டுதற்குரியதாகும். தனக்கெனத் தேடாது பிறரை மகிழ்விப்பதற்காகப் பட்சணங்களைத் தேடினார்கள். அச்சேரி வாழ் மக்கள் அடைந்த மகிழ்ச்சியைக் கண்டு அம்மாணாக்கர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். கைலாசபுரம் பாய்லர் பிளாண்ட் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் படித்துவரும் அச்சேரியைச்சேர்ந்த ஒரு மாணவி இசையோடு நாமாவளியும், பாடல்களும் பாடி அச்சேரிவாழ் மக்களுக்கு இசை விருந்தளித்தாள். இங்ஙனம் அவர்கள் அன்று அம்மக்கள் உள்ளத்தில் அன்பையும், நல்லுணர்வையும் வளர்த்தார்கள். சேவை எப்படிச் செய்யவேண்டும் என்பதற்கு அன்று நிகழ்ந்த நிகழ்ச்சி முன்மாதிரியாக அமைகிறது. வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் மாணவர்களும், மாணாக்கியர்களும், பெற்றோர்களுக்கும், பள்ளிக்கும், சமுதாயத்துக்கும் சேவை செய்து பழகவேண்டும். பிறர் இன்புறக் கண்டு தான் இன்புறுதல் என்ற கோட்பாட்டை அவர்கள் சேவையின் மூலம் அறிந்துகொள்ள வேண்டும். இம்முறையில் மாணாக்கர்கள் பண்பட்டு வருவார்களானால் எதிர்காலத்தில் அவர்கள் சிறந்த மேதைகளாக விளங்குவார்களென்பது திண்ணம்.

சேவையின் மூலம் சிறந்த கல்வி பெற்றவர் ஸ்ரீ சாரதாதேவியார். அவர் பள்ளி செல்லவே இல்லை. சிறு வயதாக இருந்தபொழுது பெற்றோர்கட்குப் பணிவிடை செய்து வந்தார். வயது வந்த பிறகு தம்மை மணந்துகொண்ட ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பணிவிடை செய்வதில் தம்மை முற்றும் அர்ப்பணித்தார். சுயநலமற்றும் பக்தியோடும் அவர் செய்த பணிவிடை ஞானம் பெறுவதற்கு உரிய நிலைக்கு அவரைத் தயார்படுத்தியது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரை வைத்து வழிபாடு செய்து ஞானத்தாய் நிலைக்கு உயர்த்தினார். விவேகானந்தர் போன்றவர்களுக்கெல்லாம் ஞானத் தாயாக ஸ்ரீ சாரதாதேவியார் விளங்கினார். சேவையினுடைய மகிமை ஸ்ரீ சாரதாதேவியார் வாழ்க்கையின் மூலம் விளங்குகிறது.

தற்காலத்தில் நரசேவை புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது. விவேகானந்தர் நரசேவையை வற்புறுத்தியிருக்கின்றார். நரசேவை நாராயணசேவை ஆகிறது என்று அவர் பகர்ந்துள்ளார். மக்களுக்குச் செய்யும் பணிவிடை மகேசுவரனுக்குச் செய்யும் பணிவிடையாகிறது. வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசியமான பொருள்கள் மக்களுக்குக் குறைவில்லாது கிடைக்கவேண்டும். ஒழுக்கத்திலும், பண்பாட்டிலும் மக்கள் தரம் உயரவேண்டும். மக்களிடையே பொருளாதாரம் வளர்வதற்கும் பண்பாடு உயர்வதற்கும் நாம் மேற்கொள்கின்ற செயல் மக்களுக்குச் செய்கின்ற சேவையாகிறது. கற்றவர்கள் தங்களிடையே ஆற்றலையும், அறிவையும், அன்பையும் வளர்த்து அவற்றை மக்கள் சமுதாய வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவார்களானால் அது சிறந்த நரசேவை ஆகிறது. நரசேவையில் ஊக்கமும், மகிழ்ச்சியும் உடையவர்களாக மாணவர்களைத் தயார்படுத்துவது நல்ல கல்வித்திட்டம் ஆகிறது.

வழிபாடு :

விரதங்களுள் பெரிய விரதம் பிரம்மச்சரிய விரதமாகிறது. மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் பிரம்மச்சரிய விரதம் அனுஷ்டிப்பவர்களுக்குப் பிரம்மவித்தை உட்பட எல்லா வித்தைகளும் உரியவையாகின்றன. பிரம்மச்சரிய விரதத்துக்குப் புலனடக்கம் இன்றியமையாததாகிறது. ஐம்பொறிகளின் வழியாக வரும் உணர்வை மேலாம் உணர்வாக மாற்றி அமைப்பதைப் புலனடக்கம் என்கின்றோம். ஐம்பொறிகளையும் கடவுள் வழிபாட்டில் ஈடுபடுத்துகின்ற அளவு புலனடக்கம் நிகழ்கிறது. ஆலய வழிபாட்டில் புலனடக்கத்துக்கு வேண்டிய அளவு பயிற்சி இருக்கிறது. அதனால்தான் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

என்ற கோட்பாடு வந்தது. பலபேர் ஓர் இடத்தில் ஒன்றுகூடி வழிபாடு செய்யும்பொழுது அவ்விடத்தில் அருள்சக்தி ஓங்குகிறது. அருள் சக்தி நிறைந்த இடமே ஆலயம் எனப்படுகிறது. பழநியில் போகர் சமாதி உள்ளது. எனவே, அங்குள்ள மூர்த்தியிடம் அருள்சக்தி நிறைந்திருக்கிறது. இது போன்று அருள் நிறைந்த ஆலயங்கட்கு மாணாக்கர்களை வழிபாட்டுக்கு அழைத்துச் சென்று வழிபாடு செய்வது கல்வித்திட்டத்தில் இடம்பெறவேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள அருள்நிறைந்த க்ஷேத்திரம் ஒன்றுக்கு ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுலமாணவர்களை ஆண்டுக்கு ஒரு முறை வழிபாட்டுக்கு அழைத்துச் செல்வதுண்டு. இவ்வாண்டு பழநிமலைக்கு ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுலமாணவர்கள் சுமார் ஐந்நூறு பேர்களும், ஆசிரியர்கள், அன்பர்கள், சுமார் நூறு பேர்களும் 25–11–80 செவ்வாய்க்கிழமை அன்று வழிபாட்டுக்குச் சென்றனர். 25—11—80 அதிகாலை 4-30 மணிக்குத் திருப்பராய்த்துறையிலிருந்து ஏழு பஸ்களில் புறப்பட்டனர். ஏழு பஸ்களும் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்ற காட்சி கவர்ச்சிகரமாக இருந்தது. பலபேர் தூய மனப்பான்மையுடன் யாத்திரை செல்லும் பொழுது தனி மகத்துவம் ஏற்படுகிறது என்பது அன்று விளங்கியது. காலை 8-30 மணிக்கு அனைவரும் பழநிமலையை அடைந்தனர். சங்கரன்டாம்பாளையம் பட்டக்காரர் மடத்தில் தங்குவதற்கும், சமையலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. யாவரும் இறைவனுடைய நாமத்தைச் சொல்லிக்கொண்டு ஒரே பந்தியில் அமர்ந்து சிற்றுண்டி எடுத்துக்கொண்டனர்.

சிற்றுண்டிக்குப் பிறகு காலை 10-00 மணிக்கு அடிவாரத்தில் இருந்து எட்டு, ஒன்பது, பத்தாம் வகுப்பு மாணவர்களும், அன்பர்களும், தாய்மார்களும் கந்தர் அநுபூதி ஓதிக்கொண்டு மலைமீது ஏறினர். இசை வகுப்பு மாணவர்கள் கந்தர் அநுபூதியை ஒவ்வோர் அடியாகப் பாட அவர்களைப் பின்பற்றி மற்ற யாவரும் கந்தர் அநுபூதி சொல்ல மலை ஏறுதல் நிகழ்ந்தது. கந்தர் அநுபூதியில் ஒன்றித்த மனது படியேறும் சிரமத்தை வாங்கிக் கொள்ளவில்லை. நான்கு, ஐந்து, ஆறு, ஏழாம் வகுப்பு மாணவர்கள் "கார்த்திகேய, கார்த்திகேய, கார்த்திகேய பாஹிமாம், சுப்ரமணிய, சுப்ரமணிய, சுப்ரமணிய ரக்ஷமாம்" என்ற நாமாவளி சொல்லிக்கொண்டு மலை ஏறினர். சுமார் அறுநூறுபேர் கட்டுப்பாட்டுடனும், தெய்வச் சிந்தனையுடனும் மனம், வாக்கு, காயத்தை வழிபாட்டில் ஈடுபடுத்தி மலை ஏறிய காட்சி மனதுக்குச் சாந்தியையும், அமைதியையும் அளிப்பதாக இருந்தது. சுமார் ஒருமணி நேரம் மலை ஏற எடுத்துக் கொள்ளப்பட்டது. காலை பதினோரு மணிக்கு சுப்ரமணியர் சன்னிதி முன் அனைவரும் அமர்ந்து ஐக்கிய வழிபாடு செய்தனர். மேலும் அவ் ஐக்கிய வழிபாட்டில் சுமார் நூறு பக்தர்கள் கலந்துகொண்டார்கள். ஆக அன்று சுமார் எழுநூறு பேர் இரண்டு மணிநேரம் கூட்டு வழிபாடு செய்தது ஆலயத்தில் அருள்சக்தியை வளர்ப்பதாக இருந்தது. வழிபாடு நிகழ்ந்துகொண்டிருக்கும் பொழுது முருகனுக்கு அபிஷேகமும் நிகழ்ந்தது. வழிபாட்டின் இறுதியில் முருகனுக்கு அஷ்டோத்திர சதநாமம் சொல்லி அர்ச்சனை நிகழ்ந்தது. ஐக்கிய வழிபாட்டில் நாம ஜபமும், துதிப்பாடல்களும், உயர்ந்த கருத்துக்களை வாசிப்பதும் மாறி மாறி நிகழ்த்தப்பட்டன. பிரம்மகாயத்திரி ஜபம் எல்லாரும் சேர்ந்து ஏழுதடவை ஜபித்தார்கள். அர்ச்சனையின் பொழுது ஒருவர் அர்ச்சனைக்குரிய நாமங்களைக் கூற மற்ற அனைவரும் அவரைப் பின்தொடர்ந்து நாமங்களை உச்சரித்தனர். அப்படி அனைவரும் நாமத்தை ஒவ்வொருதடவை உச்சரிக்கும் பொழுது உள்ளே மூர்த்திக்கு அர்ச்சகர் வில்வம் அர்ச்சித்தார். வழிபாட்டில் அர்ச்சனை முக்கிய இடம் பெறுகிறது. ஆலய வழிபாட்டுக்குச் செல்கின்றவர்கள் அர்ச்சனைக்குரிய சீட்டு வாங்கிப்போய் அர்ச்சகர்களிடம் கொடுத்து விடுவார்கள். அர்ச்சகர் தம் போக்கில் அர்ச்சனை சொல்லிப் புஷ்பம் போடுவார். வழிபாட்டிற்குச் செல்பவர்கள் தம்போக்கில் மனதை எங்கேயோ அலைய விட்டுக்கொண்டிருப்பார்கள். இதுதான் பொதுவாக அர்ச்சனையின் பொழுது ஆலயத்தில் நிகழ்ந்து வருகிறது. இந்நிலைமாறி அனைவரும்கூடி நாமங்களைஉச்சரித்து அர்ச்சனையில் பங்குகொள்ள வேண்டும். அப்போதுதான் மனம் ஈசுவரன்பால் திருப்பப்படுகிறது. அன்று ஐக்கிய வணக்கத்தில் நிகழ்ந்த

அர்ச்சனையில் அனைவரும் கூடி அர்ச்சனை செய்யும் முறை பொதுமக்களுக்கு விளக்கிக் காட்டப்பட்டது. கடைசியில் அனைவரும் மங்களம் பாடி வழிபாட்டை முடித்தார்கள். தங்கள் உள்ளத்தில ஈசுவர பாவனையை வரவழைத்துக் கொண்டு ஒருவர்பின் ஒருவராய் வரிசையாகச் சென்று முருகனைத் தரிசித்தார்கள்.

நம் ஆலயங்களில் நிகழும் வழிபாட்டை ஒழுங்குபடுத்துவது அவசியமாகிறது. கிறிஸ்துவர்கள் ஆலயத்தில் ஓர் ஒழுங்குப்பாட்டுடன் வழிபாடு நிகழ்கிறது. அதேபோன்று நம் ஆலயத்தில் ஓர் ஒழுங்குப்பாட்டுடன் வழிபாடு செய்வது எப்படி என்பது அன்று நிகழ்ந்த கூட்டு வழிபாட்டின் மூலம் செய்து காட்டப்பட்டது. ஆலயத்தின்கண் அருளை வளர்ப்பவர்கள்தாம் ஆலயவழிபாட்டின் தத்துவத்தை அறிந்தவர்கள் ஆவார்கள். அருளுணர்வோடு வழிபாட்டுக்கு வரும் பக்தர்களின் கூட்டம் அதிகரிக்க வேண்டும். பலபேர் சேர்ந்து மனம் ஒன்றித்துக் கூட்டு வழிபாடு செய்வதில் பெரிய மகத்துவம் இருக்கிறது. தனிப்பட்ட முறையில் ஒருவர் பத்து நிமிஷம் செய்கிற தியானம் நூறு பேர் தியானம் செய்கின்ற இடத்தில் இருந்து செய்தால் அவர் பத்து நிமிஷம் செய்கிற தியானம் ஆயிரம் நிமிஷம் செய்கிற தியானத்திற்கு ஒப்பாகிறது. கூட்டு வழிபாட்டின் மகிமை அத்தகையதாம். அன்று மாணவர்களும், அன்பர்களும், தாய்மார்களும் சிறந்தமுறையில் கூட்டுவழிபாடு செய்து முருகன் அருளுக்குப் பாத்திரமானார்கள்.

சுமார் நண்பகல் ஒன்றரை மணிக்குப் பழனி மலையில் இருந்து கீழே இறங்கித் தங்கியிருந்த இடத்துக்கு வந்து பக்தர்கள் அனைவரும் சமாராதனையில் பங்கு கொண்டார்கள். மாணவர்களும், அன்பர்களும், தாய்மார்களுமாகச் சுமார் எண்ணூறு பேர் சமாராதனையில் பங்கு கொண்டு முருகன் திருவருளுக்குப் பாத்திரமானார்கள். சமாராதனையின்பொழுது பரிமாறி முடியும்வரை நாம ஜபம் சொன்னார்கள். பரிமாறி முடிந்தபின் மந்திரம் சொல்லிப் பிரசாதம் எடுத்துக் கொண்டார்கள். காலை எட்டரை மணிக்குத் துவங்கிய நிகழ்ச்சி பிற்பகல் இரண்டரை மணிக்கு முடிவுற்றது. காலை எட்டரை மணிமுதல் பிற்பகல் இரண்டரை மணிவரை மனதைத் தெய்வச்சிந்தனையில் ஈடுபடுத்தியிருந்தது அன்றையநிகழ்ச்சியின் சிறப்பாகும்.

எண்ணம்தான் செயலாக வடிவெடுக்கிறது. நல்ல எண்ணம் நல்ல செயலைத் தோற்றுவிக்கிறது. நல்லாசிரியர் ஒருவர் தாம் கல்விப் பணியில் இருந்தபொழுது ஈட்டியசெல்வத்தைத் தபோவனத்திடம் ஒப்படைத்தார். அவர் ஒப்படைத்த செல்வத்தின் ஒருபகுதியை நிலைத்த நிதியாக வைத்து அதில் வரும் வருவாயைக் கொண்டு ஆண்டுதோறும் பழனியில் தண்டபாணிக்கு அபிஷேகமும் பக்தர்களுக்கு அன்ன தானமும் நிகழ்த்தவேண்டும் என்று அவர் திருவுள்ளம் கொண்டிருந்தார். அவருடைய எண்ணமே அன்று செயலாக வடிவெடுத்து அவருடைய செல்வம் கல்விபயிலும் மாணக்கர்கட்கும், முருக பக்தர்களுக்கும் பயன்பட்டது. தென்னை மரம் வைத்தவர்கள் அவர்கள் காலத்தில் அதன் பயனைப் பெறுவிட்டாலும் அவர்களுக்குப் பின்வரும் சந்ததியினர் அதன் பயனை அனுபவிப்பார்கள். அங்ஙனம் அவ்வன்பர் தாம் உயிர் வாழ்ந்த காலத்தில் எண்ணிய எண்ணம் அவர் மறைந்தபின் செயலாக வடிவெடுத்திருக்கிறது.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்

என்பது குறள். அவர் தேடிய செல்வம் அவருக்குப் பின் நல்ல முறையில் பயன்பட்டு வருவது அவர் சரியான முறையில் பொருள் ஈட்டி நல்வாழ்வு வாழ்ந்தார் என்பதைக் காட்டுகிறது.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது கோட்பாடு. ஆண்டுக்கொருமுறையாவது பள்ளி மாணக்கர்கள் பக்திபூர்வமாக வழிபாடு செய்ய ஆலயம் ஒன்றுக்குச் சென்று வருவது நல்லது. மாணக்கர்கள் அதில் பெரும் பயன் அடைவார்கள். வெட்ட வெளியைக் காண்பதும், பரந்த கடலைக் காண்பதும், உயர்ந்த மலையைக் காண்பதும் மனதுக்குப் பேருணர்வை ஊட்டுகின்றன என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார். இத்தகைய இயற்கைக் காட்சிகளை மாணக்கர் காண்பதும், ஆலய வழிபாடு செய்வதும் அவர்கள் உள்ளம் விரிவடைய உதவுகின்றன. உள்ளம் விரிவடைகின்ற அளவுதான் அவர்கள் ஞானத்திற்குத் தகுதி உடையவர்களாகின்றார்கள்.

சேவைசெய்வதன் மூலம் மக்களோடு இனிய

இணக்கம் வைத்துப் பழகுவதற்கும், வழிபாடு செய்வதன் மூலம் மனதிலுள்ள கீழ்மையை அகற்றுவதற்கும் மாணக்கர்கள் பயிற்சி பெறவேண்டும். கல்வி ஸ்தாபனம் ஒன்று மாணக்கர்கட்கு இப்பயிற்சி அளிக்கத் தவறக் கூடாது. ஆசிரியர்கள் சேவை மனப்பான்மையும் பக்தி உள்ளமும் கொண்டவர்களாக இருந்துவிட்டால் இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேறிவிடும். நல்லாசிரியர்களே ஒரு கல்வி ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்குக் காரணமாகிறார்கள். ஒரு கல்வி ஸ்தாபனத்தில் இத்தகைய நல்ல திட்டங்களும் அவற்றை நிறைவேற்றும் ஆசிரியர்களும் அமைந்துவிட்டால் அந்த ஸ்தாபனம் கல்வித்துறையில் சிறப்பாகப் பணியாற்ற முடியும். அதில் பயிற்சிபெறும் மாணவர்கள் பிற்காலத்தில் நல்ல குடிமக்களாக வாழ்வார்கள். வெறும் கட்டடங்களையும், சட்ட திட்டங்களையும் பெருக்குவதில் கல்வியின் தரம் உயர்ந்துவிடாது. நல்லாசிரியர்களையும், மனதைப் பண்படுத்தும் திட்டங்களையும் உருவாக்குவதில்தான் கல்வியின் தரம் உயரும். சேவை மனப்பான்மையும் தூய நோக்கமும் மாணக்கர்களிடையே வளர்ந்து வருமானல் அவர்கள் முறையான கல்வி கற்று வருபவர்கள் ஆவார்கள். மாணக்கர்கட்குச் சேவை மனப்பான்மையையும் தூய மனதையும் வளர்க்கும் கல்விஸ்தாபனங்கள் நாட்டில் பெருகிவருவன ஆகுக!

செய்திகள்

நிகழ்பவை :

டிசம்பர் மாதம் 16-ஆம் தேதி செவ்வாய்க்கிழமையன்று முற்பகல் திருச்சி உறையூரிலுள்ள கலைப்பள்ளியில் பாவை விழாவை முன்னிட்டு ஒரு மாதம் நிகழும் தொடர் சொற்பொழிவு விழாவுக்கு ஸ்ரீமத் துருவானந்த சுவாமிகள் தலைமை வகித்துத் துவக்கி வைப்பார்கள்.

டிசம்பர் மாதம் 18-ஆம் தேதி வியாழக்கிழமை வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டுக் குருகுல மாணவர்கள் உபவாசமிருந்து இருபத்துநான்கு மணிநேரம் அகண்ட நாம பஜனையும், ஸ்ரீமத் பகவத்கீதை முழுவதும் ஒருமுறை பாராயணமும் செய்வார்கள்.

டிசம்பர் மாதம் 25-ஆம் தேதி வியாழக்கிழமையன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுலப் பழையமாணவர்கள் சங்கம் தபோவனத்தில் கூடும். அன்று கிறிஸ்து ஜயந்தியை முன்னிட்டு இரவு 6-30 மணியிலிருந்து 7-30 மணி வரையிலும் ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுலமாணவர்களும், பழையமாணவர்களும் ஐக்கிய வணக்கம் செய்வார்கள்.

டிசம்பர் மாதம் 28-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று ஸ்ரீ சாரதாதேவியார் ஜயந்தியை முன்னிட்டுக் குருகுல மாணவர்கள் இருபத்துநான்கு மணி நேரம் அகண்ட நாம பஜனையும், நண்பகல் ஒரு மணிநேரம் ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

1981-ஆம் வருடம் ஜனவரி மாதம் 8 ஆம் தேதி வியாழக்கிழமையன்று பிற்பகல் 4-00 மணிக்குமேல் ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் பொங்கல் விடுமுறைக்காக அவரவர்கள் ஊருக்குப் புறப்படுவார்கள்.

ஜனவரி மாதம் 11ஆம் தேதி அன்று மாலை விருதுநகரில் நடக்கும் சக்திசங்க ஆண்டுவிழாவில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் கலந்துகொண்டு சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

ஜனவரிமாதம் 13ஆம் தேதி செவ்வாய்க்கிழமையன்று முற்பகல் திருச்சி உறையூர் கலைப்பள்ளியில் நிகழும் பாவை நிறைவு விழாவுக்கு ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் தலைமை வகித்துச் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

ஜனவரிமாதம் 28 ஆம் தேதி புதன்கிழமையன்று இராமநாதபுரம் ஸ்ரீ தாயுமானவர் தபோவனத்தில் இருபத்து நான்கு மணி நேரம் ஜபயக்ஞமும், 29 ஆம் தேதி வியாழக்கிழமையன்று ஸ்ரீ தாயுமானவ சுவாமிகோயில் கும்பாபிஷேகமும், குருபூஜை விழாவும், 30 ஆம்தேதி வெள்ளிக்கிழமையன்று தாயுமானவர் தபோவனத்தில் ஒருநாள் அந்தர்யோகமும் நிகழும். இவை சம்பந்தமான முழு விபரங்கள் தர்ம சக்கரம் தை மாத இதழில் வெளிவரும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை 13-ம் பதிப்பு பிரசார விலை	ரூ. 16-00
திருவாசகம் பிரசார விலை	... 14-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் ,,	... 6-00
கர்மயோக விளக்கம்	... 10-00
ஞானயோக விளக்கம்	... 8-00
ராஜயோக விளக்கம்	... 8-00
பக்தியோக விளக்கம்	... 6-00
பரமஹம்சரின் பெருமை	... 6-00
விவேகானந்த விவரணம்	... 4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	... 4-00
விவேகானந்த உபநிஷதம்	... 4-00
கடவுளின் வடிவங்கள்	... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	... 3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II	... 3-50
தினசரி தியானம் பிரசார விலை	... 3-25
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ ,,	... 3-00
அனுஷ்டான வேதாந்தம்	... 3-00
எதிர்கால இந்தியா	... 3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	... 3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	... 3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	... 2-00
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்	... 2-00
கண்ணன் என்னும் கடவுள்	... 2-00
தாயுமானவர் இயற்றிய	
கருணாகரக் கடவுள் விரிவுரை	... 3-50
பரிபூரணானந்தம் ஷை	... 3-00
சின்மயானந்த குரு ஷை	... 3-00
ஆனந்தமானபரம் ஷை	... 3-00
சுகவாரி ஷை	... 3-00
மௌனகுரு வணக்கம் ஷை	... 3-00
எங்கும்நிறைகின்றபொருள் ஷை	... 2-50
பரசிவ வணக்கம் ஷை	... 1-00
பஜனைப் பாடல்கள்	... 2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்)	... 1-50
விபீஷணன் சரணாகதி ஷை	... 1-50
பரமஹம்சர் பாமாலை	... 1-50
சந்நியாசி	... 1-25
குழந்தைகளின் களிக்கூடம்	... 1-00
சகோதரி நிவேதிதை	... 1-00
காயத்ரீ	... 1-00
வாலி மோட்சம் (நாடகம்)	... 1-00
தவப்புதல்வர்கள் (நாடகம்)	... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்)	... 1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்)	... 1-00
இராவண தத்துவம்	... 1-00

பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	ரூ 1-00
ப்ரஹ்லாதன் (நாடகம்)	... 1-00
மார்க்கண்டேயன் (நாடகம்)	... 1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	... 1-00
பாண்டவ கௌரவபெருமை (நாடகம்)	... 0-80
நன்மக்களைப் பெறுதல்	... 0-80
நோய்க்கு இடம் கொடேல்	... 0-80
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	... 0-75
*ஆத்ம சக்தி	... 0-75
*சக்தி தத்துவம்	... 0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்	... 0-60
*ஆலய வழிபாடு	... 0-60
*சூரிய நாராயணன்	... 0-50
*முருகக் கடவுள்	... 0-50
*விஷ்ணு தத்துவம்	... 0-50
தெய்வீக மகிமைகள்	... 0-50
சைவன் யார்?	... 0-50
கர்மகாண்டம்எது?ஞானகாண்டம்எது?	0-50
*கணபதி	... 0-40
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	... 0-40
வர்ணாச்ரம தர்மம்	... 0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	... 0-30
The Bhagavad Gita (10th Imp.)	...20-00
Sri Lalitambika Sahasranama Stotram	...10-00
The Indian National Education	... 8-00
Ramakrishna Lives Vedanta	... 8-00
Facets of Brahman or The Hindu Gods	... 5-00
Daily Divine Digest (DELUXE)	... 4-50
Daily Divine Digest (Ordinary)	... 2-50
Mahabharata (with plastic cover)	... 4-00
Ramayana (do)	... 4-00
The man Making Message of Vivekananda (with Plastic cover)	... 4-00
Sri Vishnu Sahasranama Stotram	... 4-00
The Bahagavad Gita (Small Size)	... 4-00
Siva Sahasranama Stotram	... 3-50
Bheeshma The Superman	... 3-50
Hinduism Hosts Christianity	... 3-00
Holy Bible—In the Light of Vedanta	... 1-50
*Introducing the Gita	... 1-50
The Garland of Paraaparam	... 1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	... 1-00
*Key to Higher Life	... 0-75
*The Teacher	... 0-60

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதை, திருவாசகத்திற்கு ரூ. 3-25ம் மஞ்ஜரிக்கு ரூ. 1-40ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரையும் சேர்த்து அனுப்புங்கள்.

*இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

இராமாயணம்

(வால்மீகியைத் தழுவியது)

தமிழில் இயற்றியவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

மக்கள் அனைவர் உள்ளத்திலும் பண்பாட்டை வளர்க்கும் முயற்சியில் இராமாயணம் முக்கிய இடம் பெற்றுவருகிறது. இராமாயணத்தின் மகிமை அற்புதமானது. இராமாயணத்தில் அமைந்துள்ள பாத்திரங்கள் மனிதனுடைய அகவுலக வாழ்வில் அமைந்துள்ள தத்துவங்களுக்கு விளக்கங்களாக அமைந்திருக்கிறார்கள்.

இராமாயணத்தில் வரும் சீதை புனிதத்திற்கும் பெண்மைக்கும் உறைவிடம். துயரத்தை அமைதியுடன் சகித்துக்கொள்ளுதல் வாயிலாக அவள் அதை வென்றாள். பெண்ணின் பண்புக்கு முடிந்த குறிக்கோளாக சீதை இலங்குகின்றாள். இராமபாணம் வலிவுக்கும் நேர்மைக்கும் சின்னமாகிறது. அது ஒரு போதும் வீண் போவதில்லை. அறநெறி காப்பவனுக்கு வாழ்க்கையில் சோதனைகள் அதிகம். அவைகளை முறையாகச் சமாளிப்பவன் வாழ்க்கையில் வெற்றியடைகிறான். இதுவே இராமாயணம் புகட்டும் பாடம்.

கிரௌன் சைஸ், 344 பக்கங்கள் பிரசார விலை ரூ 5-00 (தபால் செலவு ரூ. 1-30)

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

தர்ம சக்கரம் தங்களுக்கு ஒரு பயனுடைய நூலாக இருக்கும் என நம்புகிறோம். வரும் தை மாதம் தர்ம சக்கரத்திற்கு 30வது ஆண்டு துவங்குகிறது. தை மாதம் முதல் சந்தா புதுப்பிக்க வேண்டியவர்கள் தங்கள் சந்தா தொகையை M. O. மூலம் அனுப்பித் தந்து புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம். பேப்பர் விலை கூடிய போதிலும் ஆத்மீகத்தைப் பரப்புதல் பொருட்டு சந்தா தொகை உயர்த்தப்படவில்லை. சந்தா தொகை அனுப்பும்போது தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட வேண்டுகிறோம்.

தர்ம சக்கரம் டிபாஸிட் சந்தாவிற்கு ரூ. 100-00ஐ அனுப்பித் தந்து டிபாஸிட் சந்தாதாரராகச் சேர்ந்துகொள்ளக் கோருகிறோம். டிபாஸிட் தொகை எங்களிடம் இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கர இதழ் வந்துகொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்க வேண்டியதில்லை. இதழ் வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூ. 100ஐ திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

சந்தாதாரர்கள் தர்ம சக்கரத்தை தாங்களும் நன்கு படித்துப் பயனடைவதுடன் மற்றவர்களுக்கும் படிக்கத் தந்து உதவுங்கள். புதிய அன்பர்களைச் சந்தாதாரர்களாகச் சேர்த்து அவர்களும் பயனடையச் செய்யக் கோருகிறோம். இங்ஙனம் தபோவனத்தின் ஞான யக்ஞத்தில் தங்கள் பங்கைச் செய்யக் கேட்டுக்கொள்கிறோம்.

காரியதரிசி

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639115 :: திருச்சி ஜில்லா

Edited by SWAMI NITHYANANDA,

Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.